NITHRA®

தமிழ்

எழுத்தாளர்களின்

வரலாறு

அறிந்து கொள்வோம்

PDF வடிவில்..!!

www.nithrabooks.com | books@nithra.mobi | Cell: 98659 24040

Copyright is reserved to the publisher, therefore the person who will try to imitate or try to print this book illegally or without the prior written permission of this publisher in any form, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

இந்தப் புத்தகத்தைப் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி
மறுபதிப்பு செய்வதோ, அச்சேற்றுவதோ, நகல் எடுப்பதோ
கூடாது. மீறினால் காப்பிரைட் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

நூலின் பெயர் : **தமிழ் எழுத்தாளர்களின் வரலாறு**

பக்கங்கள் : 156

விலை : ரூ. 100

பதிப்பு : 2020

உரிமை : பதிப்பகத்தாருக்கே

In the compilation of this book all possible precautions have been taken to ensure that the informations provided is correct. Yet the publisher / authors will nto be held responsible for any printing errors or damage resulting from any inadvertent omission or inaccuracies in this book. However suggestions for the improvement of this book (Including printing errors, ommissions, etc. if any) are welcome and these will be incorporated in the subsequent editions of this book.

Published by : **P. Gokulanathan, Nithra Publications,** AV Plaza 3rd & 4th Floor, South Car Street, Tiruchengode - 637211.

எண்	தமிழ் எழுத்தாளர்களின் பெயர்கள்	பக்கம் எண்
1	எழுத்தாளர் தேவதேவன்	5 - 7
2	எழுத்தாளர் நாஞ்சில் நாடன்	7 - 10
3	எழுத்தாளர் பிரபஞ்சன்	10 -12
4	எழுத்தாளர் ஜோ டி குருஸ்	13 - 15
5	எழுத்தாளர் ஜெயமோகன்	15 - 21
6	எழுத்தாளர் பூமணி	21 - 23
7	எழுத்தாளர் தாமரைக்கண்ணன்	23 - 26
8	எழுத்தாளர் தி. ஜானகிராமன்	27 - 31
9	எழுத்தாளர் கி. ராஜநாராயணன்	31 – 33
10	எழுத்தாளர் சா. கந்தசாமி	33 - 36
11	எழுத்தாளர் சாரு நிவேதிதா	36 - 38
12	எழுத்தாளர் சிவசங்கரி	38 - 41
13	எழுத்தாளர் சுந்தர ராமசாமி	41 - 45
14	எழுத்தாளர் சுபா	45 - 46
15	எழுத்தாளர் சுஜாதா	46 - 49
16	எழுத்தாளர் தமிழ்மகன்	49 - 53
17	எழுத்தாளர் தாமரை கவிஞர்	53 - 55
18	எழுத்தாளர் கழனியூரன்	55 - 57

19	எழுத்தாளர் கல்கி	57 - 61
20	எழுத்தாளர் க. பூரணச்சந்திரன்	61 - 64
21	எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன்	64 - 68
22	எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி	68 - 71
23	எழுத்தாளர் ஆதவன்	71 -72
24	எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்சினி	72 - 74
25	எழுத்தாளர் அரவிந்தன் நீலகண்டன்	74 - 76
26	எழுத்தாளர் அம்பை	76 - 78
27	எழுத்தாளர் அசோகமித்திரன்	78 - 80
28	எழுத்தாளர் அ. முத்துலிங்கம்	81 - 83
29	எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன்	83 - 85
30	எழுத்தாளர் தி.பரமேசுவரி	86 - 87
31	எழுத்தாளர் லீனா மணிமேகலை	87 - 88
32	எழுத்தாளர் ரஜினி பெத்துராஜா	88 - 89
33	எழுத்தாளர் சு. தமிழ்ச்செல்வி	89 -91
34	எழுத்தாளர் ஜெயந்தி சங்கர்	91 - 93
35	எழுத்தாளர் மதுமிதா	93 - 95
36	எழுத்தாளர் சே. கல்பனா	95 - 96
37	எழுத்தாளர் தாட்சாயணி	96 - 97
38	எழுத்தாளர் சித்தி ஜுனைதா பேகம்	98 - 99

39	எழுத்தாளர் பாமா	100 - 101
40	எழுத்தாளர் வேதா.இலங்காதிலகம்	101 - 103
41	நளாயினி தாமரைச்செல்வன்	103 - 104
42	எழுத்தாளர் லட்சுமி	104 - 106
43	எழுத்தாளர் ராஜேஷ் குமார்	107 - 109
44	எழுத்தாளர் பாவண்ணன்	109 - 111
45	எழுத்தாளர் ரா. கி. ரங்கராஜன்	112 - 114
46	எழுத்தாளர் செந்தலை ந. கவுதமன்	114 - 115
47	எழுத்தாளர் ரமணி சந்திரன்	116 - 117
48	எழுத்தாளர் சல்மா	118 - 120
49	எழுத்தாளர் சந்திரா இரவீந்திரன்	120 - 122
50	எழுத்தாளர் சந்திரவதனா	122 - 124
51	எழுத்தாளர் பாலகுமாரன்	124 - 126
52	எழுத்தாளர் குட்டி ரேவதி	126 - 128
53	எழுத்தாளர் கிருத்திகா	129 - 131
54	எழுத்தாளர் உமா மகேஸ்வரி	131 - 133
55	எழுத்தாளர் பகீரதி	133 - 135
56	எழுத்தாளர் பெருஞ்சித்திரனார்	135 - 138
57	எழுத்தாளர் ஜெயகாந்தன்	138 - 139
58	எழுத்தாளர் அகிலன் வரலாறு	140 - 145

59	எழுத்தாளர் சி.எஸ்.செல்லப்பா	145 - 146
60	எழுத்தாளர் தொ. மு. சிதம்பர ரகுநாதன்	147 - 148
61	எழுத்தாளர் வண்ணதாசன்	149 - 150
62	எழுத்தாளர் மீ. ப. சோமசுந்தரம்	150 - 152
63	எழுத்தாளர் சுரதா	152 - 154
64	எழுத்தாளர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்	155 - 156

1. எழுத்தாளர் தேவதேவன்

பிறப்பு : மே 5, 1948

பிறந்த ஊர் : இராஜகோவில், விருதுநகர் மாவட்டம்

தேவதேவன் என்ற புனைப்பெயரால் அறியப்பட்ட பிச்சுமணி கைவல்யம் ஒரு நவீனத் தமிழ் கவிஞர் ஆவார். பிச்சுமணி கைவல்யம் என்ற பெயரில் கதைகளையும் எழுதி வருகின்றார். இவர் எழுதிய தேவதேவன் கவிதைகள் எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2005 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதுக்கவிதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

வாழ்க்கைச் சுருக்கம் :

கைவல்யம் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இராஜகோவில் என்ற ஊரில் மே 5, 1948 ஆம் ஆண்டு பிச்சுமணி தம்பதியினருக்குப் பிறந்தார். ஈ.வெ.ராமசாமி இவருக்குக் கைவல்யம் என்ற பெயரை இட்டார். தந்தையுடன் 19 அகவையில் தூத்துக்குடிக்கு பிழைப்புத் தேடி வந்த கைவல்யம் இன்றளவும் அங்கேயே தங்கியிருக்கிறார். பள்ளிப்படிப்பை முடித்தபின் கைவல்யம் ஒரு சிறு அச்சகம் ஒன்றை நடத்தி வந்தார். பின்னர் ஆசிரியர் படிப்பு முடித்து தூத்துக்குடியிலேயே ஆசிரியரானார். நகராட்சிப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றினார். 2002 ஆம் ஆண்டு ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுப் பெற்றார். இவரது மனைவி சாந்தி, மகள் அமர்த்தா பிரீதம், மகன் அரவிந்தன் ஆவர்.

எழுத்துலகம் :

இளம்வயதில் மரபுக்கவிதைகள் எழுதிவந்த கைவல்யம் தோரோ, எமர்சன் ஆகியோரின் படைப்புகளால் கவரப்பட்டு நவீனக் கவிதைகளைப் புனையத் தொடங்கினார். குறுகிய காலம் கேரளத்தில் வாழ்ந்தபோது அங்கிருந்த இயற்கைக் காட்சிகளினால் ஆழமான மனநகர்வுக்கு உள்ளாகி நிறைய கவிதைகள் எழுதினார். இக்கால கட்டத்தில் அவர் சுந்தர ராமசாமி தன் வீட்டு மாடியில் நடத்திவந்த காகங்கள் என்ற இலக்கிய உரையாடல் அமைப்பில் நெடுந்தொலைவுப் பயணம் செய்து வந்து கலந்து கொண்டார். கைவல்யத்தின் முதல்கவிதைத் தொகுப்பு குளித்துக் கரையேறாத கோபியர்கள் 1982 ஆம் ஆண்டு வெளிவந்தது. இரண்டாவது தொகுப்பு மின்னற்பொழுதே தூரம் பிரமில் முன்னுரையுடன் வெளிவந்து கவிதை வாசகர்களால் கவனிக்கப்பட்டது. தொடர்ந்து மாற்றப்படாத வீடு பிரமிள் முன்னுரையுடன் வெளிவந்தது. பெரும்பாலான கவிதைகளை தன் நண்பர்களான முத்துப்பாண்டி, லெனா குமார், காஞ்சனை சீனிவாசன் ஆகியோரின் உதவியுடன் அவரே வெளியிட்டு வந்தார். பின்னர் அவரது கவிதைகளைத் தமிழினி பதிப்பகம் வெளியிட தொடங்கியது. 2005 ஆம் ஆண்டு அவரது கவிதைகளுக்கான முழுத்தொகுப்பு தேவதேவன் கவிதைகள் என்ற பெயருடன் தமிழினி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. தேவதேவன் கவிதைபற்றி என்ற உரையாடல் நூலையும் அலிபாபவும் மோர்ஜியானாவும் என்ற நாடக நூலையும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

விருதுகளும் திறனாய்வுகளும் :

- திருப்பூர் தமிழ்ச்சங்க விருது
- லில்லி தேவசிகாமணி விருது

- தேவமகள் அறக்கட்டளை விருது
- தமிழக அரசின் தமிழ்வளர்ச்சிக்கழக விருது
- விளக்கு விருது
- தூத்துக்குடி சாராள்-ராஜபாண்டியன் வாழ்நாள் இலக்கிய சாதனை விருது

கவிதை நடை :

தேவதேவன் கவிதைகள் எளிய மொழிநடையைக் கொண்டவை. இயற்கைசார்ந்த படிமங்களை உள்ளடக்கிய தத்துவ நோக்குடன் சொல்பவை. அவரது சிறந்த கவிதைகளில் மென்மையான இசை ஒழுங்கு காணப்படும். நவீன வாழ்க்கையின் அழகின்மையையும் இலக்கின்மையையும் விமர்சிக்கும் தேவதேவன் இயற்கையின் பேரழகையும் அதன் சாரமான கருணையையும் மீண்டும் மீண்டும் முன்வைக்கிறார்.

2. எழுத்தாளர் நாஞ்சில் நாடன்

பிறப்பு : டிசம்பர் 31, 1947

இயற்பெயர் : க. சுப்பிரமணியம்

வீர நாராயண மங்கலம் கன்னியாகுமரி மாவட்டம் நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கியப் படைப்பாளர்களில் ஒருவர். இவரது இயற்பெயர் க. சுப்பிரமணியம். இவரது புனைப்பெயர் நாஞ்சில் நாடன். துணைவியார் பெயர் சந்தியா சுப்பிரமணியம். வேலையின் காரணமாகப் பல ஆண்டுகள் மும்பையில் வாழ்ந்தார். தற்போது கோயம்புத்தூரில் வாழ்ந்து வருகிறார். நாஞ்சில்நாடன்

நகைச்சுவையும் சமூகவிமர்சனமும் இழையோடும் படைப்புகளுக்காக புகழ்பெற்றவர். தமிழ் மரபு இலக்கியத்தில் உள்ள தேர்ச்சி இவரது படைப்புகளில் வெளிப்படும். கம்பராமாயணத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவர். தெய்வங்கள், ஓநாய்கள், ஆடுகள் என்ற சிறுகதைத்தொகுதி மூலம் புகழ்பெற்றார். தலைகீழ்விகிதங்கள் இவரது முதல் நாவல். இவரின் மிக முக்கியமான அடையாளம் நாஞ்சில் நாட்டு வட்டார வழக்கிலான எழுத்துநடை. தலைகீழ் விகிதங்கள் நாவலை இயக்குநர் தங்கர்பச்சன், சொல்ல மறந்த கதை என்ற பெயரில் திரைப்படமாக்கி இருக்கிறார்.

பெருமைகளும் விருதுகளும் :

- 2010 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது இவரது சூடிய பூ சூடற்க என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு வழங்கப்பட்டது.

- கனடாவின் இலக்கியத்தோட்டத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான இயல்விருது தொராண்டோவில் இவருக்கு அளிக்கப்பட்டது.

படைப்புகள் :

- தலைகீழ் விகிதங்கள்
- என்பிலதனை வெயில்காயும்
- மாமிசப்படைப்பு
- மிதவை
- சதுரங்க குதிரை
- எட்டுத் திக்கும் மதயானை

சிறுகதை தொகுதிகள் :

- தெய்வங்கள் ஆடுகள் ஓநாய்கள்
- வாக்குப்பொறுக்கிகள்
- உப்பு
- பேய்க்கொட்டு
- பிராந்து
- நாஞ்சில் நாடன் கதைகள்
- சூடிய பூ சூடற்க
- முத்துக்கள் பத்து
- கான் சாகிப்
- கொங்குதேர் வாழ்க்கை

கவிதை :

- மண்ணுள்ளிப் பாம்பு
- பச்சை நாயகி
- வழுக்குப்பாறை
- புளிக்கும் ஆப்பழம்

கட்டுரைகள் :

- நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் வாழ்க்கை
- நஞ்சென்றும் அமுதென்றும் ஒன்று

- நதியின்பிழையன்று நறும்புனல் இன்மை
- தீதும் நன்றும்
- திகம்பரம்
- காவலன் காவான் எனின்
- அம்பறாத்தூணி
- அகம் சுருக்கேல்
- எப்படிப் பாடுவேனோ?
- கைம்மண் அளவு

3. எழுத்தாளர் பிரபஞ்சன்

பிறப்பு : ஏப்ரல் 27, 1945

இயற்பெயர் : சாரங்கபாணி வைத்தியலிங்கம்

இறப்பு : டிசம்பர் 21, 2018

வாழ்க்கைக் குறிப்பு :

பிரபஞ்சன் பிறந்த ஊர் புதுச்சேரி. இவரது இயற்பெயர் சாரங்கபாணி வைத்தியலிங்கம். இவரது தந்தை ஒரு கள்ளுக்கடை வைத்திருந்தார். புதுச்சேரியில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கரந்தை கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றார். தஞ்சாவூரில் ஆசிரியராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். குமுதம் ஆனந்த விகடன் மற்றும் குங்குமம் ஆகிய வார இதழ்களில் பணிபுரிந்து உள்ளார். 1961ல், இவரது முதல் சிறுகதை என்ன உலகமடா பரணி என்ற இதழில் வெளியானது. இவர் சுயமரியாதை

இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். இதுவரை 46 புத்தகங்களுக்கும் கூடுதலாக எழுதியுள்ளார்.

1995ல் இவரது வரலாற்றுப் புதினம் வானம் வசப்படும் தமிழுக்கான சாகித்ய அகாதமி விருது பெற்றது. இப்புதினம் ஆனந்தரங்கபம் பிள்ளையின் காலத்தைக் களமாகக் கொண்டுள்ளது. இவரது படைப்புகள் இந்தி, தெலுங்கு, கன்னடம், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் மற்றும் சுவீடிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது நாடகமான முட்டை தில்லிப் பல்கழைக்கழக பாடத்திட்டத்திலுள்ளது. இவரது சிறுகதைத் தொகுப்பான நேற்று மனிதர்கள் பல கல்லூரிகளில் பாடப்புத்தகமாக உள்ளது. இவரது மனைவியின் பெயர் பிரமிளா ராணி. மூன்று மகன்கள் உள்ளனர். இவர் சென்னையிலும் புதுச்சேரியிலும் வசித்து வந்தார்.

விருதுகள் :

- சாகித்ய அகாதமி விருது
- பாரதிய பாஷா பரிஷத் விருது
- கோயம்புத்தூர் கஸ்தூரி ரங்கம்மாள் விருது
- இலக்கியச் சிந்தனை விருது
- சி. பா. ஆதித்தனார் விருது
- தமிழக அரசின் பரிசு
- தமிழக சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்கான பரிசு

புதினங்கள் :

- வானம் வசப்படும்
- மகாநதி
- மானுடம் வெல்லும்
- சந்தியா
- காகித மனிதர்கள்
- கண்ணீரால் காப்போம்
- பெண்மை வெல்க
- பதவி
- ஏரோடு தமிழர் உயிரோடு
- அப்பாவின் வேஷ்டி
- முதல் மழை துளி

சிறுகதைத் தொகுப்புகள் :

- நேற்று மனிதர்கள்
- விட்டு விடுதலையாகி
- இருட்டு வாசல்
- ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்

4. எழுத்தாளர் ஜோ டி குருஸ்

பிறப்பு : 17 மே, 1963

பிறந்த ஊர் : உவரி, திருநெல்வேலி மாவட்டம்

வாழ்க்கை வரலாறு :

தமிழ் நெய்தல்குடிகளின் வாழ்வை இலக்கியத்தில் பதிவு செய்த குறிப்பிடத்தக்க எழுத்தாளர் ஆவார். திருநெல்வேலி மாவட்டம் கடற்கரை கிராமமான உவரியில் பிறந்தவர். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சரக்குக் கப்பல் நிறுவனங்களில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தலைமைப் பொறுப்பில் பணியாற்றியவர். தற்போது சென்னை இராயபுரத்தில் வணிகக் கப்பல்களுக்கான ஆலோசனை நிறுவனம் ஒன்றையும் நடத்திவருகிறார். இவரது இரு புதினங்களும் மீன்பிடி தொழில் புரியும் பரதவர் வாழ்க்கையைக் களமாகக் கொண்டவை. இவர் திருநெல்வேலி புனித சவேரியார் பள்ளியில் உயர்கல்வியை முடித்தார். இடையன்குடி கால்டுவெல் மேல்நிலைப் பள்ளியில் விஞ்ஞான பாடம் படித்த இவர், சென்னை லயோலா கல்லூரியில் பொருளாதாரத்தில் முதுகலையும், திருச்சி வளனார் கல்லூரியில் ஆய்வறிஞர் பட்டமும் பெற்றவர்.

ஜோ டி குருஸ் வாங்கிய விருதுகள் :

- கொற்கை என்ற புதினத்திற்காக 2013ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது
- ஆழி சூழ் உலகு எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த

நூல்களில் புதினம் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

- கனடா இலக்கியத் தோட்ட விருது
- சுஜாதா-உயிர்மை விருது
- லூர்தம்மாள் சைமன் இலக்கிய விருது
- லயோலா இலக்கிய விருது
- இலக்கிய வீதி அன்னம் விருது
- உஸ்தாத் பிஸ்மில்லாகான் விருது
- திருவள்ளுவர் இலக்கிய விருது

ஜோ டி குருஸ் படைப்புகள் :

இவர் சிறந்த புதின, சிறுகதை எழுத்தாளர், இலக்கியத் திறனாய்வாளர், கட்டுரையாளர் மற்றும் திரைப்படத்துக்கு வசனமும் எழுதியுள்ளார். இவரது படைப்பில் ஆழி சூழ் உலகு குறிப்பிடத்தக்கப் படைப்புகளில் ஒன்றாகும்.

- புலம்பல்கள் (கவிதை)
- ஆழி சூழ் உலகு (நாவல்)
- விடியாத பொழுதுகள் (ஆவணப்படம்)
- கொற்கை (நாவல்)
- TOWARDS DAWN (ஆவணப்படம்)
- எனது சனமே (ஆவணப்படம்)
- அஸ்தினாபுரம் (நாவல்)

- வேர்பிடித்த விளைநிலங்கள் (தன்வரலாறு)
- இணையம் துறைமுகம் (ஆவணப்படம்)
- கவனம் ஈர்க்கும் கடலோரம் (கட்டுரைகள்)

5. எழுத்தாளர் ஜெயமோகன்

பிறப்பு : 22 ஏப்ரல், 962

பிறந்த ஊர் : திருவட்டாறு, விளவங்கோடு வட்டம், குமரி மாவட்டம்.

வாழ்க்கை வரலாறு :

ஜெயமோகன், தமிழகத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவர் ஆவார். மிகப் பரவலான கவனத்தை ஈர்த்த புதினங்களை எழுதியுள்ளார். இவரது புனைவுகளில் மனித மனதின் அசாதாரணமான ஆழங்களும் நுட்பங்களும் வெளிப்படும்.

பெற்றோர் :

ஜெயமோகனின் தந்தை பெயர் எஸ்.பாகுலேயன் பிள்ளை. தாத்தா பெயர் வயக்கவீட்டு சங்கரப்பிள்ளை. பூர்வீக ஊர் குமரி மாவட்டம் விளவங்கோடு வட்டம், திருவரம்பு. இவருடைய தாத்தா அடிமுறை ஆசான். ஆகவே சங்கு ஆசான் என அழைக்கப்பட்டிருக்கிறார். அம்மா பி. விசாலாட்சி.

இளமைப்பருவம் :

ஜெயமோகன் 1962 ஏப்ரல் 22 ஆம் தேதி மலையாள நாயர் குடும்பத்தில் பிறந்தார். இவர் சிறு வயதில் பத்மநாபபுரத்திலும் கன்னியாகுமரி அருகே கொட்டாரம் ஊரிலும், பின்னர், முழுக்கோடுவிலும் தொடக்கப்பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். பின்னர் பதினொன்றாம் வகுப்பு வரை அருமனை நெடியசாலை அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்தார். 1978-ல் பள்ளிப்படிப்பு முடித்து, முழுக்காட்டில் இருந்தபொழுது மலையாளப் புதினங்களுக்கு அறிமுகம் ஆனார். பின்னர் 1980ல் நாகர்கோயில் பயோனியர் குமாரசாமிக் கல்லூரியில் வணிகவியல் இளங்கலை படிப்பில் சேர்ந்தார். ஆனால் 1982-ல் கல்லூரிப் படிப்பை முடிக்காமல் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். இவருடைய நெருங்கிய நண்பர் ராதாகிருஷ்ணன் என்பவரின் தற்கொலையால் மன அமைதி இழந்தார். இருவருடங்கள் பலவாறாக அலைந்தும், திருவண்ணாமலை, பழனி, காசி ஆகிய ஊர்களில் இருந்தும், பல சிறு சிறு வேலைகளை செய்தும் வாழ்க்கை நடத்தியுள்ளார்.

1984-ல் கேரளத்தில் காசர்கோடு தொலைபேசி நிலையத்தில் தற்காலிக ஊழியராக வேலைக்குச் சேர்ந்தார். அப்பொழுது தொழிற்சங்கத்தின் பெரிய கம்யூனில் தங்கியிருந்தார். அச்சமயம் இடதுசாரி இயக்கங்களின் மீது ஆர்வமும் அவற்றிற்கு பங்களிக்கவும் வாய்ப்புகள் ஏற்பட்டது. அங்கிருந்த நூலகங்களில் தொடர்ச்சியாக வாசிக்க ஆரம்பித்த இவர், இலக்கிய, கோட்பாட்டு விவாதங்களில் ஈடுபடும் பக்குவம் பெற்றார். இக்காலகட்டத்தில் இவருடைய பெற்றோரின் தற்கொலையால் மிகவும் நிம்மதியிழந்து தீவிரமாக அலைச்சலுக்கு ஆளானார்.

இவர் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டில் அருண்மொழி நங்கை என்னும் வாசகியை காதலித்துத் திருமணம் செய்துகொண்டார்.

இரண்டு குழந்தைகள், ஒரு ஆண், ஒரு பெண். ஜெயமோகன் 2010 வரை பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்லில் பணியாற்றினார். இப்பொழுது நாகர்கோயிலில் வசிக்கிறார்.

எழுத்துலக அறிமுகம் :

அம்மா விசாலாட்சி அவர்களுக்கு தன்னை எழுத்தாளன் ஆக்கிப்பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது என்கிறார் ஜெயமோகன். இலக்கிய வாசகியான அவர் மூலம் வாசிப்பு ஆர்வம் பெற்ற இவர், 12 வயது முதலே ரத்னபாலா போன்ற பத்திரிக்கைகளில் எழுத துவங்கினார்.

1985ல் எழுத்தாளர் சுந்தர ராமசாமி அறிமுகமானார். அவர் ஜெயமோகனை இலக்கியம் எழுத ஊக்கமூட்டினார். கைதி என்ற கவிதை 1987ல் கட்டைக்காடு ராஜகோபாலன் நடத்திவந்த கொல்லிப்பாவை இதழில் வெளிவந்தது. 1987 ல் கணையாழியில் நதி அசோகமித்திரனின் சிறு குறிப்புடன் வெளியாயிற்று. அது இவருடைய எழுத்துக்கு ஒரு தொடக்கமாக அமைந்தது.

1988ல் எழுதிய ரப்பர் என்னும் புதினத்தை 1990ல் அகிலன் நினைவுப்போட்டிக்காக சுருக்கி அனுப்பி, அதற்கான விருதைப் பெற்றார். தாகம் என்னும் தலைப்பில் தமிழ் புத்தகாலயம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

1998 முதல் 2004 வரை சொல்புதிது என்ற சிற்றிதழை நண்பர்களுடன் இணைந்து நடத்தினார்.
நாராயணகுருவின் மரபில் வந்த குரு நித்ய சைதன்ய யதியுடனான தொடர்பு மூலம் ஆன்மீகம் மீது ஈடுபாடு அடைந்தார். மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மாவை தன் ஆசிரியராகவும் முன்னோடியாகவும் குறிப்பிடுகிறார்.

ஜெயமோகன் மலையாளத்திலும் எழுதுகிறார். மாத்ருபூமி, பாஷாபோஷினி இதழ்களில் இவர் எழுதிய கட்டுரைகள் கரன்ட் புக்ஸ் பதிப்பாக நெடும்பாதையோரம் என்ற பேரில் வெளியாகியுள்ளன.

தமிழில் நூறுநாற்காலிகள் என்ற பெயரில் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பு நூறு சிம்ஹாசனங்கள் என்ற பெயரில் மலையாளத்தில் வெளிவந்துள்ளது

திரைப்படங்கள் :

திரைப்படத்துறையிலும் பணியாற்றி வருகிறார். தமிழ் மற்றும் மலையாளத் திரைப்படங்களுக்கு திரைக்கதை எழுதியுள்ளார். 2006இல் வெளிவந்த கஸ்தூரிமான் இவர் திரைக்கதை எழுதிய முதல் படம்.

- கஸ்தூரிமான்
- நான் கடவுள்
- அங்காடித்தெரு
- நீர்ப்பறவை
- ஒழிமுறி
- கடல்
- ஆறு மெழுகுவர்த்திகள்
- காஞ்சி
- காவியத்தலைவன்
- நாக்குபெண்டா நாக்கு டாக்கு

- ஒன் பை டூ
- பாபநாசம்
- சர்க்கார்
- எந்திரன் 2.0
- இந்தியன் 2

விருதுகள் :

- 1990 ஆண்டு அகிலன் நினைவுப்போட்டியில் பரிசு பெற்றார்.
- 1992 ஆம் ஆண்டுக்கான கதா விருதைப் பெற்றார்.
- 1994 ஆம் ஆண்டுக்கான சமஸ்கிருதி சம்மான் தேசியவிருது பெற்றுள்ளார்.
- 2008 ஆம் ஆண்டு பாவலர் விருது பெற்றார்.
- 2010 ஆம் ஆண்டு முதல் இவரது படைப்பான விஷ்ணுபுரம் பெயரால் விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் விருது ஒன்றை பெற்றார்.
- 2011 ஆம் ஆண்டு அறம் சிறுகதைத் தொகுதிக்காக முகம் விருது பெற்றார்.
- 2012 சிறந்ததிரைக்கதைக்கான கேரளா ஃபிலிம் கிரிட்டிக்ஸ் விருது ஒழிமுறி

- 2012 சிறந்த திரைக்கதைக்கான டீ ஏ ஷாஹித் விருது ஒழிமுறி
- 2014 கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கிய இயல் விருது

புதினங்கள் :

- ரப்பர்
- விஷ்ணுபுரம்
- பின் தொடரும் நிழலின் குரல்
- பனிமனிதன் - சிறுவர் புதினம்
- கன்னியாகுமரி
- கொற்றவை
- காடு
- ஏழாம் உலகம்
- அனல்காற்று
- இரவு
- உலோகம்
- கன்னிநிலம்
- வெள்ளையானை
- மகாபாரதத்தின் தமிழ் நாவல் வடிவம் வெண்முரசு

சிறுகதை நூல்கள் :

- மண்
- ஆயிரங்கால் மண்டபம்
- திசைகளின் நடுவே
- கூந்தல்
- ஜெயமோகன் சிறுகதைகள்
- ஜெயமோகன் குறுநாவல்கள்
- பேய்க்கதைகளும் தேவதைக் கதைகளும்
- ஊமைச்செந்நாய்
- அறம்
- வெண்கடல்
- ஈராறுகால்கொண்டெழும்புரவி

6. எழுத்தாளர் பூமணி

பிறப்பு : 1947

இயற்பெயர் : பூ. மாணிக்கவாசகம்

பெற்றோர் : தந்தை பூலித்துரை, தாய் தேனம்மை

பிறந்த ஊர் : ஆண்டிபட்டி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்

வாழ்க்கைக் குறிப்புகள் :

இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி அருகே உள்ள ஆண்டிபட்டி எனும் ஊரில் பூலித்துரை - தேனம்மை தம்பதிக்கு மகனாய் பிறந்தார். இவர், தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளாராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் எழுதிய அஞ்ஞாடி என்ற நாவலுக்கு 2014 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது.

இலக்கியப் பணி :

கரிசல் வட்டாரத்து வாழ்க்கையின் நுட்பங்களைத் தனது எழுத்தில் வெளிப்படுத்திய எழுத்தாளர். இவருடைய கல்லூரிக் காலத்தில் இவருக்கு விமர்சகர் சி. கனகசபாபதி ஆசிரியராக இருந்தார். எழுத்தாளர் கி.ராஜநாராயணன் பூமணியை சிறுகதைகள் எழுத ஊக்குவித்தார். 1971இல் பூமணியின் முதல் சிறுகதை அறுப்பு தாமரை இதழில் வெளிவந்தது. அதன் பிறகு தாமரை ஆசிரியராக இருந்த தி. க. சிவசங்கரன் பூமணியை ஊக்குவித்தார்.

புதினங்கள் :

- வெக்கை
- நைவேத்தியம்
- வரப்புகள்
- வாய்க்கால்
- பிறகு
- அஞ்ஞாடி

திரைப்படம் :

- கருவேலம்பூக்கள்
- வெக்கை அசுரன்

விருதுகள் :

- இலக்கியச் சிந்தனை பரிசு
- அக்னி விருது
- திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க விருது
- இலக்கியத்துக்கான பங்களிப்புக்காக 2011-க்கான விஷ்ணுபுரம் விருது
- அஞ்ஞாடி புதினத்திற்கு 2014-இல் சாகித்ய அகாதமி விருது

7. எழுத்தாளர் தாமரைக்கண்ணன்

பிறப்பு : ஜூலை 1, 1934

இறப்பு : ஜனவரி 19, 2011

இயற்பெயர் : வீ. இராசமாணிக்கம்

பிறந்த ஊர் : ஆட்சிப்பாக்கம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்

பெற்றோர் : வீராச்சாமி, பாஞ்சாலி

வாழ்க்கை வரலாறு :

ஒரு தமிழக எழுத்தாளர், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், நூல் மதிப்புரையாளர், பட்டிமன்ற பேச்சாளர் மற்றும் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியரும் ஆவார். இவர் எழில், அன்பெழிலன், கண்ணன், யாரோ, அம்சா, ஜனநாதன், பாஞ்சாலி மகன், அச்சிறுக்கத்தார், அகரத்தான் போன்ற புனைப் பெயர்களில் அழைத்து வந்தனர். இவரது தந்தை ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

தாமரைக்கண்ணன் உயர்நிலைப்பள்ளிக் கல்வியை சென்னையிலும் ஆசிரியர் பயிற்சிக்கல்வியைத் திருவள்ளூரிலும் பயின்றார். 1980 இல் சென்னைப் பல்கலைக்கழகத்திலும், 1983 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இளங்கலைப் பட்டங்கள் பெற்றார். 1984 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை (தமிழ்) தேர்வும், 1990 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம்.எட். தேர்வுகள் எழுதி பட்டங்கள் பெற்றார். மேலும் பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். 1965 முதல் 1991 வரை ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

எழுத்துப்பணி :

சிறுகதை, நாவல், நாடகம், வரலாறு, கல்வெட்டு ஆய்வு, குழந்தை இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் 52 நூல்கள் எழுதியுள்ளார்.

சிறுகதைத் தொகுதிகள் :

- மனக்காற்றாடி
- கொன்றைப்பூ

- அறுசுவை
- ஏழுநாள்
- எல்லாம் இன்ப மயம்
- உயர்ந்தஉள்ளம்
- கனவுக்கண்கள்
- நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

நாடகங்கள் :

- கிள்ளிவளவன்
- வெண்ணிலா
- மருதுபாண்டியர்
- அலெக்ஸாண்டர்
- கைவிளக்கு
- சங்கமித்திரை
- பேசும் ஊமைகள்
- நல்லநாள்
- நல்லூர் முல்லை
- வளையாபதி
- பள்ளிக்கூடம்
- இரகசியம்
- சாணக்கியன்

விருதுகளும், பட்டங்களும்:

- சங்கமித்திரை - நாடகம் தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களுக்கான பரிசு பெற்ற நூல்கள், 1982
- வரலாற்றுக் கருவூலம் - தொல்பொருளியல் தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களுக்கான பரிசு பெற்ற நூல்கள் 1984 (இரண்டாம் பரிசு)
- பாரத ஸ்டேட் வங்கி வழங்கிய இரகசியம் நாடகத்திற்கான முதல் பரிசு (1993)
- தமிழக அரசு வழங்கிய மாநில நல்லாசிரியர் விருது (1988)
- பல்கலைச் செம்மல் - சென்னை பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் (1985)
- டாக்டர் பட்டம் - நியூயார்க் உலகப் பல்கலைக்கழகம் (1985)
- திருக்குறள் நெறித் தோன்றல் - தமிழக அரசு (1985)
- நாடக மாமணி - திண்டிவனம் தமிழ் இலக்கியப் பேரவை (1985)
- பாரதி தமிழ்ப்பணிச் செல்வர் - ஸ்ரீராம் நிறுவனம் (1990)
- இலக்கியச் சித்தர் - பண்ருட்டி எழுத்தாளர் சங்கம் (1995)
- இலக்கியச் சிற்பி - புதுவை (1996)

8. எழுத்தாளர் தி. ஜானகிராமன்

பிறப்பு : பிப்ரவரி 28, 1921

இறப்பு : நவம்பர் 18, 1982

பிறந்த ஊர் : மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்

வாழ்க்கை வரலாறு :

தி. ஜானகிராமன், ஒரு புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர். தி.ஜா. என்றும் அழைக்கப்படுபவர். சக்தி வைத்தியம் என்ற சிறுகதைத் தொகுப்புக்காக தமிழுக்கான சாகித்ய அகாடமி விருது பெற்றவர். தமிழின் மிகப்புகழ் பெற்ற நாவல்களான மோகமுள், மரப்பசு, அம்மா வந்தாள் போன்றவற்றை எழுதியவர். தி.ஜா. இசையை எழுத்தாக்கிய அபூர்வ எழுத்தாளர்.

தஞ்சை மாவட்டம் மன்னார்குடியை அடுத்து தேவங்குடியில் 1921ஆம் ஆண்டு பிறந்தார். பத்து வருடங்கள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிவர். பின்பு அகில இந்திய வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றார். அதன் பின்னர் தமிழின் முதன்மையான இலக்கிய இதழாக விளங்கிய கணையாழி மாத இதழில், ஆசிரியராகப் பணியாற்றி வந்த தி. ஜானகிராமன் 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிறு உடல்நலக் குறைவிற்குப் பிறகு இயற்கை எய்தினார்.

இவர் சமையற்கலையிலும் வல்லவர். இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் முதலியவற்றிலும் ஈடுபாடு மிக்கவர். இவர் தஞ்சாவூர் புனித பீட்டர் பள்ளியிலும், சென்ட்ரல் பிரைமரிப் பள்ளியிலும் தொடக்கக் கல்வியையும், 1929 - 1936 வரை கல்யாண சுந்தரம் உயர்நிலைப்பள்ளியில் உயர்நிலைக் கல்வியையும் கற்றவர்.

1936 வரை கும்பகோணம் அரசினர் கல்லூரியில் இன்டர்மீடியட்டும், பி.ஏ.வும் பயின்றவர்.

ஆசிரியப்பணிகள் :

இவர் 1943 - 1944வரை கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகவும், 1944 - 1945 வரை சென்னை எழும்பூர் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும், 1945 - 1954வரை 9 ஆண்டுகள் தஞ்சை மாவட்டம் ஐயம்பேட்டையிலும், குத்தாலம் பள்ளியிலும் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

வானொலி :

இவர் 1945 - 1960 வரை சென்னை வானொலி நிலையத்தில் 14 ஆண்டுகள் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகப் பணியாற்றியவர். 1968 - 1974 வரை தில்லி வானொலி நிலையத்தில் உதவித் தலைமை கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகப் பணிபுரிந்தவர். அதன் பின்னர், பதவி உயர்வு பெற்று 1974 - 1981 வரை தலைமைக் கல்வி அமைப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

படைப்புகள் :

தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்னும் தலைப்பில் சுதேசமித்திரன் வார இதழில் எழுதினார். இது 1967ல் நூலாக வெளியிடப்பெற்றது. ரோமானிய செக்கோஸ்லோவோக்கியா சென்ற அனுபவங்களை கருங்கடலும் கலைக்கடலும் என்னும் தலைப்பில் 1974ல் வெளியிட்டார்.

நாவல்கள் :

- அமிர்தம்
- மலர்மஞ்சம்
- அன்பே ஆரமுதே
- அம்மா வந்தாள்
- உயிர்த்தேன்
- செம்பருத்தி
- மரப்பசு
- அடி
- நளபாகம்

குறுநாவல்கள் :

- கமலம்
- தோடு
- அவலும் உமியும்
- சிவஞானம்
- நாலாவது சார்
- வீடு

பயண நூல்கள் :

- உதயசூரியன்
- கருங்கடலும் கலைக்கடலும்

சிறுகதைத் தொகுதிகள் :

- கொட்டுமேளம்
- சிவப்பு ரிக்ஷா
- யாதும் ஊரே
- பிடிகருணை
- சக்தி வைத்தியம்
- மனிதாபிமானம்
- எருமைப் பொங்கல்
- கச்சேரி

கட்டுரை :

- உதயசூரியன்
- அடுத்த வீடு ஐம்பது மைல்
- கருங்கடலும் கலைக்கடலும்
- நடந்தாய் வாழி காவேரி

நாடகம் :

- நாலுவேலி நிலம்
- வடிவேல் வாத்தியார்
- டாக்டர் மருந்து

9. எழுத்தாளர் கி. ராஜநாராயணன்

பிறப்பு : செப்டம்பர் 16, 1922

புனைப்பெயர் : கி. ரா.

பிறந்த ஊர் : இடைசெவல் கிராமம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

மனைவி : கணவதி அம்மாள்

வாழ்க்கை வரலாறு :

இவரை கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுவார்கள். கோவில்பட்டியின் அருகில் உள்ள இடைசெவல் கிராமத்தைச் சேர்ந்தவர் மற்றும் நல்ல இசை ஞானம் கொண்டவர். 1958-ல் சரஸ்வதி இதழில் இவரது முதல் கதை வெளியானது. இவரின் கதையுலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளையும் விவரிப்பவையாகும்.

கி. ராஜநாராயணன் இயல்பில் ஒரு விவசாயி. ஒரு சிறந்த கதை சொல்லி. நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன்.

பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன் என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் கி.ரா., பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர்.

விருதுகள் :

சாகித்ய அகாடமி விருது (1990), இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2016ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகள் பெற்ற, கி.ரா. தற்போது புதுச்சேரியில் வாழ்ந்து வருகிறார். 2016-17 ஆம் ஆண்டுக்கான மனோன்மணியம் சுந்தரனார் விருது கி. ராவிற்கு வழங்கப்பட்டது.

சிறுகதைகள் :

கன்னிமை, மின்னல், கோமதி, நிலை நிறுத்தல், கதவு, பேதை, ஜீவன், நெருப்பு (புதினம்), விளைவு, பாரத மாதா, கண்ணீர், வேட்டி, கரிசல் கதைகள், கி.ரா-பக்கங்கள், கிராமிய விளையாட்டுகள், கிராமியக்கதைகள், குழந்தைப்பருவக் கதைகள், கொத்தைபருத்தி, புதுவை வட்டார நாட்டுப்புறக் கதைகள், பெண்கதைகள், பெண்மணம், வயது வந்தவர்களுக்கு மட்டும், கதை சொல்லி ஆகிய சிறுகதைகளை களைப்பின்றி எழுதியவர்.

நாவல்கள் :

- கோபல்ல கிராமம்
- கோபல்லபுரத்து மக்கள் (சாகித்ய அகாடமி விருது பெற்றது)
- அந்தமான் நாயக்கர்

கட்டுரைகள் :

- ருஷ்ய மண்ணின் நிறம் என்ன?
- புதுமைப்பித்தன்
- மாமலை ஜீவா
- இசை மகா சமுத்திரம்
- அழிந்து போன நந்தவனங்கள்
- கரிசல் காட்டுக் கடுதாசி

திரைப்படமாக்கப்பட்ட இவர் எழுத்துக்கள் :

ஒருத்தி (கிடை என்ற கதையினை அடிப்படையாகக் கொண்டு அம்ஷன் குமார் இயக்கிய திரைப்படம்).

10. எழுத்தாளர் சா. கந்தசாமி

பிறப்பு : ஜூலை 23, 1940

பிறந்த ஊர் : மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்

கல்வி : சென்னை மத்திய பாலிடெக்னிக் கல்லூரியில் ஆட்டோ மொபைல்

வாழ்க்கை வரலாறு :

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் பிறந்த இவர் 1968ல் எழுதிய சாயாவனம் புதினம் பிரசுரமானதிலிருந்து எழுத்துலகில் பிரபலமானார். இப்புதினத்தைத் தேசிய புத்தக

அறக்கட்டளை நவீன இந்திய இலக்கியங்களில் சிறந்த ஒன்றாக அறிவித்தது.

ஜவகர்லால் நேரு, பெரியார், உ.வே.சாமிநாதையர் மற்றும் வெ.சாமிநாத சர்மா போன்றோரின் படைப்புகளை கந்தசாமி இலக்கிய வாழ்க்கைக்கான தளமாக அமைத்தார். இதன் மூலம் எனக்கு கிடைத்த கல்வி உதவித் தொகை எனக்கு வலிமை, நம்பிக்கை மற்றும் தன்மை ஆகியவற்றைக் கொடுத்துள்ளது, இது எனது படைப்புகளை நுட்பமாக பாதித்திருக்கிறது, என்று அவர் கூறுகிறார். எழுத்துக்களை கலை அலங்காரமாக இருக்காது என்று நான் நம்புகிறேன். சிறந்த இலக்கியம், நேரம், கலாச்சாரம், மொழி மற்றும் அரசியல் சித்தாந்தத்தின் தடைகள் ஆகியவற்றை கடந்து செல்லும் ஒன்றாகும். இது ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது பாலினத்துடன் தொடர்புடையது அல்ல. மிக முக்கியமாக, உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் ஒரு வாசகர் ஒரு நாவலை அல்லது சிறுகதையை புரிந்துகொள்ள முடியும்.

பணி :

- எம். ஐ. டி பரிசோதனை கூட்டத்தில் உதவியாளர்
- இந்திய உணவு கழகத்தில் இணை இயக்குநர்
- 1993 - 1997 வரை சாகித்ய அகாடமியின் தமிழ் ஆலோசனை குழு உறுப்பினராக பணியாற்றினார்.

எழுதிய நூல்கள் :

கவிதை, உரைநடை, கட்டுரை, சிறுகதை, புதினம், ஓவியம், தொகுப்பு என தமிழிலும் மற்றும் ஆங்கிலத்திலும் சுமார் 50 நூல்களை எழுதியுள்ளார்.

சிறுகதைகள்:

- வாள்
- தக்கையின் மீது நான்கு கண்கள்
- அவள்
- ஒரு வருடம் சென்றது
- காவல்
- மலையூர்
- தேவை
- ஆறுமுகசாமியின் ஆடுகள்
- ரம்பையும் நாச்சியாரும்

புதினங்கள் :

- தொலைந்து போனவர்கள்
- சாயாவனம்
- பெருமழை நாட்கள்
- அவன் ஆனது

இலக்கிய வகை நூல்கள் :

- அதர்படயாத்தல்
- எல்லாமகிய எழுத்து

விருதுகள் :

- 1965 - சிறந்த சுற்றுச்சூழல் இலக்கிய விருது
- 1998 - சாகித்ய அகாதெமி விருது
- 2009 - கலைமாமணி விருது

11. எழுத்தாளர் சாரு நிவேதிதா

பிறப்பு : டிசம்பர் 18, 1953

அமைப்பைவிட தனி மனிதனும் அவனுடைய உரிமைகளே முக்கியம் என்ற கருத்தை இவரது படைப்புகள் மையமாகக் கொண்டுள்ளன. அடுத்த மனிதரின் சுதந்திரத்தில் குறுக்கிடாமலும் அதே சமயம் நம்முடைய தனிப்பட்ட சுதந்திரத்தை இழக்காமலும் வாழ்வதே சிறப்பான வாழ்க்கை என்ற கருத்தை முன்வைப்பவை சாரு நிவேதிதாவின் படைப்புகள்.

இறுக்கம் மிகுந்த நவீன வாழ்வில் சக மனிதன் மீதும், பிராணிகள் மீதும், இயற்கை மீதும் அன்பை போதிப்பவை சாரு நிவேதிதாவின் எழுத்து. இவரது நாவல் ஸீரோ டிகிரி, சுவிட்சர்லாந்தின் யான் மிஸால்ஸ்கி இலக்கிய விருதுக்கு 2013-ஆம் ஆண்டு பரிந்துரைக்கப்பட்டது. எக்கனாமிக் டைம்ஸ் நாளிதழ், 2001 - 2010 தசாப்தத்தின் இந்தியாவின் முதன்மை பத்து மனிதர்களில் ஒருவராக இவரைத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தி இந்து தனது தீபாவளி மலரில், தமிழகத்தின் மனதில் பதிந்த முகங்களில் ஒருவராக 2014-ஆம் ஆண்டு இவரைத் தேர்ந்தெடுத்தது. இவருடைய பல கட்டுரைகள், பத்திகள், மலையாளம் மொழிபெயர்ப்பில் வாசகர்களிடம் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. தமிழ் தவிர ஆங்கிலத்திலும் உலக அளவில் இவரது எழுத்துக்கு வாசகர்கள் உண்டு. புதிய எக்ஸைல், ஸீரோ

டிகிரி, ராஸ லீலா உள்ளிட்ட நாவல்களும், கோணல் பக்கங்கள், தப்புத் தாளங்கள், மனம்கொத்திப் பறவை, வேற்றுலகவாசியின் டயரிக்குறிப்புகள் உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இவரது படைப்புகளுள் முக்கியமானவை.

எழுதிய நாவல்கள் :

- எக்ஸிஸ்டென்ஷியலிஸமும் ஃபேன்ஸி பனியனும்
- ஸீரோ டிகிரி
- ராஸ லீலா
- காமரூப கதைகள்
- தேகம்
- எக்ஸைல்

இயற்றிய நூல்கள் :

- கர்நாடக முரசும் நவீன தமிழ் இலக்கியத்தின் மீதான ஓர் அமைப்பியல் ஆய்வும் - நாகார்ச்சுனன் மற்றும் சில்வியா (எம்.டி. முத்துக்குமாரசாமி) கதைகளுடன் வந்த தொகுதி
- நேநோ
- மதுமிதா சொன்ன பாம்பு கதைகள்
- ஷேக்ஸ்பியரின் மின்னஞ்சல் முகவரி
- கடல் கன்னி (மொழிபெயர்ப்பு சிறுகதைகள்)
- ஊரின் மிக அழகான பெண் (மொழிபெயர்ப்பு சிறுகதைகள்)

- மார்க் கீப்பர் (Morgue Keeper)
- முத்துக்கள் பத்து - தேர்ந்தெடுத்த சிறுகதைகள்
- டயபாலிக்கலி யுவர்ஸ்

12. எழுத்தாளர் சிவசங்கரி

பிறப்பு : அக்டோபர் 14, 1942

வாழ்க்கை வரலாறு :

ஒரு குறிப்பிடத்தக்க தமிழக எழுத்தாளர் ஆவார். இவர் நாவல், சிறுகதை, பயணக் கட்டுரை, இலக்கியக் கட்டுரை, நேர்காணல், மொழிபெயர்ப்பு எனப் பல தளங்களில் இயங்குகிறார். 1993-ல் இருந்து இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு என்ற செயல் திட்டத்தை முன்னெடுத்து வருகிறார். இவரது 150 க்கும் மேற்பட்ட சிறுகதைகள் மற்றும் குறுநாவல்கள், 35 நாவல்கள், 13 பயணக் கட்டுரைத் தொகுப்புக்கள், 7 கட்டுரைத் தொகுப்புக்கள், 2 வாழ்க்கைச் சரிதங்கள் ஆகியவை வெளியாகியுள்ளன. இவரது முதல் சிறுகதை அவர்கள் பேசட்டும் - குழந்தையில்லாத இளம் தம்பதியின் மெல்லிய உணர்வுகளைச் சித்தரிக்கும் கதை, 1968 இல் கல்கியில் பிரசுரமாகி, எழுத்துலகில் பிரவேசித்தவர். இரண்டாவது சிறுகதை உனக்குத் தெரியுமா? - ஒரு குடிகாரனைப் பற்றிய கதை, ஆனந்த விகடன் பத்திரிகையில் பிரசுரமானது. அதன்பின் பல சிறுகதைகள், தொடர்கதைகள், குறுநாவல்கள், வெளிநாட்டு அனுபவங்கள், கட்டுரைத் தொடர்கள் என எழுதியிருக்கிறார்.

தமிழ்நாடு அரசு பரிசு :

தமிழ்நாடு அரசு வளர்ச்சி துறையில் ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டம் மூலம்

வழங்கப்படும் 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலாசிரியருக்கான பரிசு பயண இலக்கியம் எனும் வகைப்பாட்டில் இவருடைய பாரத தரிசனம் எனும் நூலுக்கு கிடைத்தது.

நாவல்கள் :

- எதற்காக?
- திரிவேணி சங்கமம்
- ஏன்?
- சியாமா
- நண்டு
- நதியின் வேகத்தோடு
- மெள்ள மெள்ள
- 47 நாட்கள்
- அம்மா, ப்ளீஸ் எனக்காக
- ஆயுள் தண்டனை
- வளர்த்த கடா
- இரண்டு பேர்
- ஒரு மனிதனின் கதை
- பிராயச்சித்தம்
- போகப்போக
- நெருஞ்சி முள்
- தவம்

- திரிசங்கு சொர்க்கம்
- மாலையில் பூக்கும் மலர்கள்
- பறவை
- பாலங்கள்
- ஆயிரங்காலத்துப் பயிர்
- கருணைக் கொலை
- அவன்
- ஒற்றைப் பறவை
- அது சரி, அப்புறம்?
- நூலேணி
- அம்மா பிள்ளை
- மலையின் அடுத்த பக்கம்
- வேரில்லாத மரங்கள்
- வானத்து நிலா
- ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால்
- நான் நானாக
- சுட்டமண்
- இன்னொருத்தி + இன்னொருத்தி
- இனி

குறுநாவல்கள் :

- இந்திராவின் கதை
- அப்பா

குழந்தைகளுக்கான பேசும் புத்தகம் :

அம்மா சொன்ன கதைகள் (புத்தகமும் ஒலிநாடாவும் இணைந்தது)

இலக்கிய ஆய்வு :

- இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு - பாகம் 1 - தெற்கு - 1998
- இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு - பாகம் 2 - கிழக்கு - 2000
- இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு - பாகம் 3 - மேற்கு - 2004
- இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு - பாகம் 4 - வடக்கு - 2009

13. எழுத்தாளர் சுந்தர ராமசாமி

பிறப்பு : மே 30, 1931

இறப்பு : அக்டோபர் 14, 2005.

பிறந்த ஊர் : மகாதேவர் கோவில், நாகர்கோவில்

இயற்பெயர் : பசுவய்யா

வாழ்க்கை வரலாறு :

நவீனத் தமிழ் இலக்கியத்தின் மிகச்சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் ஒரு நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர் எனப் பல இலக்கியங்களில் ஆளுமை பெற்றிருந்தார். பசுவய்யா என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர். நவீனத் தமிழ் இலக்கியத்தில், தமிழ் மொழியினை பல்வேறு தளங்களுக்குக் கொண்டு சென்றார். மார்க்சியக் கண்ணோட்டத்தில் தொடங்கிய இவர் எழுத்துக்கள் (தண்ணீர், பொறுக்கி வர்க்கம்) இறுதியாக பட்டறிவுத் திறனாய்வு சார்ந்த உய்யநிலை நடப்பியல் (Empiricist Critical Realism) நோக்கில் (ஜகதி) கால் கொண்டன எனலாம். இடைப்பட்ட காலத்தில் புத்தியலின் (Modernism) பலவெளிகளை படைத்தாலும் அவ்வப்போது வியன்புனைவிலும் (இருக்கைகள் போன்றன) திளைத்துள்ளார்.

இவர், நாகர்கோவில் அருகே உள்ளே தழுவிய மகாதேவர் கோவில் என்ற கிராமத்தில் பிறந்தார். தன் இளைய பருவத்தில், தொ.மு.சி ரகுநாதனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தொ.மு.சி-யினால் மார்க்சியத் தத்துவங்களிலும் ஈர்க்கப்பட்டவராகவும் இருந்தார். பிறகு தொ.மு.சி ஆசிரியராக இருந்த சாந்தி என்ற இதழில் எழுதத் தொடங்கினார். 1953 ஆம் ஆண்டு சாந்தி பத்திரிக்கையில் இவர் எழுதிய தண்ணீர் கதைக்கு முதல் பரிசு கிடைத்தது. இவர் சமூக சீர்திருத்தவாதிகளான காந்தி, பெரியார், அரவிந்தர், இராமகிருஷ்ண பரம அம்சர், இராம் மனோகர் லோகியா, ஜேசி குமரப்பா, ஜே கிருஷ்ணமூர்த்தி, தமிழ் இலக்கியத்தில் புத்துணர் திறனைப் புகுத்திய புதுமைப்பித்தன் எனப் பலரது நூல்களின் தாக்கத்துக்கு ஆட்பட்டுள்ளார். மேலும் மலையாள இலக்கியச் சுடரான எம். கோவிந்தனை 1957இல் தொடர்பு கொண்டு தொடர்ந்து அவரது நண்பராக கடைசிவரை விளங்கியுள்ளார்.

1950களில் பொதுவுடைமைத் தோழரான ப.ஜீவானந்தம் அவர்களைச் சந்தித்துள்ளார். அதனால் இவருக்கு மார்க்சியத் தத்துவத்தாக்கம் ஏற்பட்டது. தொ.மு.சி. ரகுநாதன் ஆசிரியராக இருந்து வெளியிட்ட சாந்தி இதழில் அவரது இலக்கியத் தொடர்பு உருவானது. மேலும் அவர் சரஸ்வதி இதழில் ஆசிரியக் குழு உறுப்பினராகியதும் எழுத்தாளராக வளர உதவியது.

சுந்தர ராமசாமி பெற்ற விருதுகள் :

- குமரன் ஆசான் நினைவு விருது
- இயல் விருது தமிழ் இலக்குய தோட்டம் 2001இல் வாழ்நாள் சாதனைக்காகப் பெற்றார்.
- கதா சூடாமணி விருது

சுந்தர ராமசாமி பெயரிலான விருதுகள் :

தமிழ்க் கணிமைக்கான விருது:

தமிழ் கணிமை, தகவல் தொழில்நுட்பம் துறைகளுக்கான பங்களிப்புகளைக் கௌரவிக்கும் முகமாக சுந்தர ராமசாமி தமிழ்க் கணிமை விருது ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. கனடாவின் தமிழ் இலக்கிய தோட்டம் அமைப்பினால் நிர்வகிக்கப்படும் இந்த விருது காலச்சுவடு அறக்கட்டளையின் பணவுதவியுடன் வழங்கப்படுகிறது. இலக்கியத் தோட்டம் நடத்தும் வருடாந்திர இயல் விருது வழங்கும் விழாவில் இவ்விருதைப் பெறுபவருக்கு ஆயிரம் கனேடிய டாலர்களும் விருதுப் பட்டயமும் வழங்கப்படும். இவ்விருதைப் பெறுபவர் சுயேச்சையான பன்னாட்டு நடுவர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

இளம் படைப்பாளர் விருது :

சுந்தர ராமசாமி நினைவாக ஆண்டுதோறும் இளம் படைப்பாளி ஒருவருக்கு நெய்தல் இலக்கிய அமைப்பு சுந்தர ராமசாமி விருது அளித்து வருகிறது. இலக்கியத்தின் ஏதேனும் ஒரு வகைமையிலோ ஒன்றுக்கு மேற்பட்ட வகைமைகளிலோ முக்கியமான பங்களித்து வரும் இளம் படைப்பாளி ஒருவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. நாற்பது வயதுக்கு உட்பட்டவர்கள் இவ்விருதுக்குப் பரிசீலிக்கப்படுவார்கள். படைப்புத் துறையில் தொடர்ந்து தீவிரமாக இயங்கி வருபவர்களாக அவர்கள் இருப்பது அவசியம். விருதில் பாராட்டுப் பத்திரமும், பத்தாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் அடங்கும்.

கட்டுரைகள் :

- ந. பிச்சமூர்த்தியின் கலை: மரபும் மனிதநேயமும்
- ஆளுமைகள் மதிப்பீடுகள்
- காற்றில் கரைந்த பேரோசை
- விரிவும் ஆழமும் தேடி
- வே. வசந்தி தேவியுடன் ஓர் உரையாடல்
- இறந்த காலம் பெற்ற உயிர்
- இதம் தந்த வரிகள்
- இவை என் உரைகள்
- வானகமே இளவெயிலே மரச்செறிவே
- வாழ்க சந்தேகங்கள்
- புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம்
- புதுமைப்பித்தன் கதைகள் சுரா குறிப்பேடு

- மூன்று நாடகங்கள்
- வாழும் கணங்கள்

கவிதை :

- சுந்தர ராமசாமி கவிதைகள் முழு தொகுப்பு

மொழிபெயர்ப்பு :

- செம்மீன் - தகழி சங்கரப்பிள்ளை
- தகழி சங்கரப்பிள்ளை
- தொலைவிலிருக்கும் கவிதைகள்

14. எழுத்தாளர் சுபா

- சுபா என்பது தமிழ் எழுத்தாளர்கள் டி. சுரேஷ் மற்றும் ஏ. என். பாலகிருஷ்ணன் ஆகிய இருவரும் சேர்ந்து எழுதும் புனை பெயராகும். இவர்கள் இருவரும் தமிழ் துப்பறியும் புதினங்கள், திரைக்கதை, சிறுகதைகள் போன்றவற்றை எழுதி வருகின்றனர்.

- இவ்விரு நண்பர்களும் கல்லூரியில் படிக்கும் காலத்திலிருந்து கதைகளை சேர்ந்து எழுதியுள்ளனர், மேலும் 1979-லிருந்து அவற்றை வெளியிட்டு வருகின்றனர். இவர்களிருவரும் குறைந்தபட்சம் 450 குறு நாவல்களையும், 400 சிறு கதைகளையும், திரைப்படங்கள் மற்றும் தொலைகாட்சி தொடர்களுக்கு திரைக்கதைகளையும் எழுதியுள்ளனர்.

- **கனா கண்டேன், அயன் ஆகிய திரைப்படங்கள் சுபாவின் நாவல்களை தழுவி அமைந்துள்ளவை, மேலும் இவற்றின் திரைக்கதை சுபா மற்றும் கே. வி. ஆனந்த் ஆகியோரால் எழுதப்பட்டது.**

- **கோ திரைப்படத்தின் திரைக்கதையும் சுபா மற்றும் கே. வி. ஆனந்த் ஆகியோரால் எழுதப்பட்டது. தமிழ் மற்றும் தெலுங்கில் வெளிவந்த 180 திரைப்படத்தின் திரைக்கதை சுபா மற்றும் ஜெயேந்திரா ஆகியோரால் எழுதப்பட்டது.**

- **இவர்களின் பெரும்பாலான புதினங்களில் ஈகிள் ஐ டிடக்டிவ் ஏஜென்சியின் நரேந்திரன், வைஜயந்தி ஆகிய கதாபாத்திரங்கள் முதன்மைப்படுத்தப்பட்டிருக்கும். மேலும் ஜான் சுந்தர், செல்வா, முருகேசன் ஆகியவையும் இவர்கள் உருவாக்கிய முக்கிய கதாபாத்திரங்கள் ஆகும்.**

15. எழுத்தாளர் சுஜாதா

இயற்பெயர் : ரங்கராஜன்

பிறப்பு : மே 3, 1935

இறப்பு : பிப்ரவரி 27, 2008

பிறந்த ஊர் : திருவல்லிக்கேணி, சென்னை

வாழ்க்கை வரலாறு :

சுஜாதா அவர்கள் ஸ்ரீரங்கம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தார். பின்னர் திருச்சி புனித ஜோசப் கல்லூரியில் பி.எஸ்சி. (இயற்பியல்) படிப்பை முடித்து அதன் பின் சென்னையில் உள்ள எம்.ஐ.டி.யில் பி.இ. (மின்னணுவியல்) கற்றார். அதன் பின்னர் நடுவண் அரசுப் பணியில் சேர்ந்தார்.

சுஜாதா அவர்கள் முதலில் டெல்லியில் பணியாற்றினார். 14 ஆண்டுகள், அரசுப் பணியில் இருந்த சுஜாதா, பின்னர் பெங்களூர் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் இணைந்தார். அங்கு ரேடார்கள் குறித்த ஆய்வுப் பிரிவிலும், மேலும் பல்வேறு பொறுப்புகளிலும் பணியாற்றி வந்தார். அவர் பொது மேலாளராக உயர்ந்த பின்னர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று சென்னைக்குத் திரும்பினார்.

அறிவியலை, ஊடகம் மூலமாக, மக்களிடம் கொண்டு சென்றதற்காக, அவருக்கு தேசிய அறிவியல் தொழில்நுட்பக் கழகம் 1993ம் ஆண்டு அவரைப் பாராட்டி விருது வழங்கிக் கௌரவித்தது. இவர் மின்னணு வாக்குப் பதிவுப் பொறியை உருவாக்க முக்கியக் காரணமாக இருந்தார். இதை உருவாக்கிய பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் முக்கிய உறுப்பினராக இருந்த சுஜாதா இப்பொறியை உருவாக்கியதற்காக அவருக்கு வாஸ்விக் விருது வழங்கப்பட்டது. சுஜாதாவின் எழுத்துப் பணியைப் பாராட்டி, அவருக்கு தமிழக அரசின் கலைமாமணி விருதும் வழங்கப்பட்டுள்ளது.

உடல் நிலை மோசமானதால் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சுஜாதா சிகிச்சை பலனின்றி பிப்ரவரி 27, 2008 இரவு 9.30 மணியளவில் மறைந்தார்.

எழுதிய நாவல்கள் :

- அப்சரா
- அனிதா இளம் மனைவி
- அனிதாவின் காதல்கள்
- ஆ..!
- ஆதலினால் காதல் செய்வீர்
- ஆயிரத்தில் ஒருவர்

- உன்னைக் கண்ட நேரமெல்லாம்
- எதையும் ஒருமுறை
- எப்போதும் பெண்
- என்றாவது ஒரு நாள்

நாடகங்கள் :

- டாக்டர். நரேந்திரநாத்தின் வினோத வழக்கு
- கடவுள் வந்திருந்தார்
- பாரதி இருந்த வீடு
- ஆகாயம்

கட்டுரைத் தொகுப்புகள் :

- கணையாழியின் கடைசி பக்கங்கள்
- கற்றதும் பெற்றதும்
- கடவுள் இருக்கிறாரா?
- தலைமை செயலகம்
- எழுத்தும் வாழ்க்கையும்
- ஏன்? எதற்கு? எப்படி?
- சுஜாதாட்ஸ்
- இன்னும் சில சிந்தனைகள்
- தமிழ் அன்றும் இன்றும்

- உயிரின் ரகசியம்
- நானோ டெக்னாலஜி
- கடவுள்களின் பள்ளத்தாக்கு

16. எழுத்தாளர் தமிழ்மகன்

பிறப்பு : டிசம்பர் 24, 1964

இயற்பெயர் : வெங்கடேசன், வளவன், தேனீ

சொந்த ஊர் : காரணை கிராமம், திருவள்ளூர் மாவட்டம்

வாழ்க்கை வரலாறு :

தமிழ்மகன் திருவள்ளூர் மாவட்டம் காரணை கிராமத்தைச் சேர்ந்தவர். இயற்பியல் துறையில் இளம் அறிவியல் பட்டமும், அரசறிவியல் துறையில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். இவருக்கு மனைவி திலகவதி, மகன் மாக்சிம், மகள் அஞ்சலி ஆகியோர் உள்ளனர். 1984 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் இயற்பியல் பட்டப் படிப்பில் இறுதி ஆண்டு படித்த போது, டி.வி.எஸ் நிறுவனமும் இதயம் பேசுகிறது வார இதழும் இணைந்து புதின போட்டி நடத்துவதாக அறிவித்தன. இறுதி ஆண்டு தேர்வை ஓரம் கட்டிவிட்டு வெள்ளை நிறத்தில் ஒரு காதல் என்ற புதினம் எழுதினார். அதில் தேர்வு பெற்று முதல் பரிசாக டி.வி.எஸ் 50 வாகனத்தைப் பெற்றார். அக்கதையை முதற் பரிசுக்குத் தேர்வு செய்தவர் சின்னக்குத்தூசி ஆவார். புதினம் அந்த இதழில் ஓவியர் ஜெயராஜ் வரைந்த ஓவியங்களோடு தொடர்கதையாக வெளியானது. இவர் எழுதிய மானுடப் பண்ணை எனும் நூல் தமிழ் வளர்ச்சி துறையின் 1994 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதினம் வகைப்பாட்டிலும் “எட்டாயிரம் தலைமுறை” எனும் நூல் 2008 ஆம்

ஆண்டுக்கான சிறந்த நூல்களில் சிறுகதை வகைப்பாட்டிலும் பரிசு பெற்றிருக்கின்றன.

எழுதிய நூல்கள் :

- கவிதை நூல்கள்
- பூமிக்குப் புரிய வைப்போம்
- ஆறறிவு மரங்கள்

சிறுகதை நூல்கள் :

- எட்டாயிரம் தலைமுறை
- மீன்மலர்
- சாலை ஓரத்திலே வேலையற்றதுகள்
- அமரர் சுஜாதா
- மஞ்சு அக்காவின் மூன்று முகங்கள்

புதினங்கள் :

- வெள்ளை நிறத்தில் ஒரு காதல்
- சொல்லித் தந்த பூமி
- மானுடப் பண்ணை
- வெட்டுப் புலி (இருபதாம் நூற்றாண்டு தமிழகத்தின் திராவிட மனச் சூழலை விவரிக்கும் நாவல்)
- ஆண்பால் பெண்பால்

- வனசாட்சி
- ஆபரேஷன் நோவா - அறிவியல் புனைகதை புதினம்
- தாரகை
- வேங்கை நங்கூரத்தின் ஜீன் குறிப்புகள் (அறிவியல் வரலாற்று நாவல் - 2017)

கட்டுரை நூல்கள் :

- விமானங்களை விழுங்கும் மர்மக்கடல்

வாழ்க்கைத் தொடர் கட்டுரைகள் :

- வாக்குமூலம் (தமிழ் திரைப்பட நடிகர் சத்தியராஜ் பற்றியது)
- சங்கர் முதல் ஷங்கர் வரை (தமிழ் திரைப்பட இயக்குநர் ஷங்கர் பற்றியது)

திரையுலகத் தொடர் கட்டுரைகள் :

- தில்லானா தில்லானா (நடிகை மீனா கட்டுரைத் தொடர்)
- செல்லுலாய்ட் சித்திரங்கள் (நேரில் சந்தித்த திரைப்படக் கலைஞர்கள் பற்றிய நினைவுக் குறிப்புகள்)

இணைய இதழ்கள் :

- ஆறாம் திணை, சென்னை ஆன்லைன், திண்ணை.காம், கீற்று.காம், உயிரோசை, தமிழ் ஸ்டுடியோ.காம், தமிழ் சினிமா.காம்

பணியாற்றிய பத்திரிகைகள் :

- போலீஸ் செய்தி புலனாய்வு இதழில் பொறுப்பாசிரியர் பணி
- தமிழன் நாளிதழில் இலவச இணைப்பு இதழ் பொறுப்பு
- வண்ணத்திரை செய்தியாளர்
- தினமணி நாளிதழ் சினிமா செய்தியாளர்
- குமுதம் வார இதழ் சினிமா செய்தியாளர்
- குங்குமம் வண்ணத்திரை பொறுப்பாசிரியர்
- தினமணியில் முதன்மை உதவி ஆசிரியர்
- ஆனந்தவிகடன் குழும இதழில் உதவி பொறுப்பாசிரியர்

விருதுகள் :

- வெள்ளை நிறத்தில் ஒரு காதல் (இளைஞர் ஆண்டு நாவல் போட்டியில் முதல் பரிசு)
- மானுடப் பண்ணை (தமிழக அரசின் சிறந்த நாவல் விருது)
- மொத்தத்தில் சுமாரான வாரம் (தி. ஜானகிராமன் நினைவுக் குறுநாவல் போட்டியில் தேர்வு)
- கிளாமிடான் (சிறுகதை) (அமரர் சுஜாதா நினைவு அறிவியல் புனைகதை விருது, இருபதாயிரம் ரூபாய் பரிசு)
- எட்டாயிரம் தலைமுறை (2008-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் சிறந்த சிறுகதை நூல் விருது)

- 2010-ம் ஆண்டுக்கான ஜெயந்தன் அறக்கட்டளை விருது (வெட்டுப்புலி நாவலுக்காக)
- 2010-ம் ஆண்டுக்கான கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளை விருது (வெட்டுப்புலி நாவலுக்காக)
- வனசாட்சி நாவலுக்கான மலைச் சொல் விருது 2013
- பெரியார் விருது 2014
- சென்னை ரோட்டரி சங்க விருது 2018

17. எழுத்தாளர் தாமரை கவிஞர்

தாமரை, தமிழ் பெண் கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். கோவையில் பிறந்த தாமரை, இயந்திரப் பொறியியல் பட்டதாரி. இவரின் தந்தை, கவிஞராகவும் நாடகாசிரியராகவும் விளங்கியுள்ளார். ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும் என்ற கவிதைத் தொகுப்பை அளித்துள்ள தாமரை, சிறுகதைகளும் எழுதக் கூடியவர். சந்திரக் கற்கள், என் நாட்குறிப்பின் நடுவிலிருந்து சில பக்கங்கள் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளைப் படைத்துள்ளார். இலக்கியப் படைப்புகளுக்காகத் திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, சிற்பி விருது ஆகியவற்றையும் பல்வேறு பரிசுகளையும் பெற்றுள்ளார்.

வசீகரா, அழகிய அசுரா, தவமின்றிக் கிடைத்த வரமே, இஞ்சேருங்கோ எனப் புகழ்மிக்க பாடல்கள் உட்பட நூற்றுக்கும் மேலான பாடல்களை இயற்றியுள்ளார். இலங்கை, சிங்கப்பூர் நாடுகளுக்குப் பயணித்துள்ளார். இவர், ஆங்கிலச் சொற்களைக் கலந்து பாடல்கள் எழுதுவதில்லை என உறுதி கொண்டுள்ளார். திரையிசைத்துறையில் இசையமைப்பாளர் ஹாரீஸ் ஜெயராஜ் இயக்குநர் கவுதம் மேனன் ஆகியோர் படங்களில் தாமரை அதிக

பாடல்களை எழுதியுள்ளார். இம்மூவர் கூட்டணி வெற்றிப் பாடல்களை தந்துள்ளது.

தாமரை கோவை அரசினர் தொழில்நுட்ப கல்லூரியில் உற்பத்திப் பொறியியலில் பட்டம் பெற்று ஆறு ஆண்டுகள் கோவையில் பணிபுரிந்தார். கவிதையில் ஏற்பட்ட நாட்டத்தால் சென்னைக்கு குடிபெயர்ந்த தாமரை, அங்கு கட்டற்ற எழுத்தாளராக கட்டுரைகள், கவிதைகள், கதைகள் எழுதி வந்தார். அவரது இலக்கிய ஆக்கங்களால் கவனிக்கப்பட்டு திரைப்படத்திறையில் அறிமுகமானார். இயக்குனர் சீமானின் இனியவளே திரைப்படத்திற்காக தென்றல் எந்தன் நடையைக் கேட்டது என்ற பாடல் மூலம் தமிழ்த் திரையுலகில் முதல் பெண் பாடலாசிரியராக தாமரை அறிமுகமானார். தொடர்ந்து, உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் மல்லிகைப் பூவே தெனாலியில் (இஞ்சேருங்கோ இஞ்சேருங்கோ) போன்ற திரைப்படங்களில் பாடல்கள் எழுதினார். ஹாரீஸ் ஜெயராஜ் இசையில் மின்னலே திரைபடத்தில் இவரது பாடல் வசீகரா மிகவும் புகழ் பெற்று அவரது வாழ்வில் ஓர் திருப்புமுனையாக அமைந்தது. மின்னலேக்குப் பிறகு இயக்குனர் கௌதம் மேனன் இசையமைப்பாளர் ஹாரீஸ் ஜெயராஜ் தாமரையின் மூவர் கூட்டணி காக்க காக்க, வேட்டையாடு விளையாடு, பச்சைக்கிளி முத்துச்சரம், போன்ற படங்களில் வெற்றிக் கூட்டணியாக அமைந்தது. ஜெயராஜ் கௌதமை விட்டு விலகிய நேரத்தில் தாமரை இசையமைப்பாளர் ரகுமானுடன் கூட்டு சேர்ந்தார். ஜூலை 2014இல் மீண்டும் கௌதம் மேனன், ஹாரீஸ் ஜெயராஜ் தாமரை கூட்டணியாக இணைந்து அஜித்குமார் நடித்த என்னை அறிந்தால் திரைப்படத்தில் பங்காற்றினர். ஜனவரி 1, 2015இல் வெளியான இதன் இசைத்தொகுப்பு மிகுந்த பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

தாமரை மனித உரிமைப் போராளியும் தமிழ் தேசியவாதியுமான தியாகுவை திருமணம் புரிந்துள்ளார். இருவருக்கும் சமரன் என்ற மகன் உள்ளார்.

எழுதியுள்ள புத்தகங்கள் :

- ஒரு கதவும் கொஞ்சம் கல்லிப்பாலும் - கவிதைத் தொகுப்பு

பாடல்கள் எழுதியுள்ள திரைப்படங்கள்:

- உன்னிடத்தில் என்னை கொடுத்தேன்
- மின்னலே
- ஆண்டான் அடிமை
- மாயான்
- பைவ் ஸ்டார்
- ஜெயா
- ஏப்ரல் மாதத்தில்
- முத்தம்
- ஆல்பம்
- காக்க காக்க
- முத்து
- சண்டக்கோழி

18. எழுத்தாளர் கழனியூரன்

இயற்பெயர் : எம். எஸ். அப்துல் காதர்

பிறப்பு : 1954

பிறந்த ஊர் : கழுநீர்குளம், திருநெல்வேலி மாவட்டம்

இறப்பு : 27 ஜூன் 2017

வாழ்க்கைக் குறிப்பு :

கழனியூரன் என்னும் அப்துல் காதர், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கழுநீர்குளம் என்னும் சிற்றூரில் 1954 ஆம் ஆண்டில் பிறந்தவர். கழனியூரன் இடைநிலை ஆசிரியர் பயிற்சியும் முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் ஆகிய பட்டங்களையும் பெற்றிருக்கிறார். கழனியூரில் உள்ள தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார். ஓய்வுபெற்ற தொடக்கப்பள்ளி ஆசிரியரான கழினியூரன், கே. எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் நடத்திய கதை சொல்லி இதழின் பொறுப்பாசிரியராக பணியாற்றியவர்.

எம்.எஸ்.அப்துல் காதர் தமிழக எழுத்தாளர் ஆவார். இவர் கழனியூரன் என்னும் புனைப்பெயரில் கவிதை, கதை, கட்டுரைகள் எழுதியவர். நாட்டுப்புற எழுத்தாளர் கி.ரா. வின் இலக்கிய வாரிசாக அறியப்பட்டவர் கழனியூரன். கரிசல்காட்டு எழுத்தாளரான கி. இராசநாராயணனின் தொடர்பால் நாட்டார் வழக்காற்றுத் துறையில் ஈடுபாடு கொண்டார். திருநெல்வேலி மாவட்ட நாட்டார் கதைகளைத் தொகுத்ததாலும் அப்பகுதியின் வழக்காறுகளை தன்னுடைய படைப்புகளில் வெளிப்படுத்தியதாலும் இவரை தமிழிலக்கிய உலகம் இவரை செவக்காட்டு கதைசொல்லி என்கிறது.

எழுதிய நூல்கள் :

- நாட்டுப்புற நீதிக்கதைகள்
- கிராமங்களில் உலவும் கால்கள்
- தொலைக்காட்சி விளம்பரத்தின் உள் முகங்கள்

- வேரடி மண்வாசம்
- தாய்வேர்
- பன்னாட்டுச் சிறுவர் நாடோடிக் கதைகள்
- இரஷ்ய நாட்டு நாடோடிக் கதைகள்
- பன்னாட்டுச் சிறுவர் நாடோடிக் கதைகள்
- மண் மணக்கும் மனுஷங்க
- நடைவண்டி
- குறுஞ்சாமிகளின் கதைகள் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.

மறைவு :

கழனியூரன் விவசாயிகளுக்கும், தன்னுடைய நிலத்திற்கும் பூச்சிக்கொல்லி, ரசாயன மருந்துகள் வாங்கி தந்தமையால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். புற்றுநோய்க்கான தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்த போதிலும் 27.06.2017 அன்று சென்னையில் சிகிச்சை பலனின்றி காலமானார்.

19. எழுத்தாளர் கல்கி

இயற்பெயர் : இரா. கிருஷ்ணமூர்த்தி

பிறப்பு : செப்டம்பர் 9, 1899

பிறந்த ஊர் : புத்தமங்கலம், தஞ்சாவூர் மாவட்டம்

இறப்பு : டிசம்பர் 5, 1954

வாழ்க்கைக் குறிப்பு:

கல்கி அவர்கள் 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புத்தமங்கலம் என்னும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பப்பள்ளிப் படிப்பைத் தனது கிராமத்தில் முடித்த பிறகு அவர் திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921-ல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கிய போது, அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பள்ளிப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1922-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923-ல் அவர் நவசக்தி என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய முதல் புத்தகம் ஏட்டிக்குப் போட்டி 1927-ல் வெளியானது.

புதினங்கள் :

- கள்வனின் காதலி
- தியாகபூமி
- மகுடபதி
- அபலையின் கண்ணீர்
- சோலைமலை இளவரசி
- அலை ஓசை
- தேவகியின் கணவன்
- மோகினித்தீவு
- பொய்மான் கரடு

- புன்னைவனத்துப் புலி
- அமரதாரா

சிறு கதைகள் :

- சுபத்திரையின் சகோதரன்
- ஒற்றை ரோஜா
- தீப்பிடித்த குடிசைகள்
- புது ஓவர்சியர்
- வஸ்தாது வேணு
- அமர வாழ்வு
- சுண்டுவின் சந்நியாசம்
- திருடன் மகன் திருடன்
- இமயமலை எங்கள் மலை
- பொங்குமாங்கடல்
- மாஸ்டர் மெதுவடை
- புஷ்பப் பல்லக்கு
- பிரபல நட்சத்திரம்
- பித்தளை ஒட்டியாணம்
- அருணாசலத்தின் அலுவல்
- பரிசல் துறை
- ஸுசீலா எம். ஏ.

- கமலாவின் கல்யாணம்
- தற்கொலை
- எஸ். எஸ். மேனகா
- சாரதையின் தந்திரம்
- கவர்னர் விஜயம்
- நம்பர்
- ஒன்பது குழி நிலம்
- புன்னைவனத்துப் புலி
- திருவழுந்தூர் சிவக்கொழுந்து
- ஜமீன்தார் மகன்
- மயிலைக் காளை
- ரங்கதுர்க்கம் ராஜா
- இடிந்த கோட்டை
- மயில்விழி மான்
- நாடகக்காரி
- தப்பிலி கப்
- கணையாழியின் கனவு
- கேதாரியின் தாயார் என 120 சிறுகதைகளை எழுதியுள்ளார்.

விருது:

1953 - சங்கீத கலாசிகாமணி விருது

20. எழுத்தாளர் க. பூரணச்சந்திரன்

பெயர் : க. பூரணச்சந்திரன்

பிறப்பு : மே 14, 1949

பிறந்த ஊர் : ஆர்க்காடு, வேலூர் மாவட்டம்

பட்டம் : தமிழ் இலக்கியத்தில் முனைவர் பட்டம்

வாழ்க்கை வரலாறு:

க. பூரணச்சந்திரன் ஒரு தமிழ் எழுத்தாளர் ஆவார். இலக்கிய விமர்சனம், கோட்பாட்டு ஆய்வுகள் ஆகியவற்றில் இவரது பங்களிப்புகள் முக்கியமானவையாக இருக்கும். தமிழ் இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர் திருச்சிராப்பள்ளி, பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ்த்துறையில் ஆசிரியராகவும் துறைத்தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

மார்க்சிய சிந்தனையுடன் கூடிய நல்ல திறனாய்வாளர். இலக்கியக் கொள்கையில் மிகுந்த ஆர்வம் காட்டி நூல்கள் பல எழுதியுள்ளார். இதழியல் துறையிலும் பணியாற்றி, அத்துறையிலும் நூல்கள் எழுதியுள்ளார். காலச்சுவடு, நிகழ், தமிழ் நேயம் உள்ளிட்ட பல இலக்கிய இதழ்களில் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

பல கருத்தரங்குகளை நடத்தி, நூல்களையும் தொகுத்துள்ளார். திருச்சியில் (1989) முதன்முதலில் பாதல் சர்க்காரின் பெயரால் நாடகப்பட்டறை நடத்தியவர். திருச்சியில் வாசகர் அரங்கம்,

திருச்சி நாடக சங்கம், சினிஃபோரம் (கலைத் திரைப்படங்களைக் காண்பதற்கான திரைப்படக் கழகம்) ஆகியவற்றில் பங்கேற்று, இத்துறைகளில் இளைஞர்களை முன்னேற்ற முயற்சி எடுத்தவர். பணிநிறைவுக்குப் பின் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் எமரிடஸ் பேராசிரியராகப் பணியாற்றியதோடு, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வு வரலாற்றினை வரைந்து கொடுத்தவர்.

சமுதாயத்தின்பால் தெளிந்த சிந்தனையோடு, அதன் வளர்ச்சிக்கு முற்போக்குச் சிந்தனைகளுடன் தன் முழு உழைப்பையும் ஓயாது அளித்து வருபவர். கல்லூரி வகுப்பறைகளாக இருப்பினும், கருத்தரங்குகளாக இருப்பினும் இவரது சொற்பொழிவுகள் தேர்ந்த ஞானத்தின் வெளிப்பாடு. தக்க தகவுடைய சான்றுகளுடன் ஐயமற விளக்கம் தரும் ஆற்றல் கொண்டவர். நல்ல விமர்சகர், சிறந்த மொழி பெயர்ப்பாளர்.

2015 ஆம் ஆண்டு இவர் பெயரில் திறனாய்வு அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் இவர் மாணவர்களுக்கு திறனாய்வு மற்றும் பல்வேறு துறைகளில் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகிறார்.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள தி.சு. நடராசன் அறக்கட்டளை இவருடைய இலக்கிய திறனாய்வு பங்களிப்பையும் அளப்பரிய செயல்களையும் பாராட்டி பிப்ரவரி 2018இல் திறனாய்வுச் செம்மல் என்ற விருதையும் பதினைந்தாயிரம் ரூபாய் பரிசையும் கொடுத்து கவுரவப்படுத்தியுள்ளது.

நூல்கள் :

- அமைப்பு மைய வாதமும், பின்னமைப்பு வாதமும்
- பத்திரிகை, தலையங்கம், கருத்துரை
- தொடர்பியல் கொள்கைகள்

- தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு
- இந்திய மொழிகள் ஓர் அறிமுகம்
- நவீன மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள்
- இலக்கியப் பயணத்தில் சில எதிர்ப்பாடுகள்
- கவிதையியல்
- கதையியல்
- கவிதைமொழி தகர்ப்பும் அமைப்பும்
- தமிழ் இலக்கியத்தில் மேற்கத்தியக் கொள்கைகளின் தாக்கம்
- பொருள்கோள் நோக்கில் தொல்காப்பியம்

மொழிபெயர்த்த நூல்கள்:

- குழந்தையின் வாழ்க்கையில் முதல் 365 நாட்கள்
- மனித உரிமைகள் பற்றிய ஐ.நா. அறிக்கை
- சிறார் உரிமை பற்றிய ஐ.நா. அறிக்கை
- விஷன்ஸ் கையேடு-மனித உரிமைகளும் குடியுரிமையும்
- விஷன்ஸ் கையேடு-உள்ளூர் மற்றும் உலகளாவிய பிரச்சினைகள்
- உலகமயமாக்கல்

விருதுகள் :

- 2011 - ஆனந்தவிகடன் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது
- 2015 - கு. சின்னப்ப பாரதி அறக்கட்டளை சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது
- 2016 - சாகித்ய அகாதெமி விருது
- 2017 - சிறந்த பேராசிரியர்-சாதனையாளர் விருது
- திறனாய்வுச் செம்மல் விருது (தி.சு. நடராசன் அறக்கட்டளை, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்)
- 2017 - இந்தியாவின் தலைசிறந்த இலக்கிய மேம்பாட்டு அமைப்பான சாகித்ய அகாதமி விருது

21. எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன்

பெயர் : எஸ். ராமகிருஷ்ணன்

பிறப்பு : ஏப்ரல் 13, 1966

பெற்றோர் : சண்முகம், மங்கையர்க்கரசி

பிறந்த ஊர் : மல்லாங்கிணர், விருதுநகர் மாவட்டம்

வாழ்க்கை குறிப்பு:

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள மல்லாங்கிணற்றைச் சொந்த ஊராகக் கொண்ட இவரது பெற்றோர் சண்முகம், மங்கையர்க்கரசி ஆகிய தம்பதியருக்கு மகனாய் பிறந்தவர். இவரது தந்தைவழித் தாத்தா திராவிட இயக்கத்தில் பற்றுடையவர். தாய்வழித் தாத்தா சைவ சமயப் பற்றுடையவர். இவ்விரு வீடுகளிலும் இலக்கியங்கள், சமூகச் சிந்தனைகளைப் படித்தும், பேசியும் வரும் சூழல் நிலவியதாகக் குறிப்பிடுகிறார். ஆங்கில இலக்கியம் பயின்று அதில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளத் தொடங்கி இடையில் கைவிட்டிருக்கிறார். தற்சமயம் மனைவி சந்திரபிரபா, குழந்தைகள் ஹரி பிரசாத், ஆகாஷ் ஆகியோருடன் சென்னையில் வசித்து வருகிறார்.

இலக்கியச் செயற்பாடு :

இவரது முதல் கதையான பழைய தண்டவாளம் கணையாழியில் வெளியாகியிருக்கிறது. 1984இல் எழுதத் தொடங்கிய இவரது எழுத்துக்கள் ஐம்பதிற்கும் கூடிய எண்ணிக்கையில் நூல்வடிவம் பெற்றுள்ளன. ஆனந்த விகடன் இதழில் இவர் எழுதிய துணையெழுத்து, கதாவிலாசம், தேசாந்திரி, கேள்விக்குறி ஆகிய தொடர்கள் தீவிர இலக்கிய வட்டாரம் தாண்டி பரவலான வாசகப் பரப்பை இவருக்கு ஈட்டித் தந்திருக்கின்றன. இவரது சிறுகதைகள் ஆங்கிலம், இடாய்ச்சு, பிரான்சியம், கன்னடம், வங்காளம், இந்தி, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அட்சரம் என்ற இலக்கிய இதழின் ஆசிரியராக இருந்து எட்டு இதழ்கள் வரை வெளியிட்டிருக்கிறார்.

நூல்கள் :

- பதேர் பாஞ்சாலி - நிதர்சனத்தின் பதிவுகள்
- அயல் சினிமா

- உலக சினிமா
- பேசத்தெரிந்த நிழல்கள்
- இருள் இனிது ஒளி இனிது
- பறவைக் கோணம்
- சாமுராய்கள் காத்திருக்கிறார்கள்

புதினங்கள் :

- உப பாண்டவம்
- நெடுங்குருதி
- உறுபசி
- யாமம்
- துயில்
- நிமித்தம்
- சஞ்சாரம்
- இடக்கை
- பதின்
- ஒரு சிறிய விடுமுறைக்கால காதல் கதை

வரலாறு :

- எனது இந்தியா
- மறைக்கப்பட்ட இந்தியா

பணியாற்றிய தமிழ் திரைப்படங்கள் :

- சண்டக்கோழி
- பாகுபலி
- ஆல்பம்
- பாபா
- தாம்தூம்
- பீமா
- உன்னாலே உன்னாலே
- கர்ண மோட்சம்
- மோதி விளையாடு
- சிக்கு புக்கு
- அவன் இவன்
- யுவன் யுவதி

விருதுகள் :

- தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சிறந்த நாவல் விருது
- ஞானவாணி விருது
- தமிழ் இலக்கியத் தோட்ட அமைப்பு வழங்கிய புனைவு இலக்கிய

- ஈரோடு சிகேகே அறக்கட்டளை வழங்கிய சிகேகே இலக்கிய விருது
- சாம்சங் இந்தியா நிறுவனமும் சாகித்ய அகாதமியும் இணைந்து ஆண்டுக்கு 8 இந்திய மொழிகளில் சிறந்த இலக்கியப் பங்களிப்பைச் செய்தவர்களுக்கு தாகூர் இலக்கிய விருதினை 2009ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கி வந்தன.
- தமிழுக்கான தாகூர் இலக்கிய விருது
- கோவை கண்ணதாசன் கழகம் வழங்கிய இலக்கிய விருது
- கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கிய இயல் விருது
- சஞ்சாரம் என்ற நாவலை எழுதியமைக்காக 2018 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது.

22. எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி

பிறப்பு : ஜூலை 10, 1930

சொந்த ஊர் : கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

வாழ்க்கை வரலாறு :

இந்திரா பார்த்தசாரதி தமிழகத்தின் கும்பகோணத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் எழுத்தாளர் ஆவார். இந்தியாவின் உயரிய இலக்கிய விருதுகளில் ஒன்றான சாகித்ய அகாதமி விருது பெற்ற தமிழ்

எழுத்தாளர்களில் ஒருவர். இவர் 40 ஆண்டு காலம் டெல்லி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். இது தவிர போலந்து நாட்டில் வார்சா நகரில் அமைந்துள்ள வார்சா பல்கலைக்கழகத்தில் இந்தியத் தத்துவமும் பண்பாடும் கற்பிக்கும் ஆசிரியராகவும் இருந்தார். 17 புதினங்கள், 6 சிறுகதைத் தொகுப்புகள் எனப் பல படைப்புக்கள் படைத்துள்ளார். சில நாடகங்களும் படைத்துள்ளார். சாகித்ய அகாதமி விருது, தமிழக அரசு விருது, சரஸ்வதி சம்மன் போன்ற பல விருதுகளைப் பெற்றவர்.

கல்வி :

இந்திரா பார்த்தசாரதி கும்பகோணத்தில் தன்னுடைய பள்ளிப் படிப்பை நிறைவு செய்தார். அப்பள்ளியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிய எழுத்தாளர் தி. ஜானகிராமனிடம் இவர் பயின்றார்.

பணி :

தில்லி பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் 1960ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வந்தார். பின்னர் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள சங்கர்தாஸ் சுவாமிகள் நாடகப் பள்ளியில் நிகழ்கலைத் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

படைப்புகள் :

இவர் முதலில் ஆனந்த விகடன் போன்ற கிழமை இதழ்களில் (வார இதழ்களில்) எழுதத் தொடங்கினார்.

பின்னர் தீபம், கல்கி, கணையாழி ஆகிய இதழ்களில் எழுதி வந்தார். மழை நாடகம் இவர் படைத்த முதல் நாடகம் ஆகும். நிலம் என்னும் நல்லாள் எனும் தலைப்பில் நாவலாக எழுதிப், பின்னர் நண்பர் ஒருவர் நாடகமாக எழுதச் சொன்னதால் நாடகமாக

எழுதினார். பிற்காலத்தில் இவர் எழுதிய நந்தன் கதை, ராமானுஜர், ஔரங்கசீப் என்னும் நாடகங்களும், ஏசுவின் தோழர்கள் போன்ற படைப்புகளும் நல்ல வரவேற்பைப் பெற்றன.

நாடக நூல்கள் :

- மழை
- போர்வை போர்த்திய உடல்கள்
- கால எந்திரம்
- நந்தன் கதை
- ஔரங்கசீப்
- ராமானுஜர்
- கொங்கைத்தீ
- பசி
- கோயில்
- இறுதியாட்டம் - சேக்சுபியர் எழுதிய கிங் லியர் நாடகத்தின் தமிழாக்கம்
- புயல் - சேக்சுபியர் எழுதிய டெம்பஸ்ட் நாடகத்தின் தமிழாக்கம்
- இந்திரா பார்த்தசாரதி நாடகங்கள்

விருது :

- சரஸ்வதி சம்மன்

- சாகித்ய அகாதமி (குருதிப்புனல் நூலுக்காக, 1977)
- பாரதிய பாஷா பரிஷத்
- பத்ம ஸ்ரீ விருது

23. எழுத்தாளர் ஆதவன்

இயற்பெயர் : கே. எஸ். சுந்தரம்

பிறப்பு : மார்ச் 21, 1942

இறப்பு : ஜூலை 19, 1987

பிறந்த ஊர் : கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம்

வாழ்க்கை வரலாறு :

ஆதவன் 1942 ஆம் ஆண்டில் கல்லிடைக்குறிச்சியில் பிறந்தவர். இவருடைய மனைவியின் பெயர் ஹேமலதா சுந்தரம், பிள்ளைகள் சாருமதி, நீரஜா. இந்திய இரயில்வேயில் சில ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, தில்லியில் உள்ள நேஷனல் புக் டிரஸ்டின் தமிழ்ப் பிரிவின் துணையாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். அறுபதுகளில் எழுதத் துவங்கி, தமிழ்ச் சிறுகதை உலகில் பல குறிப்பிடத் தக்க சாதனைகளை நிகழ்த்தியவர். இவரது படைப்புகள் பல இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், பிரெஞ்சு, உருசியம் உள்ளிட்ட உலக மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தாஜ்மகாலில் பௌர்ணமி இரவு என்கிற கதை ஆனந்த விகடனில் முத்திரைக் கதையாகப் பிரகாசமானது.

சிறுகதைகள் :

- கனவுக்குமிழிகள்

- கால் வலி
- ஒரு அறையில் இரண்டு நாற்காலிகள்
- புதுமைப்பித்தனின் துரோகம்
- முதலில் இரவு வரும்
- நிழல்கள்

புதினம் :

- காகித மலர்கள்
- என் பெயர் ராமசேஷன்

விருதுகள் :

மரணத்திற்கு பின் 1987ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது முதலில் இரவு வரும் என்ற சிறுகதைக்கு வழங்கப்பட்டது.

24. எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்சினி

பிறப்பு : அக்டோபர் 05, 1962

பெற்றோர் : கவிஞர் ஆ. கணபதி புலவர் - சுப்புலட்சுமி

சொந்த ஊர் : பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்

வாழ்க்கை குறிப்பு :

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டையில் 05.10.1962 அன்று பிறந்தார். சென்னை சாரதா வித்யாலயாவில் பள்ளிப்படிப்பும், எத்திராஜ் கல்லூரியில் கல்லூரிப் படிப்பும் முடித்து

அண்ணா பல்கலைக்கழகத்தில் இளம்முனைவர் பட்டமும் ஆங்கில இலக்கியத்தில் பெற்றுள்ளார். இவரின் கணவர் கவிஞர் பால ரமணி ஆவார். இவர்களுக்கு ஒரு மகனும், ஒருமகளும் உள்ளனர். ஒரு தமிழ் மொழி கவிஞரும், சிறுகதை எழுத்தாளரும், நாவலாசிரியரும் ஆவார். தற்போது அவர் கோயம்புத்தூர் பொதிகை தொலைக்காட்சி ஒளியலை வரிசையின் தலைமை செயலராகப் பணியாற்றி வருகிறார்.

தற்கால பெண் படைப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர். சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் நிகழ்ச்சி நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார். கவி செம்மல் மற்றும் எழுத்துலக சிற்பி என்ற பட்டங்கள் அவருக்கு வழங்கப்பட்டது. சென்னை சிறீ சாரதா வித்யாலயா பள்ளியில் படித்தார், அப்பள்ளியில் சிறந்த மாணவர் விருது பெற்றார்.

எழுதிய நூல்கள் :

- சுருதி பிசகாத வீணை
- விடிவைத் தேடி
- புதிய திருப்பாவை

புதினங்கள் :

- தகனம்
- கனவுகள் கைப்பிடிக்குள்
- முதல் ஒளிபரப்பு ஆரம்பம்
- தாளம் தப்பிய தாலாட்டு

விருதுகள் :

- கவிதைகளுக்காக 2000-ம் ஆண்டு கவிஞர் வைரமுத்து விருது
- தோஷம் சிறுகதைக்காக லில்லி தேவசிகாமணி விருது
- உண்டியல் கதைக்காக பாவலர் முத்துசாமி விருது
- கழிவு சிறுகதைக்காக இலக்கியச்சிந்தனை விருது
- சுயம்பேசும் கிளி கவிதைத் தொகுப்பிற்காக நாகப்பன் ராஜம்மாள் விருது
- துகனம் புதினத்திற்காக காசியூர் ரங்கம்மாள் விருது

25. எழுத்தாளர் அரவிந்தன் நீலகண்டன்

பிறப்பு : ஜூன் 16, 1971

பிறந்த ஊர் : நாகர்கோவில்

வாழ்க்கைக் குறிப்பு :

அரவிந்தன் நீலகண்டன் ஜூன் 16, 1971 அன்று நாகர்கோவிலில் பிறந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உளவியலில் முதுகலைப் பட்டமும், மதுரை காமாராஜர் பல்கலைக்கழகத்தில் பொருளாதார பட்டமும் பெற்றுள்ளார்.

திண்ணை இணைய இதழில் இந்தியவியல் மற்றும் அறிவியல் கட்டுரைகளை எழுதத் தொடங்கியதிலிருந்து பொது வெளியில் அறிமுகமானார். ஆசிய செய்திகள் தொடர்பாக பத்தி எழுத்தாளராக

யு.பி.ஐ. (UPI) இணையதளத்தில் தொடர்ந்து எழுதி வந்தார். பதிப்பிக்கப்பட்ட புத்தகங்களோடு கூட, தினமணி ஜஃஷன், சொல்வனம், தமிழ்ப் பேப்பர் மற்றும் திண்ணை இணைய இதழ்களில் தொடர்ந்து எழுதி வருகிறார். உலகின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த கல்வியிலாளர்கள் மற்றும் தனிப்பட்ட அறிஞர்கள் பங்குபெறும் சிருஷ்டி மதுரை என்ற அமைப்பில் வழி நடத்துபவர்களுள் ஒருவராக உள்ளார். கோபி சங்கரின், பாலியல் வேறுபாடுகள் குறித்து தமிழில் எழுதப்பட்ட முதல் புத்தகம் வெளியிடும் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

அரவிந்தன் நீலகண்டன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதும் எழுத்தாளர். ராஜீவ் மல்கோத்ரா உடன் இணைந்து இவர் எழுதிய உடையும் இந்தியா எனும் நூல் அதிகம் கவனிக்கப்பட்ட படைப்பாகும். ஆழி பெரிது வேதகாலப் பண்பாடு குறித்து அரவிந்தன் எழுதியுள்ள ஓர் ஆய்வு நூல். இது தமிழ்ப் பேப்பர் என்ற இணைய இதழில் தொடராக வெளிவந்தது. இணைய இதழில் தொடராக வெளிவந்தபோது மிகப்பெரும் வரவேற்பையும் அதைவிடப் பெரிய சர்ச்சைகளையும் எதிர் கொண்டது.

கதைகள், கட்டுரைகள் மற்றும் நூல்கள் எழுதுவதோடு வலம் என்ற மாத இதழின் பொறுப்பாசிரியர்களில் ஒருவராகவும் செயல்பட்டு வருபவர். மேலும் ஸ்வராஜ்யா மற்றும் தமிழ் ஹிந்து இணையதளங்களின் பதிப்பாசிரியர்களில் ஒருவராகவும் அவற்றின் படைப்புகளில் பங்கெடுப்பவராகவும் உள்ளார். உலகின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த கல்வியிலாளர்கள் மற்றும் தனிப்பட்ட அறிஞர்கள் பங்குபெறும் சிருஷ்டி மதுரை என்ற அமைப்பில் வழி நடத்துபவர்களுள் ஒருவராக உள்ளார்.

எழுதிய நூல்கள் :

- உடையும் இந்தியா
- ஆழி பெரிது - வேதப் பண்பாடு குறித்த உண்மையான தேடல்

- இந்திய அறிதல் முறைகள் - நவீன அறிவியல் புலங்களைப் புரிந்து கொள்ள
- நம்பக்கூடாத கடவுள்
- நரேந்திர மோடி புதிய இரும்பு மனிதர்
- பஞ்சம், படுகொலை, பேரழிவு, கம்யூனிஸம்
- இந்துத்துவச் சிறுகதைகள்
- இந்துத்துவம் ஓர் எளிய அறிமுகம்
- கொஞ்சம் தேநீர் கொஞ்சம் இந்துத்துவம்
- மோடியின் குஜராத் - இந்தியாவின் வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரி

26. எழுத்தாளர் அம்பை

இயற்பெயர் : சி. எஸ். லட்சுமி

பிறப்பு : 1944

கல்வி நிலையம் : ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புது டில்லி

பட்டம் : Ph.D

ஆங்கில நூல்கள் :

இவர் SPARROW என்ற அமைப்பை நிறுவி அதன் இயக்குநராக செயல்பட்டு வருகிறார். டாக்டர் சி. எஸ். லட்சுமி என்ற தன்னுடைய இயற்பெயரில் தி இந்து, தி எக்னாமிக்ஸ் அண்ட்

பொலிடிக்கல் வீக்லி, தி டைம்ஸ் ஆஃப் இந்தியா போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அவ்வப்போது எழுதி வருகிறார்.

இயற்றிய நூல்கள் :

- அந்தி மாலை (நாவல்)
- சிறகுகள் முறியும் (1976) - (முதலாவது தொகுதி - ஓர் பெண்ணின் வாழ்வில் ஏற்படும் பலவிதமான சம்பவங்களை சம்பிரதாயங்களை பேசும் கதைகள்)
- வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை
- காட்டில் ஒரு மான்
- சக்கர நாற்காலி
- ஸஞ்சாரி
- தண்ணியடிக்க
- வற்றும் ஏரியின் மீன்கள்
- பயணப்படாத பாதைகள் (ஓவியம், நாடகம், பாரம்பரிய நடனத்துறைகளில் ஈடுபட்ட பெண்களின் வாய்மொழி வரலாற்றுப்பதிவு)
- சொல்லாத கதைகள் (சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றிய பெண்கள், தலித் எழுத்தாளர்கள் ஆகியவர்களின் வாய்மொழி வரலாற்றுப்பதிவு)

விருது :

தமிழில் பெண்ணியத்தின் முதல் குரலாக அறியப்படும் அம்பைக்கு 2008 வருடத்துக்கான இயல் விருது வழங்கப்பட்டது.

27. எழுத்தாளர் அசோகமித்திரன்

பிறப்பு : செப்டம்பர் 22, 1931

இயற்பெயர் : தியாகராஜன்

இறப்பு : மார்ச் 23, 2017

சொந்த ஊர் : செகந்திராபாத், ஆந்திரப் பிரதேசம்

வாழ்க்கை வரலாறு :

தமிழின் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். தியாகராஜன் என்ற இயற்பெயர் கொண்ட அசோகமித்திரன் 1931 ஆம் ஆண்டு ஆந்திர பிரதேசத்தில் உள்ள செகந்திராபாத் நகரத்தில் பிறந்தவர். தந்தையின் மறைவிற்கு பிறகு தனது 21ஆம் வயதில் சென்னைக்கு குடியேறினார். எளிமையும் மெல்லிய நகைச்சுவையும் கொண்டது இவருடைய எழுத்து. தமிழ் இலக்கியத்துக்கு உலக அளவில் அங்கீகாரம் பெற்றுத் தந்தவை இவரது கதைகள். அமெரிக்க இலக்கியங்களைத் தமிழில் அறிமுகம் செய்த தனிப்பெருமை இவருக்குரியது. இவரது நாவல்கள் ஆங்கிலம், இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கில நாளிதழ்களில் தொடர்ந்து எழுதிவந்த அசோகமித்திரன், ஐக்கிய அமெரிக்காவில் அயோவா பல்கலைக்கழகத்தில் எழுத்தாளர்களுக்கான சிறப்புப் பயிலரங்கில் கலந்து கொண்டவர். 1996 இல் அப்பாவின் சிநேகிதர் சிறுகதை தொகுப்புக்காக சாகித்ய அகாதமி விருது பெற்றவர். இவரது படைப்புகள் பெரும்பாலும் சென்னை அல்லது ஐதராபாத்தை கதைக்களமாக கொண்டு

அமைந்திருக்கும். சாதாரணமான கதாபாத்திரங்களின் மூலம் அசாதாரண கருத்துக்களை வெளிப்படுத்துவதாக இவரது படைப்புகள் அமைந்திருக்கும் என்று ஒரு கருத்து உண்டு. இவர் 2017 மார்ச் 23 அன்று சென்னை வேளச்சேரியில் உள்ள தன் மகன் வீட்டில் 86 ஆம் அகவையில் இறந்தார்.

சாதனை :

ஆங்கில நாளிதழ்களில் தொடர்ந்து எழுதிவந்த அசோகமித்திரன், ஐக்கிய அமெரிக்காவில் அயோவா பல்கலைக்கழகத்தில் எழுத்தாளர்களுக்கான சிறப்புப் பயிலரங்கில் கலந்து கொண்டவர்.

விருதுகள் :

- அப்பாவின் சிநேகிதர் சிறுகதை தொகுப்புக்காக சாகித்ய அகாதமி விருது
- லில்லி நினைவுப் பரிசு
- இராமகிருஷ்ணா ஜெய்தயாள் அமைதி விருது
- அக்ட்சரா விருது
- எம். ஜி. ஆர் விருது
- என். டி. ஆர். தேசிய இலக்கிய விருது

சிறுகதைகள் :

- அப்பாவின் சிநேகிதர்
- உண்மை வேட்கை
- காலமும் ஐந்து குழந்தைகளும்

- தந்தைக்காக
- நாடகத்தின் முடிவு
- பிப்லப் சௌதுரியின் கடன்
- முறைப்பெண்
- வாழ்விலே ஒருமுறை
- விமோசனம்

நாவல்கள் :

- ஆகாசத்தாமரை
- ஒற்றன்
- கரைந்த நிழல்கள்
- தண்ணீர்
- பதினெட்டாவது அட்சக்கோடு
- மானசரோவர்

குறுநாவல்கள் :

- இருவர்
- விடுதலை
- தீபம்
- விழா மாலைப் போதில்

28. எழுத்தாளர் அ. முத்துலிங்கம்

பிறப்பு : ஜனவரி 19, 1937

பெற்றோர் : அப்பாத்துரை - ராசம்மா

இறப்பு : மார்ச் 23, 2017

சொந்த ஊர் : இலங்கை

வாழ்க்கை வரலாறு:

19 ஜனவரி, 1937 ஆண்டில் இலங்கை யாழ்ப்பாண நகருக்கு அருகாமையில் உள்ள கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர். அப்பாத்துரை, ராசம்மா தம்பதிகளுக்கு பிறந்த ஏழு பிள்ளைகளில் ஐந்தாவது பிள்ளை ஆவார். கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்ற இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் படிப்பை முடித்தபின் இலங்கையில் பட்டயக் கணக்காளராகவும், இங்கிலாந்தின் முகாமைத்துவக் கணக்காளராகவும் பட்டம் பெற்றவர். பணி நிமித்தமாக பல நாடுகளுக்கு பயணித்திருக்கும் இவர் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் உலக வங்கியிலும், ஐக்கிய நாடுகள் அவையின் OPS பிரிவிலும் முக்கியமான பதவிகளில் பணியாற்றி தற்சமயம் புலம் பெயர்ந்து தன் மனைவி கமலரஞ்சினியுடன் கனடாவில் வசித்து வருகிறார்.

இலக்கியப் பணிகள் :

இலங்கை தினகரன் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற அக்கா சிறுகதையை தலைப்பாகக் கொண்ட இவரின் முதல் தொகுப்பு திரு க.கைலாசபதியின் அணிந்துரையுடன் 1964ல் வெளியானது. நீண்டகால இடைவெளிக்கு பிறகு 1995ல் மறுபடியும் எழுதத் தொடங்கி சிறுகதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள்,

நேர்காணல்கள், புத்தக மதிப்புரைகள், நாடக, சினிமா விமர்சனங்கள் என்று எழுதி வருகிறார். இருபதுக்கு மேற்பட்ட வெளிநாட்டு ஆங்கில எழுத்தாளர்களுடன் இவர் நடத்திய நேர்காணல் கட்டுரைகள் தொகுப்பாக விரைவில் வெளிவர இருக்கிறது. தற்போது, கனடாவில் பதிவு செய்யப்பட்ட தமிழ் இலக்கியத் தோட்டம் (Tamil Literary Garden) என்னும் அறக்கட்டளை குழுமத்தில் முக்கிய உறுப்பினராக செயலாற்றுகிறார். கடந்த இரண்டரை வருடங்களாக, 2015ல் இருந்து ஹார்வார்ட் தமிழ் இருக்கை அமைப்பின் உறுப்பினராகச் செயலாற்றுகிறார். 2018 மார்ச் 5ம் தேதி ஹார்வார்ட் விதித்த இலக்கான 6 மில்லியன் டாலர்கள் உலகம் முழுவதும் நன்கொடையாக திரட்டப்பட்டு விட்டதால் தமிழ் இருக்கை உறுதியானது.

விருதுகள் :

- வடக்கு வீதி - சிறுகதைத் தொகுப்புக்கு இலங்கை அரசு சாகித்ய பரிசு
- கனடா தமிழர் தகவல் - நாற்பது ஆண்டு தமிழ் இலக்கியச் சாதனை விருது
- திருப்பூர் தமிழ்ச் சங்கம் விருது
- குதிரைக்காரன் - சிறுகதைத் தொகுப்புக்கு சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்கான விகடன் விருது
- எஸ். ஆர். எம் பல்கலைக்கழகம் தமிழ்ப்பேராய விருது
- மார்க்கம் நகரசபை இலக்கிய விருது

சிறுகதை தொகுப்பு :

- அக்கா

- திகடசக்கரம்
- வம்சவிருத்தி
- வடக்கு வீதி
- மகாராஜாவின் ரயில் வண்டி
- ஒலிப்புத்தகம்
- அமெரிக்கக்காரி
- குதிரைக்காரன்
- கொழுத்தாடு பிடிப்பேன்
- பிள்ளை கடத்தல்காரன்
- ஆட்டுப்பால் புட்டு
- அ. முத்துலிங்கம் சிறுகதைகள் முழுத் தொகுப்பு

29. எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன்

பிறப்பு : நவம்பர் 13, 1958

இயற்பெயர் : பி சௌந்தர்ராஜன்

பிறந்த ஊர் : மதுரை

வாழ்க்கை வரலாறு :

இவர் ஒரு தமிழக எழுத்தாளர் ஆவார். சிறுகதைகள், நாவல்கள், தொலைக்காட்சி தொடர்கள் மற்றும் திரைக்கதைகள் எழுதிவரும் இவர் தமிழ் வாசகர்களால் நன்கு அறியப்பட்டவர். இவர் தென்னிந்திய இந்துமத பாரம்பரியம் மற்றும் புராண

இதிகாசங்களைக் கலந்து எழுதுவதில் வல்லவர். இவருடைய கதைகள் பொதுவாக அமானுட நிகழ்வு, தெய்வீக தலையீடு, மறுபிறவி, பேய்கள் போன்ற விஷயங்களை உள்ளடக்கியிருக்கும். இவர் கதைகள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் வாழும் மக்கள் தெரிவித்த உண்மை நிகழ்வுகளின் அடிப்படையிலும் அமைந்துள்ளன. இவருடைய இரண்டு அல்லது மூன்று புதினங்களாவது ஒவ்வொரு மாதமும் கிரைம் ஸ்டோரி மற்றும் இன்றைய கிரைம் நியூஸ் போன்ற பதிப்பாளர்களால் வெளியிடப்படுகின்றன.

படைப்புகள் :

- எங்கே என் கண்ணன்?
- கல்லுக்குள் புகுந்த உயிர்
- நீலக்கல் மோதிரம்
- சோமஜாலம்
- உன்னைக் கைவிடமாட்டேன்
- நந்தி ரகசியம்
- சதியை சந்திப்போம்
- தேவர் கோயில் ரோஜா
- மாய விழிகள்
- மாயமாகப் போகிறாள்
- துள்ளி வருகுது
- நாக பஞ்சமி

தொலைக்காட்சி தொடர்கள் :

- என் பெயர் ரங்கநாயகி
- சிவமயம்
- ருத்ர வீணை
- விடாது கருப்பு
- மர்ம தேசம்
- மாய வேட்டை
- சொர்ண ரேகை
- எதுவும் நடக்கும் (வானத்து மனிதர்கள் நாவல்)
- யாமிருக்க பயமேன்
- அத்தி பூக்கள்
- ருத்ரம்
- சிவ இரகசியம்

திரைக்கதைகள் :

- சிருங்காரம் (லவ் டான்ஸ்)
- ஆனந்தபுரத்து வீடு (பேய் வீடு)

தமிழ்நாடு அரசு பரிசு :

இவர் எழுதிய என் பெயர் ரங்கநாயகி எனும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் 1999 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதினம் வகைப்பாட்டில் மூன்றாம் பரிசு பெற்றிருக்கிறது.

30. எழுத்தாளர் தி.பரமேசுவரி

பிறப்பு : 1970

பிறந்த ஊர் : சென்னை

பணி : முதுகலை தமிழாசிரியர், எழுத்தாளர்

பட்டம் : தமிழ் இலக்கியத்தில் முனைவர் பட்டம்

இலக்கிய வகை :

இவர் பூங்குழலி மற்றும் திலீபா எனும் புனைப்பெயர்களிலும் கட்டுரைகள் மற்றும் கவிதைகளை எழுதியுள்ளார்.

கவிதைகள் வெளிவந்த இதழ்கள் :

- ஆனந்த விகடன்
- அவள் விகடன்
- பூங்குயில்
- பார்வை
- யாதும் ஊரே
- இளந்தமிழன்
- அணி
- நொச்சி மற்றும் உயிர்மை போன்ற இதழ்களில் பல கவிதைகள் வெளிவந்துள்ளன.

நூல்கள் :

இவர் பல நூல்களை பதிப்பித்தும், வெளியிட்டும் உள்ளார். அதில் சில வெளியிட்ட நூல்கள் :

- ம.பொ.சி. பார்வையில் பாரதி
- எனக்கான வெளிச்சம்
- ஓசை புதையும் வெளி

பதிப்பித்த நூல்கள் :

- ம.பொ.சி.யின் சிறுகதைகள்
- ம.பொ.சி.யின் சிலப்பதிகார விளக்கத் தெளிவுரை
- ம.பொ.சி.யின் தமிழன் குரல் - இதழ்த் தொகுப்பு
- இவர் எழுதிய எனக்கான வெளிச்சம் எனும் கவிதைக்கு திருப்பூர் கலை இலக்கியப் பேரவையில் பரிசு பெற்றுள்ளார்.

31. எழுத்தாளர் லீனா மணிமேகலை

லீனா மணிமேகலை தமிழ்க் கவிஞர், ஆவண நிகழ்படக் கலைஞர், சமூகச் செயற்பாட்டாளர். பெண்கள் உரிமைகள், பாலியல், சமூக ஒடுக்குமுறைகள், ஈழப் போராட்டம் உட்பட்டன இவரது கவிதைகளின் கருப்பொருள்களாக அமைகின்றன.

இயக்கிய ஆவண படங்கள் :

- தேவதைகள்

- பெண்ணாடி
- மாத்தம்மா
- பறை
- பலிபீடம்
- தீர்ந்து போயிருந்த காதல்

இயக்கிய திரைப்படங்கள் :

- செங்கடல் - இவையே இவரின் படைப்புகள் மற்றும் சிறப்புகள் ஆகும்.

32. எழுத்தாளர் ரஜினி பெத்துராஜா

ரஜினி பெத்துராஜா தமிழகத்தை சேர்ந்த பெண் எழுத்தாளர் ஆவார். குழந்தை இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்.

விருதுகள் :

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசு, இங்கிலாந்து அமெரிக்க நாடுகளின் பயகிராபிகல் சென்டர்கள் வழங்கிய சாதனைப் பெண்கள் விருது ராஜம், தமிழ்நேயம் ஆகிய இதழ்கள் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசு எனப் பல சிறப்புக்களைப் பெற்றவர்.

எழுதிய நூல்கள் :

- உலகம் எங்கள் குடும்பம்
- எட்டாவது அதிசயம்

- சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
- அந்நிய மண்ணில் இந்திய ஞானி
- குழந்தைகளுக்குக் குமாரசாமி ராஜா
- பிரசாதப் பூக்கள்
- கனாக் கண்டேன் தோழி
- யாரோ இல்லை எவரும்
- மயிலிறகாய் மாறலாம்

விருது மற்றும் பட்டங்கள் :

- உலகம் எங்கள் குடும்பம் பயண நாவலுக்காக தமிழக அரசின் பரிசு
- குழந்தை இலக்கியத்துக்கான அழ.வள்ளியப்பா விருது
- புதுவை எழுத்தாளர் சங்கம் அளித்த சிறுவர் இலக்கியச் செல்வி பட்டம்
- வெளி இணைப்புகள்
- இரஜினியுடன் ஒரு நேர்காணல் - போன்றவைகளே இவரது படைப்புகளும் சிறப்புகளும் ஆகும்.

33. எழுத்தாளர் சு. தமிழ்ச்செல்வி

பெற்றோர் : சுப்பிரமணி, முத்துலட்சுமி

பிறப்பு : 04.05.1971

பிறந்த ஊர் : கற்பகநாதர்குளம், திருவாரூர்.

வாழ்க்கை குறிப்பு :

கற்பகநாதர் குளத்தில் உள்ள தனியார் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். ஆறாம் வகுப்பு மற்றும் ஏழாம் வகுப்பை இடும்பாவனம் என்னும் ஊரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் முடித்தார். வேதாரணயத்திலிருக்கும் கஸ்தூரிபாய் கன்யா குருகுலத்தில் எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படித்த இவர் பின்னர் திருத்துறைப்பூண்டியில் உள்ள கல்லூரியில் தனது ஆசிரியர் பயிற்சியை முடித்தார். பின்னர் தான் படித்த பள்ளியிலேயே ஆசிரியராக ஆறு வருடம் பணிபுரிந்தார். இதற்கிடையிலேயே அஞ்சல் வழியில் பி.லிட், எம்.ஏ பட்டங்களையும் பெற்றார். இவருக்கு இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரனும் உள்ளார்கள். கவிஞர் கரிகாலன் என்பவரை திருமணம் செய்து கொண்ட இவருக்கு இரண்டு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் உள்ளார்கள். இவர் தற்போது விருத்தாச்சலம் அருகிலுள்ள கார்குடல் சிற்றூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

எழுதிய நூல்கள் :

- மாணிக்கம்
- அளம்
- பொன்னாச்சரம்
- ஆறுகாட்டுத்துறை
- கீதாரி மற்றும் கண்ணகி

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2002ம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் இவர் எழுதிய மாணிக்கம் எனும்

நூல் இடம் பெற்றுள்ளது. இதுவே இவரின் படைப்புகளும் சிறப்புகளும் ஆகும்.

34. எழுத்தாளர் ஜெயந்தி சங்கர்

இயற்பெயர் : ஜெயந்தி சங்கர்

பிறந்த ஊர் : மதுரை

பெற்றோர் : நாகசாமி ஐயர், கல்யாணி

பட்டபடிப்பு : இயற்பியல் பட்டம்

எழுதிய நூல்கள் :

கதைகள், கட்டுரைகள், நாவல் மற்றும் புதினங்கள் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவர் பல வகையான நூல்களை மொழிபெயர்த்துள்ளார்.

மொழிபெயர்த்த நூல்கள் :

- மிதந்திடும் சுயபிரதிமைகள் - சீனக் கவிதைகள்
- சூரியனுக்கு சுப்ரபாதம் - சுயமுன்னேற்றக் கட்டுரைகள்
- மீன் குளம் - சிறார் சீனக்கதைகள்
- என் தாத்தாவுக்கொரு தூண்டில் கழி - சீனத்துச் சிறுகதைகள்
  இறந்தவளுக்குத் திருமணம் - சீனத்துச் சிறுகதைகள்

கட்டுரைகள் :

- ஏழாம் சுவை

- பெருஞ்சுவருக்குப் பின்னே - சீனப் பெண்களின் வாழ்வும் வரலாறும்
- சிங்கப்பூர் வாங்க - விகடன் பிரசுரம்
- ச்சிங் மிங்
- கனவிலே ஒரு சிங்கம்
- கூட்டுக்குள் அலையும் தேனீக்கூட்டம்

புதினங்கள் :

- வாழ்ந்து பார்க்கலாம் வா
- நெய்தல்
- மனப்பிரிகை
- குவியம்
- திரிந்தலையும் திணைகள்

சிறுகதைகள் :

- நாலேகால் டாலர்
- பின் சீட்
- நியாயங்கள் பொதுவானவை
- மனுஷி
- திரைகடலோடி
- தூரத்தே தெரியும் வான்விளிம்பு

- முகப்புத்தகமும் சில அகப்பக்கங்களும்

விருதுகள் :

- கு.சின்னப்பாரதி இலக்கிய விருது
- ஜெயந்தன் படப்பிலக்கிய விருது
- கரிகாலன் விருது
- அரிமா சக்தி விருது
- திசையெட்டும் இலக்கிய விருது
- சிங்கப்பூர் இலக்கிய விருது

35. எழுத்தாளர் மதுமிதா

இயற்பெயர் : மஞ்சு ரெங்கநாதன்

பெற்றோர் : ரகுபதிராஜா - பாக்கியலட்சுமி

மதுமிதா என்ற மஞ்சு ரெங்கநாதன் ஒரு தமிழக எழுத்தாளர். கவிதை, சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்ட ஆவார். சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்ப்பு நூலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாடு, தென்காசியில் பிறந்து, இராஜபாளையத்தில் வாழ்ந்து, சென்னையில் வசிக்கிறார். சுதந்திரப் போராட்டத் தியாகி காந்தி அரங்கசாமி ராஜாவின் பேத்தி. கணவர் ரெங்கனாதராஜா. தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டாலும் தமிழில் எழுதிக் கொண்டிருப்பவர்.

எம்.ஏ ஆங்கில இலக்கியம், டிப்ளோமா இன் போர்ட் போலியோ மேனேஜ்மெண்ட் ஆகியவை கற்றவர். ஹிந்தி பிரவீன் உத்தரார்த் வரையும் சம்ஸ்கிருதத்தில் பட்டப் படிப்பும் படித்துள்ளார்.

மகாகவி பர்த்ரு ஹரியின் பொன்மொழிகள் இவருடைய முதல் நூல். சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார்.

இவர், சமூகப் பணிகளிலும் ஈடுபாடுள்ளவர். இரத்த தானம், கவுன்சிலிங், விழியிழந்தோருக்கு வாசித்தல், சிறுவர்களுக்கு கல்வி என இயங்கி வருகிறார். இராஜபாளையத்தில் இராஜபாளையம் தமிழ்நாடு அரசு பெண்கள், சிறுவர் நூலகம் அமைய முக்கிய காரணியாய் இருந்தவர் ஆவார்.

எழுதிய நூல்கள் :

- மஹாகவி பர்த்ருஹரி சுபாஷிதம்
- மௌனமாய் உன்முன்னே
- பர்த்ருஹரி சுபாஷிதம்
- தைவான் நாடோடிக் கதைகள்
- பாயுமொளி நீ எனக்கு
- வசீகரிக்கும் தூசி
- அக்கமகாதேவி வசனங்கள்
- காலம் புதியபார்வை
- இரவு - படைப்பாளிகளின் இரவுகள் குறித்த தொகுப்பு நூல்.
- மரங்கள் - படைப்பாளிகள் தங்களுடைய மரங்களுடன் இணைந்த சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்ட கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

- மேகதூதம் (2013) - மகாகவி காளிதாசரின்மேகதூதம், ருது சம்ஹாரம், சமஸ்கிருதத்திலிருந்து தமிழாக்கம்.
- பருவம் - படைப்பாளிகள் தங்களுடைய பருவங்களைக் குறித்து பகிர்ந்துகொண்ட கட்டுரைகளின் தொகுப்பு நூல்.
- தசாவதாரம் (2014) மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரக் கதைகள் (சிறுவர் கதைகள்)

வெளி இணைப்புகள் :

- நீங்கா இன்பம்
- மௌனமாய் உன் முன்னே
- நான்காவது தூண்

36. எழுத்தாளர் சே. கல்பனா

இவர் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் இளம் இலக்கியம், தமிழ் முதுகலைப் பட்டம், மொழியியல் பாடத்தில் முதுகலைப்பட்டம், தமிழில் ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளார். கட்டுரைகள் மற்றும் கவிதைகளை பல இணைய இதழ்களிலும் இவர் எழுதி வருகிறார்.

இவர் தற்போது கணிப்பொறி அறிவியலில் முதுகலை பட்டம் பயின்று வருகிறார்.

இவர் எழுதிய நூல்கள் பின்வருமாறு :

- திருக்குறள் - பரிதியாரின் உரைத்திறன்
- புறநானூற்றில் தமிழர் வாழ்வியல
- கணினியும் கன்னித்தமிழும்

37. எழுத்தாளர் தாட்சாயணி

இயற்பெயர் : பிரேமினி சபாரத்தினம்

புனைப்பெயர் : தாட்சாயணி

பிரேமினி சபாரத்தினம் ஒரு ஈழத்து எழுத்தாளர். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர். இவர் எழுதியதில் பல சிறுகதை, கவிதைப் போட்டிகளில் முதல் பரிசுகளை பெற்றுள்ளது.

தாட்சாயணி இலங்கையில் யாழ்ப்பாணம், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சாவகச்சேரியில் இந்து மகளிர் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி

கற்ற இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி ஆவார். பிராந்தியத் திட்டமிடலில் முதுமாணிப் பட்டமும் பெற்றவர்.

இவர் ஈழத்தின் போர்க்காலச் சூழ்நிலையில் முகிழ்ந்த எழுத்தாளர். யுத்தச் சூழ்நிலையில் வாழ்ந்து அதன் வாழ்வியல் நெருக்கடிகளை இலக்கியமாக்கியிருப்பவர். இவரது கவிதை ஒன்று 1993ல் சுபமங்களா வெளியிட்ட இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகி பலரது கவனத்தையும் பெற்றது.

நூல்கள் :

- ஒரு மரணமும் சில மனிதர்களும் சிறுகதைத் தொகுப்பு - ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை - ஞானம் விருது பெற்றது
- இளவேனில் மீண்டும் வரும் - சிறுகதைத் தொகுப்பு
- தூரப் போகும் நாரைகள் - சிறுகதைத் தொகுப்பு
- கடவுளோடு பேசுதல் - சில ஆன்மீகக் குறிப்புகள் - உரை நடை
- அங்கயற்கண்ணியும் அவள் அழகிய உலகமும் - சிறுகதைத் தொகுப்பு
- வெளி இணைப்புக்கள்
- வாசகர் வட்டம்
- தாட்சாயணியின் வலைப்பதிவு

38. எழுத்தாளர் சித்தி ஜுனைதா பேகம்

பெற்றோர் : எம். ஷரீப் பெய்க், முத்துகனி

பிறப்பு : 1917

இறப்பு : 19.03.1998

பிறந்த ஊர் : நாகூர்

இவர் எம். ஷரீப் பெய்க், முத்துகனி தம்பதிகளின் மூத்த புதல்வி ஆவார். இவரின் உடன் பிறந்தவர்கள் மொத்தம் நான்கு சகோதரர்கள் ஆவர். இவரின் மூத்த சகோதரர் சிறந்த பேச்சாளரும் பல மொழிகள் அறிந்த அறிஞருமான ஹுசைன் முனவ்வர் பெய்க் ஆவார். இரண்டாவது சகோதரர் காரைக்காலில் பால்யன் பத்திரிக்கையை வெற்றிகரமாக நடத்திய முஜீன் பெய்க் ஆவார். மற்ற இரண்டு சகோதரர்களும் இறந்து விட்டனர்.

தென் தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் குழுத் தலைவராக இருந்த மு.யூ. நவாபு சாகிபு மரைக்காயர் இவரின் தாத்தா ஆவார். இவர் தனது 12 வயதிலேயே திருமணம் செய்து கொண்டார். இவருக்கு சித்தி ஜபீரா, சித்தி ஹமீதா, சித்தி மஹ்மூதா, சித்தி சாதுனா என்று நான்கு குழந்தைகள் உள்ளனர். இவர் தனது 17வது வயதிலேயே விதவையானார்.

இவர் திருமணத்திற்குப் பிறகு தனது பதினாறாவது வயதில் எழுதத் தொடங்கினார். மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ள இவர் தாருஸ் இஸ்லாம் என்ற இதழை படித்து செந்தமிழை கற்றுக் கொண்டார். பிறகு நிறைய சிறுகதைகள், பெருங்கதைகள் எழுதியுள்ளார். 1929ம் ஆண்டு இவர் எழுதிய முதல் சிறுகதை தாருஸ் இஸ்லாம் என்ற இதழில் வெளிவந்தது.

இவர் தனது முதல் சிறுகதையை முஸ்லிம் பெண்களின் உரிமைக்காக போராடிய தாவூத் ஷாவிற்கு அனுப்பி வைத்தார். இதைக் கண்ட தாவூத் ஷாவிற்கு ஒரு பெண் எழுதிய சிறுகதை என்றதும் ஆனந்தம், ஆச்சரியம். முஸ்லிம் பெண்கள் கூட கதை எழுத தொடங்கி விட்டார்களா என்று பெருமிதம் கொண்டார். பிறகு அந்த கதையை தாருஸ் இஸ்லாம் என்ற இதழில் வெளியிட ஏற்பாடு செய்தார்.

எழுதிய புத்தகம் / நாவல்கள் :

- காதலா கடமையா
- செண்பகவல்லிதேவி அல்லது தென்னாடு போந்த அப்பாஸிய குலத்தோன்றல்
- மகிழம்பூ
- இவர் எழுதிய புத்தகங்கள் பின்வருமாறு
- மலைநாட்டு மன்னன்
- ஹலிமா அல்லது கற்பின் மாண்பு
- பெண் உள்ளம் அல்லது கணவனின் கொடுமை
- திரு நாகூர் அண்ணலின் திவ்ய மாண்பு
- காஜா ஹஸன் பசரீ

39. எழுத்தாளர் பாமா

பிறப்பு : 1958

இவர் தலித் இலக்கியம் படைக்கும் குறிப்பிடத்தக்க முன்னணி எழுத்தாளர் ஆவார். இவர் 1992 இல் எழுதிய தன்வரலாற்றுக் கூறுகளுடன் எழுதிய கருக்கு என்னும் புதினம் புகழ் பெற்றது. அதில் இவர் தலித் மக்கள் மொழியைப் பயன்படுத்தி எழுதியது இவருக்கு புதிய பாதையை வகுத்தது என கருதப்படுகின்றது. கன்னியராகிப் பின்னர் அப்பொறுப்பிலிருந்து விலகி ஆசிரியையாகப் பணிபுரிகிறார்.

தமிழகத்தில் அறுபதுகளில் பிறந்து இன்றும் ஆசிரியர் பணியாற்றும் பாமா தலித்திய நாவலாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர். இவரின் முதல் நாவலான கருக்கு தமிழின் முதல் தலித் இலக்கியத் தன்வரலாற்று நாவல் என அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்பட்ட ஒன்று. ஒரு பெண்ணாக, கிறித்தவப் பெண் துறவியாகத் தென்மாவட்ட கிராமம் ஒன்றில் தான் பட்ட அனுபவங்களே இவர் எழுதிய தன்வரலாற்று நாவலான கருக்கு ஆகும்.

வாழ்க்கையின் பல நிலைகளில் பனங்கருக்குப் போல என்னை அறுத்து இரணமாக்கிய நிகழ்வுகள், என்னை அறியாமையில் ஆழ்த்தி முடக்கிப் போட்டு மூச்சு திணற வைத்த அதீத சமுதாய அமைப்புகள், இவற்றை உடைத்தெறிந்து அறுத்தொழித்து விடுதலை பெறவேண்டும் என்று எனக்குள் எழுந்த சுதந்திரப் பிரளயங்கள். இவை சிதறடிக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எனக்குள் கொப்பளித்துச் சிதறிய குருதி வெள்ளங்கள் எல்லாம் சேர்ந்ததுதான் இப்புத்தகத்தின் கரு என கூறியுள்ளார்.

பாமாவின் முதல் நாவல் கருக்கு. தலித் மீதான சமூகத்தின் பார்வையை தனது சொந்த அனுபவங்கள் வழி பதிவு செய்கிறார். மற்ற சாதியினரிடம் இருக்கும் தீண்டாமை மனோபாவம், கிராம

நிகழ்ச்சிகளிலும், ஊர் திருவிழாக்களிலும் பங்கு கொள்ள முடியாது தனித்து விட பட்ட சோகங்கள், அக்காலகட்டத்தில் பள்ளி கல்லூரிகளில் தலித் மாணவர்கள் எதிர் நோக்கிய அவமானங்கள் என ரணங்களின் வேதனையாய் நீள்கிறது இவரின் படைப்பு.

ஜாதியை முன்வைத்து எதிர்நோக்கிய தடைகளையும் அவமானங்களையும் தாண்டி பள்ளி மற்றும் கல்லூரியில் தேர்ச்சி பெற்று தன் சமூகத்து குழந்தைகளுக்கு சேவை செய்யும் பொருட்டு கிறிஸ்தவ மடத்தில் இணைந்து பணியாற்றிய அனுபவங்களை கூறும் இடங்கள் முக்கியமானவை. பிற்படுத்த பட்டோருக்கென செயல்படும் கிறிஸ்துவ மடங்களிலும் தீண்டாமை கொடுமை நிகழ்வதை பாமா தனது நேரடி அனுபவங்களால் விவரிக்கும் பொழுது சிற்சில நம்பிக்கைகளும் தகர்கின்றன.

நூல்கள் :

- கருக்கு
- சங்கதி
- வன்மம்
- கிசும்புக்காரன்
- மனுசி

40. எழுத்தாளர் வேதா.இலங்காதிலகம்

பிறப்பு : ஏப்ரல் 3, 1947

பெற்றோர் : நகுலேசுவரர்

பிறந்த ஊர் : கோப்பாய், இலங்கை

பணி : ஆசிரியர் மற்றும் எழுத்தாளர்

இவர் இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர் ஆவார். கோப்பாய் எனும் ஊரில் பிறந்த வேதா, இலங்கையின் களுத்துறை மாவட்டத் தேயிலை, ரப்பர் தோட்ட நிர்வாகியான இலங்காதிலகம் என்பவரை வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொண்டார். புலம்பெயர்ந்து 1986-ல் டென்மார்க் நாட்டிற்குச் சென்ற கணவரைத் தொடர்ந்து 1987-ல் இவரும் தன் மகன், மகள் ஆகியோருடன் டென்மார்க் சென்றார். அங்கு டேனிய மொழியைக் கற்று பாலர் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

கவிதைகள் :

- உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
- கற்றது கையளவு
- மூன்றாம் பால் இரு கவிதைகள்
- மை
- கலப்படம்
- மனித நேயம்
- நீங்காத நினைவுகள்
- இனி ஒரு பிறவி வேண்டாம்
- தாளில் வரையப்பட்ட ஓவியம்
- தன் மானம்
- ஊமை கண்ட கனவு
- வாழ்க்கை வரமா பாரமா?
- விடியலில் கரைந்த இரவு

- இறைவனின் அருட்கொடை என 67 கவிதைகளை எழுதியுள்ளார்.

எழுதிய நூல்கள் :

- சிறு சஞ்சிகைகள்
- ஐரோப்பியத் தமிழ் சஞ்சிகைகள்
- முத்துக்கமலம்

வெளியான நூல்கள் :

- வேதாவின் கவிதைகள்
- குழந்தைகள் இளையோர் சிறக்க
- உணர்வுப் பூக்கள்
- பெற்றோரியலில் சிற்றலைகள்
- குறள் தாழிசை

41. நளாயினி தாமரைச்செல்வன்

பிறப்பு : ஆகஸ்ட் 5, 1968

பிறந்த இடம் : சிறுப்பிட்டி

இவர் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர், கவிஞர். நூல் விமர்சகர் ஆவார். இவரது படைப்புகளை பற்றி காண்போம். யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாக கொண்ட இவர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றார். 1990 இல் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைப் பிறப்பிடமாக கொண்ட தாமரைச் செல்வனை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளார்கள். இப்பொழுது இவர் சுவிஸ் நாட்டில் வசிக்கிறார்.

எழுதிய நூல்கள் :

- நங்கூரம்
- உயிர்த்தீ
- வெளி இணைப்புக்கள்
- நங்கூரம் நூலகம் திட்டத்தில்
- உயிர்த்தீ நூலகம் திட்டத்தில்

42. எழுத்தாளர் லட்சுமி

பிறப்பு : மார்ச் 23, 1921

இறப்பு : ஜனவரி 7, 1987

இயற்பெயர் : திரிபுரசுந்தரி

பிறந்த ஊர் : திருச்சி மாவட்டம், தொட்டியம்

பெற்றோர் : சீனிவாசன் - பட்டம்மாள்

வாழ்க்கை வரலாறு :

மருத்துவராகவும் தமிழ் இலக்கிய உலகில் தனி இடம் பெற்ற எழுத்தாளராகவும் திகழ்ந்த லட்சுமி, தமிழகம் மட்டுமின்றி தென்னாப்பிரிக்காவிலும் பல ஆண்டுகள் வாழ்ந்தவர். பாட்டன் பாட்டியிடம் வளர்ந்த இளமைப் பருவத்தில் பாட்டியிடம் நிறைய அனுபவப் பாடங்களைக் கேட்டு வளர்ந்ததில் இவருடைய சிந்தனைப் போக்கு ஒத்த வயதுடைய மற்ற குழந்தைகளை விட மாறுபட்டதாகவே இருந்தது. தொட்டியத்தில் ஆரம்பக் கல்வி கற்று, முசிறியில் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் தனிப் பெண்பிள்ளையாக உயர்கல்வி கற்றார். திருச்சியில் ஹோலிக்ராஸ் கல்லூரியில் புகுமுக வகுப்பு என்று முடித்து சென்னை ஸ்டான்லி கல்லூரியில் மருத்துவப் படிப்பில் நுழையும் வரை திரிபுரசுந்தரிக்கு பொருளாதாரப் பிரச்சனை அவ்வளவாகப் பாதிக்கவில்லை.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இருந்த காலத்தில் இரண்டாம் உலகப் போர் காரணமாக நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதாரப் பின்னடைவு திரிபுரசுந்தரியின் குடும்பத்தில் தீவிரமாகவே பாதிப்பினை ஏற்படுத்தியது. தந்தையார் சீனிவாசன் தன் மகளிடம் படிப்பு தொடர்வதற்குப் பண உதவி செய்ய இயலாமையை விளக்கி அவரை ஊருக்குத் திரும்பும் படி வலியுறுத்தினார். ஆனால் திரிபுர சுந்தரிக்கு தன் படிப்பினைப் பாதியில் விட மனமில்லை. ஏதோ துணிவில் ஆனந்த விகடன் நிர்வாக ஆசிரியர் வாசனைச் சந்தித்து தன் நிலைமையை விளக்கி தன் படிப்பு தொடர உதவும் படி வேண்டினார். அவர் எழுதித் தரும் கதைகளை ஆனந்த விகடன் பத்திரிக்கையில் தொடர்ந்து வெளியிட்டு பண உதவி செய்வதாக வாசன் தந்த உறுதிமொழியில் ஊக்கம் அடைந்தவராக தன் முதல் சிறுகதையான தகுந்த தண்டனையா? என்கிற சிறுகதையை எழுதி விகடனுக்குத் தந்து தன் எழுத்துலகப் பயணத்தைத் தொடங்கினார்.

கல்லூரி மாணவியாக இருந்ததாலும் சக மாணவர்களின் கேலியைத் தவிர்க்க எண்ணியதாலும் லக்ஷ்மி என்கிற புனைபெயரிலேயே எழுத ஆரம்பித்த திரிபுரசுந்தரி தன் படிப்பு முடியும் முன்பாகவே தொடர்கதைகளை எழுத ஆரம்பித்தார். இவருடைய படிப்பு தொடர வேண்டும் என்பதற்காக வாசன் அளித்த ஆதரவு மிகவும் உயரியது. மாதத்திற்கு மூன்று சிறுகதைகள் மூலம் (அவை வெளிவந்தாலும் வராவிட்டாலும்) இவருக்குப் பணம் கிடைக்கும் வண்ணம் பார்த்துக் கொண்டார் அவர். தொடர்ந்து பணம் கிடைக்கும் வசதிக்காகத் தான் தொடர்கதையே எழுதினார் லக்ஷ்மி. இவருடைய முதல் தொடர்கதை பவானி.

இவருடைய சிறுகதைகள் குடும்பப் பாங்குடனும், ஆபாசம் ஒருசிறிதும் இன்றியும், பெண்களின் பிரச்சனைகளை மையப்படுத்தியும் இருந்ததால் வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இவருக்குக் கிடைத்தது. படிப்பு முடியும் முன்பே பெண்மனம் என்கிற இன்னொரு நாவலும் எழுதி அதில் கிடைத்த பணத்தைத் தன் இளைய சகோதரியின் திருமணத்துக்குக் கொடுத்து தன் குடும்பத்துக்கும் உதவிகரமாக விளங்கினார் லக்ஷ்மி.

விருதுகள் :

தமிழக அரசின் பரிசு உள்பட ஏராளமான இலக்கிய அமைப்புகளின் பரிசுகளையும் விருதுகளையும் வாங்கிக் குவித்த இவருடைய ஒரு காவிரியைப் போல என்கிற நாவல் சாகித்ய அகாதமி விருதினை வென்றது.

படைப்புகள் :

ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள், சுமார் நூற்று ஐம்பது நாவல்கள், ஐந்து கட்டுரைத் தொகுப்புகள், ஆறு மருத்துவ நூல்கள் இவர் எழுதியவையாகும்.

43. எழுத்தாளர் ராஜேஷ் குமார்

ராஜேஷ்குமார் ஒரு தமிழக எழுத்தாளர். குற்றப் புனைவு, அறிபுனை மற்றும் துப்பறிவுப் புனைவு பாணிகளில் 1500க்கும் மேற்பட்ட புதினங்களையும் 2000க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். 1980களிலும் 90களிலும் தமிழ்நாட்டில் பிரபலமாக இருந்த பாக்கெட் நாவல் புத்தகங்களை ஆயிரக்கணக்கில் எழுதியதன் மூலம் புகழ் பெற்றவர். தமிழின் காகிதக்கூழ் புனைவின் ஆளுமைகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். கோயம்புத்தூரைச் சேர்ந்த ராஜேஷ் குமார் கோவை ராமகிருஷ்ண வித்யாலயத்தில் கல்வி கற்றார். பவானிசாகர் பயிற்சிப் பள்ளியில் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 1968ல் கல்கண்டு இதழில் தன் முதல் சிறுகதையை வெளியிட்டார். இவரது முதல் புதினம் வாடகைக்கு ஒரு உயிர் 1980ல் வெளியானது. பின் ஆனந்த விகடன், குமுதம் போன்ற வெகுஜன இதழ்களிலும் பெஸ்ட் நாவல், திகில் நாவல், எவரெஸ்ட் நாவல், கிரேட் நாவல், கிரைம் நாவல் போன்ற பாக்கெட் நாவல் பதிப்புகளிலும் இவரது படைப்புகள் வெளியாகின. விவேக்-ரூபலா என்ற புகழ்பெற்ற துப்பறியும் சோடிப் பாத்திரங்கள் இவரால் உருவாக்கப்பட்டவை. இவரது சில படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பிளாஃப்ட் பதிப்பத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

விருதுகள் :

2009ம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

படைப்புகள் :

- அபாய நோயாளி
- குறிஞ்சிப் பூக்கள்

- மீண்டும் மீண்டும்
- அகல்யா
- அஞ்சாதே அஞ்சு
- அது ஒரு நிலாக்காலம்
- அந்த சந்திரனே சாட்சி
- அபயம் அபாயம் அருணா
- அமரர் பதவி அக்டோபர்
- அவசரம் விவேக் அவசரம்
- அவன் அவள் அவர்கள்
- இது தான் இந்தியா
- இந்த ரோஜாவுக்கு நிறமில்லை
- இந்தியன் என்பது என் பேறு
- இந்தியனாய் இரு
- இரண்டாவது உயிர்
- இரவு நேர வானவில்
- இருட்டில் ஒரு வானம்பாடி
- இருள் பொருள் இன்பம்
- இனி மின்மினி
- இனிமேல் சாருமதி
- உயிர்த் திருடர்கள்
- உன்னால் முடியும் விவேக்

- உன்னுடைய கண்களுக்கு மட்டும்
- உன்னை விட்டால் யாரும் இல்லை
- ஊசி முனையில் ஒரு உயிர்

44. எழுத்தாளர் பாவண்ணன்

இயற்பெயர் : பாஸ்கரன்

பிறப்பு : அக்டோபர் 20, 1958

பெற்றோர் : பலராமன், சகுந்தலா

பிறந்த ஊர் : வளவனூர், விழுப்புரம்

வாழ்க்கை வரலாறு :

பாவண்ணன் புதுச்சேரிக்கும் விழுப்புரத்துக்கும் இடையில் உள்ள வளவனூர் என்னும் சிற்றூரில் அக்டோபர் 20, 1958 அன்று பிறந்தார். பள்ளிக்கல்வியை வளவனூரிலும் புகுமுக வகுப்பை விழுப்புரம் அரசுக் கல்லூரியிலும் பட்டப்படிப்பை புதுச்சேரி தாகூர் கலைக் கல்லூரியிலும் படித்துத் தேறினார். தொடக்கத்தில் ஓராண்டுக்கும் மேலாக புதுச்சேரி தொலைபேசி அலுவலகத்தில் பணிபுரிந்த பிறகு, இளம்பொறியாளர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு கர்நாடகத்துக்குச் சென்றார். தற்சமயம் உட்கோட்டப் பொறியாளராக பெங்களூரில் பணிபுரிந்து வருகிறார். இவருடைய மனைவி அமுதா. மகன் அம்ரிதா மகன் கார்க்கி. பாவண்ணன் ஒரு குறிப்பிடத்தக்க தமிழ் எழுத்தாளர். 1980களில் எழுதி வந்த சிறுகதை எழுத்தாளத் தலைமுறையை சேர்ந்தவர்.

வகித்த பதவி :

ஓராண்டுக்கும் மேலாக புதுச்சேரி தொலைபேசி அலுவலகத்தில் பணிபுரிந்தார்.

பாவண்ணனின் நூல்கள் :

தமிழ்ச் சிறுகதைகளையும் தமிழில் வெளிவந்த பிறமொழிச் சிறுகதைகளையும் முன்வைத்து எனக்குப் பிடித்த கதைகள் என்னும் தலைப்பில் திண்ணை என்னும் இணைய இதழில் சிறுகதைகளில் பொதிந்திருக்கும் அழகியலையும் வாழ்வியலையும் இணைத்துப் பொருத்திப் புரிந்துகொள்ளும் விதமாக இவர் எழுதிய நூறு கட்டுரைகள் பரவலான வாசக கவனம் பெற்றவை.

ஐம்பது தமிழ்க்கவிஞர்களின் படைப்புகளை முன்வைத்து உயிரோசை இணைய தளத்தில் மனம் வரைந்த ஓவியம் என்னும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகளும் முக்கியமானவை.

நாவல்கள் :

- வாழ்க்கை ஒரு விசாரணை
- சிதறல்கள்
- பாய்மரக்கப்பல்

குறுநாவல்கள் :

- இது வாழ்க்கையில்லை
- ஒரு மனிதரும் சில வருஷங்களும்

கவிதைகள் :

- குழந்தையைப் பின்தொடரும் காலம்
- கனவில் வந்த சிறுமி
- புன்னகையின் வெளிச்சம்

விருதுகள் :

- புதுச்சேரி அரசின் சிறந்த நாவலுக்கான விருது
- இலக்கியச் சிந்தனையின் சிறந்த நாவலுக்கான விருது
- கதா அமைப்பின் சிறந்த சிறுகதைக்கான விருது
- சாகித்ய அகாதெமியின் சிறந்த மொழிப்பெயர்ப்பாளருக்கான விருது
- தமிழக அரசின் சிறந்த குழந்தை இலக்கியத்துக்கான விருது
- சென்னை இலக்கிய திருவிழாவின் சிறந்த எழுத்தாளர் விருது
- சுஜாதா-உயிர்மை அறக்கட்டளையின் 2015 ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருது
- என்.சி.பி.எச். வழங்கும் 2015 ஆம் ஆண்டின் சிறந்த கட்டுரைத் தொகுதிக்கான விருது
- வாழ்நாள் சாதனைக்காக விளக்கு இலக்கிய அமைப்பு வழங்கிய புதுமைப்பித்தன் விருது

45. எழுத்தாளர் ரா. கி. ரங்கராஜன்

பிறப்பு : அக்டோபர், 5, 1927

இறப்பு : ஆகஸ்ட் 18, 2012

பிறந்த ஊர் : கும்பகோணத்தில் ரெட்டியார்குள வடகரை

வாழ்க்கை வரலாறு :

இவர் தந்தை மகா மகோபாத்தியாய ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியார் ஒரு சமஸ்கிருதப் பண்டிதர். இவர் அண்ணன் ரா.கி.பார்த்தசாரதியும் (ஆர்.கே.பார்த்தசாரதி) சமஸ்கிருதப்பண்டிதரே. ரங்கராஜன் தன் 16-ஆம் வயதில் எழுத ஆரம்பித்தார். 1946-இல் பேராசிரியர் சீனிவாச ராகவனின் பரிந்துரையால் சக்தி மாத இதழில் உதவியாசிரியராக தனது எழுத்துலக வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர் காலச்சக்கரம் என்ற வார இதழிலும் உதவி ஆசிரியராகத் தொடர்ந்தார். 1950-இல் குமுதம் நிறுவனம் சிறிது காலம் நடத்திய ஜிங்லி என்ற சிறுவர் இதழில் சேர்ந்து, 42 ஆண்டுகள் குமுதம் இதழில் ஆசிரியர் குழுவில் பணியாற்றினார்.

ஹென்றி ஷாரியரின் பாப்பிலான் (பட்டாம்பூச்சி), சிட்னி ஷெல்டனின் இஃப் டுமாரோ கம்ஸ் (தாரகை), தி ஸ்டார்ஸ் ஷைன் டவுன் (லாரா) மற்றும் ரேஜ் ஆஃப் ஏஞ்சலஸ் (ஜெனிஃபர்); ஜெஃப்ரே ஆர்ச்சரின் எ டுவிஸ்ட் இன் தி டேல் (டுவிஸ்ட் கதைகள்) டேனியேல் ஸ்டீலின் காதல் மேல் ஆணை ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகள். கிருஷ்ணகுமார் என்ற பெயரில் அமானுட கதைகளும் டி.துரைசாமி என்ற பெயரில் உண்மைக் குற்றங்களின் அடிப்படையில் குற்றக் கதைகள், வினோத் என்ற பெயரில் தமிழ்த் திரைப்பட செய்திக் கட்டுரைகள் (லைட்ஸ் ஆன் வினோத்) என பலவித படைப்புகளை எழுதியுள்ளார்.

இவர் 1500-க்கும் மேற்பட்ட கதைகளையும், 50 நாவல்களும், ஏராளமான கட்டுரைகளும், மொழிபெயர்ப்பு நாவல்களும் எழுதியுள்ளார். இவற்றுள் பல குமுதம் ஆனந்த விகடன் முதலான இதழ்களில் தொடர்களாக வெளிவந்தன. இவருடைய மூன்று நாவல்கள் திரைப்படங்களாக வெளிவந்தன. பல படைப்புகள் சின்னத் திரையிலும் இடம் பெற்றுள்ளன. ரங்கராஜன் அண்ணா நகர் டைம்ஸ் பத்திரிக்கையில் எழுதிய கட்டுரைத் தொடர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவை நாலு மூலை என்ற பெயரில் நூலாக வெளியாகியுள்ளன. அவன் என்ற பெயரில் தன் வரலாற்றையும் எழுதியுள்ளார். இளம் எழுத்தாளர்களுக்குக் கதை எழுதும் நுணுக்கங்களைக் கற்றுத் தரும் எப்படிக் கதை எழுதுவது? என்ற வகுப்பினையும் தான் ஒருவராகவே நடத்தி வந்தார்.

சிறப்புகள் :

ரங்கராஜன் ஒரு கர்ம யோகி, குமுதம் ஸ்தாபன விசுவாசம், ஆசிரியர் எஸ்.ஏ.பி. மேல் பக்தி, கிடைத்தது போதும் என்கிற திருப்தி, சக எழுத்தாளர்கள் மேல் பொறாமையற்ற பிரிவு, நேசம், வெள்ளைச் சட்டை, வெள்ளை வேட்டி, நண்பர்களைக் கண்டால் கட்டியணைத்து முதுகில் ஒரு ஷொட்டு - இவைதான் இவருடைய சிறப்புகள்.

படைப்புகள் :

- உள்ளேன் அம்மா
- ஊஞ்சல்
- ஒரு தாய், ஒரு மகள்
- தர்மங்கள் சிரிக்கின்றன
- படகு வீடு

- பட்டாம்பூச்சி (மொழிபெயர்ப்பு)
- மூவிரண்டு ஏழு
- வயது பதினேழு
- புரொபசர் மித்ரா
- சின்னக் கமலா
- மறுபடியும் தேவகி
- பல்லக்கு
- அடிமை

46. எழுத்தாளர் செந்தலை ந. கவுதமன்

பிறப்பு : ஜனவரி 23, 1953

பிறந்த ஊர் : திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை

வாழ்க்கை வரலாறு :

ந. கவுதமன் சம கால வரலாற்று ஆய்வாளர், மார்க்சிய, தமிழ்த்தேசிய ஆர்வலர். பாவேந்தர் மீது பெரும் பற்று கொண்டவர். பள்ளிப் படிப்பை சர்சிவசாமி ஐயர் உயர்நிலைப் பள்ளி (1965 - 1971) திருக்காட்டுப்பள்ளி, தஞ்சையில் முடித்தார். திருவையாறு அரசு கல்லூரியில் (1971 - 1975) தொடர்ந்து புலவர் படிப்பை முடித்து, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., பட்டம் பெற்றுள்ளார். தற்போது பணி நிறைவுற்று கோவை மாவட்டம் சூலூர் என்ற ஊரில் வசிக்கிறார்.

வகித்த பதவி :

தமிழாசிரியராக பூ.சா.கோ. சர்வ சன மேல்நிலைப்பள்ளியில் 1978 முதல் 2013 வரை பணி புரிந்தார்.

எழுதிய நூல்கள் :

- சூலூர் வரலாறு
- கோவை கண்ட மொழிப் போர்
- விடுதலைப் போரில் கோவை
- கல்வி காத்த கோவை
- பகுத்தறிவு இயக்கத்தில் பாரதிதாசன்
- மதம் கடவுள் மனிதன் : வளர்ச்சி வரலாறு
- விழிப்பூட்டும் மொழிப் போர்
- பாவேந்தர் வாழ்வில் அழகின் சிரிப்பு
- தமிழக மொழிப்போர் ஈகியர் வரலாறு
- சூலூர் திராவிட இயக்க வரலாறு
- அண்ணா அறிவுக்கொடை

விருது :

- டாக்டர் ராதாகிருஷ்ணன் (நல்லாசிரியர்) விருது
- கோவை பாரதியார் பல்கலைக்கழக தமிழ்ச் சான்றோர் விருது

47. எழுத்தாளர் ரமணி சந்திரன்

பிறப்பு : ஜூலை 10, 1938

பிறந்த ஊர் : திருச்செந்தூருக்கு அருகிலுள்ள கயாமோஷி கிராமம்

பெற்றோர் : கணேசன் - கமலம்

வாழ்க்கை வரலாறு :

ராமணிச்சந்திரன் ஒரு சிறந்த தமிழ் காதல் நாவலாசிரியர், தற்போது தமிழ் மொழியில் அதிகம் விற்பனையாகும் எழுத்தாளர். தென் தமிழ்நாட்டின் திருச்செந்தூருக்கு அருகிலுள்ள கயாமோஷி கிராமத்தில் கணேசன் மற்றும் கமலம் ஆகியோருக்குப் பிறந்தார். கோடீஸ்வர தொழிலதிபரும் வணிக அதிபருமான சிவா நாடார் அவரது உறவினர். அவர் 178 நாவல்களை எழுதியுள்ளார், அவற்றில் பெரும்பாலானவை முதலில் குமுதம் மற்றும் அவள் விகடன் போன்ற பத்திரிக்கைகளில் தொடர்ச்சியாக வெளிவந்தன. பின்னர் அவை அருணோதயத்தால் புத்தக வடிவத்தில் வெளிவந்தன. அவரது பிரபலமான நாவல்களில் சில வலாயோசாய், மாயங்குஜிரல் ஒரு மது, வென்மயில் எத்தனை நிறங்கள், ஆதிவாஜாய். அவரது கதைகள் சாதி மோதல்கள் இல்லை, மத மோதல்கள் இல்லை, முனைய நோய்கள் இல்லை, தீவிரமான தீமைகளைக் கொண்ட கதாபாத்திரங்கள் இல்லை. அவை 100% மென்மையான காதல் கதைகளை சார்ந்தவை.

விருதுகள் :

- 1992 ஆம் ஆண்டில் வைரமலர் என்ற நாவலுக்கு தமிழ்நாடு அரசு விருது வழங்கப்பட்டது.
- அதே ஆண்டில் நாள் நல்ல நாள் என்ற நாவலுக்கு அனந்தாச்சியார் அறக்கட்டளை விருது வழங்கப்பட்டது.

- வண்ணவிழி பார்வையிலே என்ற நாவலுக்கு தினந்தந்தி விருது வழங்கப்பட்டுள்ளது. அதில் மேலும் வி.ஜி.பி விருதும் பெற்றுள்ளார்.

படைப்புகள் :

- வாழ்வு என் பக்கம்
- ஆசை ஆசை ஆசை
- அவள் எங்கே பிறந்திருக்கிறாளோ
- அடிவாழை
- அமுதம் விளையும்
- அன்பின் தன்மையை அறிந்த பின்னே
- அதற்கொரு நேரமுண்டு
- அவனும் அவளும்
- அழகு மயில் ஆடும்
- சந்தினி
- எல்லாம் உனக்காக
- என் உயிர் நீதானே
- எனது சிந்தனை மயங்குதடி
- என்னை யாரென்று எண்ணி எண்ணி
- என்னுளே நிறைந்தவளே

48. எழுத்தாளர் சல்மா

இயற்பெயர் : ராஜாத்தி (எ) ரொக்கையா பீவி

பிறப்பு : டிசம்பர் 19, 1967

பெற்றோர் : சம்சுதீன் - சர்புன்னிசா

பிறந்த ஊர் : துவரங்குறிச்சி, திருச்சி மாவட்டம்

வாழ்க்கை வரலாறு :

ராஜாத்தி சல்மா 1968-ம் ஆண்டு தமிழகத்தில் உள்ள திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி என்ற ஊரில் சம்சுதீன், சர்புன்னிசா ஆகியோரின் மகளாக பிறந்தார். அவரது 13ம் வயதில் தனது தோழிகளுடன் திரையரங்கு சென்று திரைப்படம் பார்த்த காரணத்தால் அவரது குடும்பத்தார் அவரை பள்ளி செல்ல அனுமதிக்கவில்லை. திராவிட பாரம்பரியம் கொண்ட அப்துல் மாலிக் என்பவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். அதன்பின் கவிதைகள், கட்டுரைகள் மற்றும் கதைகள் எழுதத்தொடங்கினார். சல்மாவின் 17ம் வயதில் காலச்சுவடு பதிப்பகம் மூலமாக அவரது முதல் கவிதைத் தொகுப்பான ஒரு மாலையும் இன்னொரு மாலையும் வெளியானது.

சல்மா ஒரு தமிழ்ப் பெண் கவிஞர் மற்றும் அரசியல்வாதி. இவர் தொண்ணூறுகளின் இறுதியில் எழுதத் தொடங்கினார். தற்போது சென்னையில் வசித்து வருகிறார்.

எழுதிய நூல்கள் :

கவிதைத்தொகுப்பு :

- ஒரு மாலையும் இன்னொரு மாலையும் 2000-ம் ஆண்டு தமிழில் வெளியிடப்பட்டது. ஆங்கிலத்திலும் அன் ஈவ்னிங் அண்ட் அனதர் ஈவ்னிங் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- 2003-ம் ஆண்டு பச்சை தேவதை காலச்சுவடு பதிப்பகம் மூலம் வெளியிடப்பட்டது. கிரீன் ஏஞ்சல் என்று ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

புதினங்கள் :

இரண்டாம் ஜாமத்தின் கதைகள் (2004) தெ அவர்ஸ் பாஸ்ட் மிட்நைட் என்று ஆங்கிலத்திலும், மலையாள மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் இந்தி, ஜெர்மன், கடாலன் ஆகிய மொழிகளிலும் மொழிப்பெயர்ப்பு வேலைகள் நடந்துவருகிறது.

மனாமியங்கள் (2016) - இதுவும் ஆங்கிலத்தில் தெ ட்ரீம்ஸ் என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

விருது :

இவரின் முதல் நாவல் இரண்டாம் ஜாமங்களின் கதை. இதன் ஆங்கில மொழிப்பெயர்ப்பை மையமாக வைத்து எழுதப்பட்ட ஒரு கட்டுரைக்கு அமெரிக்காவின் ஸ்வீட் அண்ட் கிளார்க் கல்லூரியின் பாலினக் கல்வி விருது கிடைத்திருக்கிறது.

மகாகவி கன்னையாலால் சேதியா அறக்கட்டளை சார்பில் பல்வேறு மொழிகளில் சிறந்து விளங்கும் கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் மகாகவி கன்னையாலால் சேதியா விருது

வழங்கப்பட்டு வருகிறது. 2019ம் ஆண்டுக்கான விருது கவிஞர் சல்மா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தந்தை பெரியார் விருது (2018) திராவிடர் கழகம் சார்பில் வீரமணி அவர்களால் கவிஞர் சல்மா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

49. எழுத்தாளர் சந்திரா இரவீந்திரன்

பெற்றோர் : தியாகாராஜா, சிவகாமி சுந்தரி

பிறந்த ஊர் : இலங்கை பருத்தித்துறையில் ஆத்தியடி கிராமம்

வாழ்க்கை வரலாறு :

சந்திரகுமாரி இரவீந்திரகுமாரன் இலங்கை பருத்தித்துறையில் ஆத்தியடி என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாக கொண்டவர். தியாகாராஜா, சிவகாமி சுந்தரி தம்பதிகளின் நான்காவது புதல்வி. இவர் தனது கல்வியை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் பயின்று யாழ் அரசாங்க செயலகத்தில் கடமையாற்றினார். தற்சமயம் இலண்டனில் வசித்து வருகிறார். இலண்டன் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் (ஐ.பி.சி.) நிகழ்ச்சித் தயாரிப்பாளராக ஏழு ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர், தற்போது வர்த்தக நிறுவனமொன்றில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். மற்றும் 1999ம் ஆண்டிலிருந்து, 14 வருடங்கள் இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கத்தின் செயற்குழுவில் இணைந்து தமிழ்ப் பாடசாலையொன்றை நடத்தும் பணியில் தன்னை அர்ப்பணித்திருந்தார். இவர் இச்சங்கத்தில் செயற்குழு உறுப்பினராகவும், செயலாளராகவும், தலைவராகவும் இருந்து இச்சங்கத்தினை சிறப்பாக இயக்கும் பணியில் தன்னைப் பெரிதும் ஈடுபடுத்தியிருந்தார்.

சந்திரா இரவீந்திரன் படைப்புகள் :

நிழல்கள் சிறுகதை குறுநாவல் தொகுப்பு இவரது முதல் நூலாகும். பாரிஸ் ஈழநாடு பத்திரிக்கை நடத்திய ஐரோப்பிய எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் இவரது அக்கினியில் கருகும் ஆத்மாக்கள் சிறுகதை தங்கப்பதக்கத்தை வென்றது.

- நிழல்கள் (சிறுகதைகளும் குறுநாவலும்)
- நிலவுக்குத் தெரியும் (சிறுகதைத் தொகுப்பு)
- சில நேரங்களில் சில நியதிகள்
- சிவப்புப் பொறிகள்
- மடமையைக் கொளுத்துவோம்
- எரியும் தளிர்கள்
- தரிசு நிலத்து அரும்பு
- நிச்சயிக்கப் படாத நிச்சயங்கள்
- முறியாத பனை
- யாசகம்
- பால்யம்

பரிசுகளும் விருதுகளும் :

- தமிழ்ச்சுடர் விருது (2018 தடாகம் கலை இலக்கிய கல்வி கலாச்சார சமூக அபிவிருத்தி சர்வதேச அமைப்பு வழங்கிய பெண் எழுத்தாளருக்கான விருது)

- கவின் கலை மாமணி விருது (2015 தடாகம் கலை இலக்கிய கல்வி கலாச்சார சமூக அபிவிருத்தி சர்வதேச அமைப்பு வழங்கிய பெண் எழுத்தாளருக்கான விருது)
- முதலாம் பரிசும், தங்கப்பதக்கமும் (1991 - அக்கினியில் கருகும் ஆத்மாக்கள் - சிறுகதை, பாரிஸ், ஈழநாடு, சிறுகதைப்போட்டி)
- முதற் பரிசு (1987 சிரித்திரன், எரியும் தளிர்கள் - சிறுகதை)
- மூன்றாம் பரிசு (1986 சிரித்திரன், சிவப்புப் பொறிகள் - சிறுகதை)
- இரண்டாவது பரிசு (1984-1985 இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவற் போட்டி - குறுநாவல் நிச்சயிக்கப்படாத நிச்சயங்கள்)

50. எழுத்தாளர் சந்திரவதனா

வாழ்க்கை வரலாறு :

சந்திரவதனா இலங்கையின் வடபுலத்தில் அமைந்துள்ள மேலைப்புலோலியூர், பருத்தித்துறை, ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மு.ச.தியாகராஜா, சிவகாமசுந்தரி தம்பதியினருக்கு பிறந்தவர். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றதால் கணிதத் துறையில் மிகுந்த ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவர். 1986லிருந்து புலம்பெயர்ந்து ஜெர்மனியில் வாழ்ந்து வருகிறார்.

1975லிருந்து எழுதிவரும் இவரது எழுத்தார்வம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலமாகத் தொடங்கியது. இவரது பன்முகப்பட்ட படைப்புகள் வானொலிகள், சஞ்சிகைகள், பத்திரிக்கைகள் மற்றும் இணையத்தளங்கள் பலவற்றில் வெளிவந்துள்ளன. இவரது மனஓசை வலைப்பதிவு இவரின் சமூக, அரசியல், இலக்கிய மற்றும் சுய உணர்வுகளின் வெளிப்பாடாக விரிந்து உள்ளது.

இவரின் படைப்புக்கள் எரிமலை, களத்தில் ஈழமுரசு, ஈழநாடு, குமுதம், இளங்காற்று, புலம், சக்தி, பெண்கள் சந்திப்பு மலர், உயிர்ப்பு, பூவரசு, வெற்றிமணி, முழக்கம், தங்கதீபம், வடலி, குருத்து மாத இதழ், செம்பருத்தி, யாழ், சூரியன், பதிவுகள், திண்ணை, அக்னி, யுகமாயினி உட்பட்ட பல பத்திரிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் இணைய இதழ்கள் போன்றவற்றில் வெளிவந்திருக்கின்றன.

இணைய இதழ்கள் :

2002-ல் இவர் ஆரம்பித்த மனஓசை இணைய இதழும், 2003-ல் இவர் ஆரம்பித்த மனஓசை வலைப்பூவும், பெண்கள் வலைப்பதிவும் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வெளிவந்த நூல்கள் :

- மனஓசை சிறுகதைத் தொகுப்பு
- அலையும் மனமும் வதியும் புலமும்
- நாளைய பெண்கள் சுயமாக வாழ

பதிப்பித்த நூல்கள் :

- தீட்சண்யம்
- தொப்புள் கொடி

- மூனாவின் நெஞ்சில் நின்றவை
- மூனாவின் கிறுக்கல்கள்
- மறந்து போக மறுக்கும் மனசு

51. எழுத்தாளர் பாலகுமாரன்

பிறப்பு : ஜூலை 5, 1946

இறப்பு : மே 15, 2018

பிறந்த ஊர் : பழமார்நேரி, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டம்

பெற்றோர் : வைத்தியநாதன் - சுலோசனா

வாழ்க்கை வரலாறு :

பாலகுமாரன் தஞ்சாவூர் மாவட்டத்தில், திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள பழமார்நேரி என்னும் சிற்றூரில் 1946 ஆம் ஆண்டு பிறந்தார். பதினொன்றாம் வகுப்பு வரை பயின்ற இவர் தட்டச்சும் சுருக்கெழுத்தும் கற்று தனியார் நிறுவனத்தில் 1969 ஆம் ஆண்டில் சுருக்கெழுத்தாளராகப் பணியாற்றத் தொடங்கினார். அவ்வாண்டிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். அவற்றுள் சில கணையாழி இதழில் வெளிவந்தன. பின்னர் இழுவை இயந்திரம் நிறுவனத்தில் உயர் அதிகாரியாக பணியாற்றினார். திரைத்துறையில் பணியாற்றுவதற்காக அப்பணியைத் துறந்தார். இவர் 100-க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 200-க்கும் மேற்பட்ட நெடுங்கதைகளையும் சில கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பாலசந்தரின் குழுவில் மூன்று திரைப்படங்களிலும் கே. பாக்யராஜ் குழுவில் இணைந்து சில படங்களிலும் உதவி

இயக்குநராகப் பணியாற்றினார். பின்னர் இது நம்ம ஆளு என்னும் திரைப்படத்தை கே. பாக்யராஜ் மேற்பார்வையில் இயக்கினார்.

விருதுகள் :

- ராஜா சர் அண்ணாமலை செட்டியார் ட்ரஸ்ட் விருது (இரும்புக் குதிரைகள்)
- இலக்கியச் சிந்தனை விருது (மெர்க்குரிப் பூக்கள்)
- தமிழ்நாடு மாநில விருது (சுகஜீவனம் - சிறுகதை தொகுப்பு)
- கலைமாமணி விருது
- தமிழ்நாடு மாநில விருது (காதலன் - சிறந்த வசனம்)

புதினங்கள் :

- இரும்பு குதிரைகள்
- உடையார்
- கங்கை கொண்ட சோழன்
- தாயுமானவன்

கட்டுரைகள் :

- காதலாகிக் கனிந்து
- ஞாபகச் சிமிழ்
- சூரியனோடு சில நாட்கள்
- அந்த ஏழு நாட்கள்

சிறுகதைத் தொகுப்புகள் :

- சின்ன சின்ன வட்டங்கள் (முதலாவது நூல்)
- சுகஜீவனம்
- கடற்பாலம்

கவிதைத் தொகுப்புகள் :

- விட்டில்பூச்சிகள்
- சிறுகதைகளும் கவிதைகளும் தொகுப்புகள்
- விசிறி சாமியார் (1991 திசம்பர்)

52. எழுத்தாளர் குட்டி ரேவதி

இயற்பெயர் : ரேவதி சுயம்புலிங்கம்

பிறப்பு : நவம்பர் 30, 1973

பிறந்த ஊர் : சென்னை

வாழ்க்கை குறிப்பு :

குட்டி ரேவதி சென்னையை வசிப்பிடமாகக் கொண்ட ஒரு பெண் கவிஞர் ஆவார். கவித்துவமும் சிந்தனைத் தெளிவும் நிறைந்த இவர் எழுத்து, பெண்ணியம் போன்றவற்றில் முனைப்புடன் இயங்கி வருகிறார். இவர் ஒரு இந்தியப் பாடலாசிரியர், கவிஞர், சீர்திருத்தவாதி மற்றும் ஒரு மருத்துவர் ஆவார்.

இவர் பனிக்குடம் என்னும் பதிப்பகம் ஒன்றையும் நடத்தி வருகிறார். இதில் பெண்ணிலக்கியவாதிகளின் படைப்புகளே வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது. இவரே இந்த காலாண்டு இலக்கிய

பத்திரிக்கையின் தொகுப்பாசிரியர் ஆவார். இதுவே தமிழகத்தின் முதல் பெண்ணிய செய்தி இதழாகும். இப்போது எழுதிவரும் பெண் படைப்பாளிகளுள் கவனிக்கத்தக்க ஒருவராக இயங்கி வருகிறார்.

தலித் பெண்ணியம் என்பதை சித்தாந்த வடிவில் கட்டமைப்பதும் களப்பணிக்குச் செயல்படுத்துவதும் தான் இந்தியாவில் பெண்களின் உரிமைகளை முழுமையான வடிவில் பெற்றுத் தரும் என்று நம்புபவர். சாதிய மறுப்பும் ஒழிப்பும் தான் பெண்ணுடலை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கும் என்ற உணர்வுடன் தலித் பெண்ணியத்தைத் தனக்கேயான மொழியில் சித்தாந்தப்படுத்தி வருபவர்.

இதற்கு தமிழகத்தில் உருவெடுத்த பெண் கவிஞர்களின் உடல் அரசியல் மொழியும் எழுச்சியும் முக்கியமான பங்களிப்பு என்கிறார். சிற்றிதழ் இயக்கம் மற்றும் நவீனத் தமிழ் இலக்கியம் வழி உருவெடுத்தவர். இந்நூற்றாண்டின் முக்கியமான பெண்ணியச் செயல்பாடு என்பது தனித்த பெண்ணியச் சிந்தனைகளைக் கட்புல படிமங்களாக பரிணமிக்கச் செய்தலே என்ற தன் தீவிர நம்பிக்கையின் படி முழு மூச்சாக ஆவணப்படத் துறையிலும் திரைப்படத் துறையிலும் இயங்கி வருபவர்.

இவர் தனது சக மாணவர்களின் கவிதைத் தொகுப்புகள் தொடர்பான திறனாய்வு இலக்கியக் கூட்டங்களை நடத்தியுள்ளார். இவர் தனது சுய படைப்புகள் குறித்தும் பணிகளைத் தொடங்கினார். பள்ளிப் படிப்பிற்கு பிறகு உலகின் மிகப் பழமையான மருத்துவ முறையாகவும், தமிழ்நாட்டைத் தாயகமாகவும் கொண்ட சித்த மருத்துவத்தைப் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார். அவர் சென்னையில் உள்ள மெட்ராசு வளர்ச்சி சார் கல்வி நிறுவனத்தில் (Madras Institute of Development Studies) மருத்துவம் சார்ந்த மானிடவியலில் தனது முனைவர் பட்டத்திற்கான ஆய்வுப் படிப்பை மேற்கொண்டார்.

இந்தியா டுடே என்ற பத்திரிக்கையால் வழங்கப்பட்ட எதிர்கால இலக்கியத்தின் முகங்கள் (சிகரம் 15) என்ற விருதினைப் பெற்றார். சாகித்ய அகாதெமி அமைப்பினரால் 2005 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள இலக்கியவாதிகளை சந்திப்பதற்கான உதவித்தொகையைப் பெற்றார். இவர் சமகாலத்திய தமிழ் கவிஞராக இருந்து கருத்து முரண்பாடுகளைக் கொண்ட, வாதத்துக்கிடமான பல கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

கவிதை நூல்கள் :

- பூனையைப் போல அலையும் வெளிச்சம்
- முலைகள்
- தனிமையின் ஆயிரம் இறக்கைகள்
- உடலின் கதவு
- யானுமிட்ட தீ
- மாமத யானை
- இடிந்த கரை
- அகவன் மகள்
- காலவேக மதயானை
- அகமுகம்

53. எழுத்தாளர் கிருத்திகா

இயற்பெயர் : மதுரம் பூதலிங்கம்

பிறப்பு : 1915

பிறந்த ஊர் : பூதப்பாண்டி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்

இறப்பு : பிப்ரவரி 13, 2009

வாழ்க்கை குறிப்பு :

கிருத்திகா தமிழகத்தின் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர் ஆவார். இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகே உள்ள பூதப்பாண்டி என்ற ஊரில் பிறந்தவர். பம்பாயில் படித்து வட மாநிலங்களிலேயே அதிகம் வசித்தவர். பூதப்பாண்டிக்கு அயலூரான திருப்பதி சாரத்தைச் சேர்ந்த பூதலிங்கம்பிள்ளையை மணம் செய்துகொண்டார். காலஞ்சென்ற பூதலிங்கம் அரசாங்கத்தில் பதவிகள் வகித்தவர். உருக்குத் துறையிலும், நிதித்துறையிலும் செயலாளராகப் பணியாற்றியவர். பிலாய் உருக்காலை நிர்மாணத்தில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. கிருத்திகாவின் மகள் மீனா, வேளாண்மை அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதனின் மனைவி ஆவார்.

இந்தியா முழுவதும் பயணம் செய்து இந்தியக் கோயில்கள், கலைகள் போன்றவை குறித்துக் கலைமகளில் பல கட்டுரைகளை எழுதி வந்தார். ஆங்கிலத்தில் மிக அழகாக மேடையில் பேசக்கூடிய இவர் சமஸ்கிருதத்திலும் பெரும்புலமை படைத்தவர். குழந்தைகளுக்காக, இராமாயணம், மகாபாரதம், பாகவதம், என பல ஆங்கில நூல்களை எழுதி, பாரதியின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இதிகாச மறுஆக்கம், இலக்கிய அறிமுகம், தமிழகச் சிற்பக்கலை ஆகியவற்றைப் பற்றி

எழுதியிருக்கிறார். கிருத்திகா எழுதிய வாசவேஸ்வரம் என்ற புதினத்தை சிறீராமன் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

விமர்சகர் சிட்டி பெ.கோ.சுந்தரராஜன் மதித்த எழுத்தாளர்களில் கிருத்திகாவும் ஒருவர். கிருத்திகா ஒரு முன்னணி எழுத்தாளராக ஆவதற்குச் சிட்டி உறுதுணையாக இருந்தார். தில்லியிலும், பல்வேறு நகரங்களிலும் வசித்த கிருத்திகா சிட்டிக்கு எழுதிய கடிதங்களும், சிட்டி அவருக்கு எழுதிய பதில் கடிதங்களும் புகழ் பெற்றவை. கிருத்திகா எழுதிய நூல்களில் வாசவேஸ்வரம் என்னும் நூல் தமிழில் வெளிவந்த மிகச்சிறந்த படைப்புகளில் ஒன்றாக இலக்கிய உலகில் அங்கீகாரம் பெற்றது.

எழுதிய ஆக்கங்கள் :

புதினங்கள் :

- புகை நடுவினில்
- சத்யமேவ
- பொன்கூண்டு
- வாஸவேஸ்வரம்
- தர்ம ஷேத்ரே
- புதிய கோணங்கி
- நேற்றிருந்தோம்

குறும் புதினங்கள் :

- யோகமும் போகமும்

- தீராத பிரச்சனை

நாடகங்கள் :

- மனதிலே ஒரு மறு
- மா ஜானகி

இறப்பு :

எழுத்தாளர் கிருத்திகா தனது 93வது அகவையில் 2009, பிப்ரவரி 13 இல் சென்னையில் காலமானார்.

54. எழுத்தாளர் உமா மகேஸ்வரி

இயற்பெயர் : மஹி

பிறப்பு : 1971

பிறந்த ஊர் : போடி நாயக்கனூர்

வாழ்க்கை குறிப்பு :

உமா மகேஸ்வரி (மஹி) என்பவர் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பெண் எழுத்தாளர் ஆவார். உமா மகேஸ்வரி 1971ஆம் ஆண்டு போடி நாயக்கனூரில் பிறந்தவர். ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தனது பதின் வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கியவர். 1985இல் கவிதை எழுதத் தொடங்கி, சிறுகதை, நாவல் என இலக்கிய உலகில் தமது தளத்தை உருவாக்கிக்கொண்டவர். தற்பொழுது, கணவர், குழந்தைகளுடன் ஆண்டிபட்டியில் வசிக்கிறார்.

எழுதிய நூல்கள் :

கவிதைத் தொகுதிகள் :

- நட்சத்திரங்களின் நடுவே
- வெறும் பொழுது
- கற்பாவை
- இறுதிப்பூ
- மிட்டாய்க் கடிகாரம்

சிறுகதைத் தொகுதிகள் :

- மரப்பாச்சி
- தொலைகடல்
- அரளி வனம்
- வயலட் ஜன்னல்

நாவல்கள் :

- யாரும் யாருடனும் இல்லை
- அஞ்சாங்கல் காலம்

பரிசுகள்/விருதுகள் :

- கதா தேசிய விருது
- திருப்பூர் தமிழ்ச்சங்க விருது

- இந்தியா டுடேயின் சிகரம் விருது
- ஏலாதி இலக்கியப் பரிசு
- இலக்கிய சிந்தனை இலக்கியப் பரிசு
- கவிஞர் சிற்பி இலக்கியப் பரிசு
- நஞ்சன் கூடு திருமலாம்பாள் விருது

55. எழுத்தாளர் பகீரதி

பிறப்பு : ஜூலை 03, 1975

பெற்றோர் : கனகரத்தினம் - பாக்கியம்

பிறந்த ஊர் : சித்தாண்டி, மட்டக்களப்பு மாவட்டம், இலங்கை

வாழ்க்கை குறிப்பு :

பகீரதி, மோசேஸ் ஜூலை 03, 1975 ஆண்டில் சித்தாண்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் வசித்த கனகரத்தினம் - பாக்கியம் தம்பதியினருக்கு மகளாய் பிறந்தவர். மட்டக்களப்பு, சித்தாண்டியை பிறப்பிடமாகக் கொண்ட பகீரதி 1990 களில் இடம்பெயர்ந்து மட்டக்களப்பில் வாழ்ந்து வருகிறார். இவர் தனது ஆரம்பக் கல்வியை சித்தாண்டி இராமகிருஷ்ணன் தமிழ் கலவன் பாடச் சாலையிலும், இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்வியினை மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் தேசிய கல்லூரியிலும் கற்றார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலும் மானிடவியலும் துறையில் விசேட பட்டப்படிப்பை மேற்கொண்டு இரண்டாம் தர மேற்பிரிவில் சித்தியடைந்து, திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி பட்டயக்கல்வியை பூர்த்தி செய்து, அதன் பின்னர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணியை பூர்த்தி செய்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி போதனை திறன் விருத்தி கற்கையை மேற்கொண்டு சித்தியடைந்துள்ளார்.

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீட உறுப்பினர், பீடத்தின் ஊழியர் மதிப்பீட்டு குழு உறுப்பினர், பல்கலைக்கழக ஊழியர், அபிவிருத்தி நிலையத்தின் இணைப்பாளர், பல்கலைக்கழக பாலின சமத்துவத்திற்கான கல்விப்பிரதிநிதி, பீடத்தின் கல்வித் தர உத்தரவாத செயற்குழு உறுப்பினர் என பல்கலைக்கழகத்தின் பல மட்டங்களிலும் தனது பங்களிப்பை வழங்கி வருவதோடு, சமூகவியல்துறை இணைப்பாளர், பீடத்தின் மாணவ ஆலோசகர் என்ற பதவி நிலைகளிலும் பணியாற்றியுள்ளார்.

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் சமூகவியல் முதுநிலை விரிவுரையாளராக பணியாற்றி வரும் இவர் சமூக ஆய்வாளர், எழுத்தாளர், வளவாளர், ஆலோசகர் போன்ற அடையாளங்களையும் பெற்றுள்ளார். இந்தியா, மலேசியா போன்ற நாடுகளின் பல்கலைக்கழக மட்டத்திலான ஆய்வு மாநாடுகளில் வெளியிடப்படும் ஆய்வேடுகளில் பல ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ள இவர் சமூகவியலின் பன்முகப் பார்வையிலான பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். பல்வேறுபட்ட கருத்தரங்குகள், பேருரைகளுக்கான செயற்குழு உறுப்பினராகவும், பல்கலைக்கழக ஆராய்ச்சி மாநாடுகளின் நடுவராகவும் செயற்பட்டுள்ளார்.

விருதுகள் :

- இவரது பிரதியாக்கத்தில் இலங்கை தேசிய தொலைக்காட்சியினரால் தயாரிக்கப்பட்ட வீதியும் வீடும் என்ற நிகழ்ச்சிக்காண தேசிய விருது 2007 ஆம் ஆண்டு கிடைத்தது.

- இவரால் கதை, கதை வசனம் எழுதப்பட்டு இலங்கை தேசிய தொலைக்காட்சியினரால் தயாரிக்கப்பட்ட புதுமைப்பெண் என்ற தொலைக்காட்சி நாடகத்திற்கு 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த தொலைக்காட்சி நாடகம் என்ற விருது கிடைக்கப் பெற்றுள்ளது.
- கத்தில் இடம்பெற்ற ஆறாவது சர்வதேச ஆய்வரங்கில் இவரால் சமர்ப்பிக்கப்பட்ட சமூக ஆய்வுக்கு சிறந்த ஆய்வு வழங்குனர் விருது வழங்கப்பட்டது.

56. எழுத்தாளர் பெருஞ்சித்திரனார்

இயற்பெயர் : இராசமாணிக்கம்

புனைபெயர் : அருணமணி

பிறப்பு : 10-03-1933

பிறந்த ஊர் : சமுத்திரம், சேலம்

பெற்றோர் : துரைசாமியார் - குஞ்சம்மாள்

இறப்பு : 11-06-1995

வாழ்க்கை குறிப்பு :

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பல்துறை அறிஞர்களில் முதன்மையான ஒருவர் ஆவார். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், மொழிஞாயிறு பாவாணர் ஆகியோரின் கொள்கை கற்றவர்களிடமும், மற்றவர்களிடமும் பரவப் பெருங்காரணமாக விளங்கியவர். தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரன் தமிழகத்தில் முதன்முறையாக வந்த காலத்தில் அவரையும் அவரது தோழர்களையும் அரணாக காத்து அவர்களை வளர்தெடுத்தவரும் இவர்தான். தமிழரசன் போன்ற தமிழ்தேசிய

தலைவர்களுக்கு ஆதி காரணமாய் விளங்கியவரும் இவரே. 20 முறை சிறை சென்றும், இந்தி எதிர்ப்பு போராட்டம் முதல் தமிழீழ போராட்டம் வரை இவரது செயல்பாடுகள் தமிழர்கள் நடுவில் வியந்து போற்றபடுகிறது. தமிழ்தேசிய தந்தையாக இன்று தமிழர்களால் போற்றப்படுகிறார்.

இளமைப்பருவம் :

பாவலரேறு எனவும், பெருஞ்சித்திரனார் எனவும் தமிழ் உணர்வாளர்களால் போற்றி மதிக்கப்படும் பெருஞ்சித்திரனார் 10-03-1933 இல் பிறந்தவர். பெருஞ்சித்திரனார் தம் தந்தையார் பெயரின் முன்னொட்டை இணைத்து துரை-மாணிக்கம் எனத் தொடக்க காலத்தில் வைத்துக் கொண்டார்.

பெருஞ்சித்திரனாரின் தொடக்கக் கல்வி சேலத்திலும் ஆத்தூரிலும் அமைந்தது. இவருக்கு உயர்நிலைப்பள்ளியில் சேலம் நடேசனாரும், தமிழ் மறவர் பொன்னம்பலனாரும் ஆசிரியர்களாக விளங்கித் தமிழறிவும் தமிழ் உணர்வும் புகட்டினர்.

தமிழ் ஈடுபாடு :

பெருஞ்சித்திரனார் பள்ளியில் பயிலும் காலத்தில் தமிழ் ஈடுபாட்டுடன் கற்றவர். குழந்தை என்னும் பெயரில் கையெழுத்து ஏட்டைத் தொடங்கி மாணவர் பருவத்தில் நடத்தியவர். பின்பு அருணமணி என்னும் புனைபெயரில் மலர்க்காடு என்னும் கையெழுத்து ஏட்டினை நடத்தினார். மல்லிகை, பூக்காரி என்னும் பாவியங்களைப் பள்ளிப்பருவத்தில் இயற்றிய பெருமைக்குரியவர்.

பெருஞ்சித்திரனார் அவர்களின் குடும்பம் தமிழின வரலாற்றில் தவிர்க்க முடியாத குடும்பமாக திகழ்கிறது. முதுபெரும்புலவர் (இறைக்குருவனார், தமிழ்மொழியின் தொன்மையை ஆய்ந்து உலகுக்குணர்த்திய சொல்லாய்வறிஞர்) ப.அருளியார் (தமிழ்வழிப் பள்ளியை முதன் முதலில் உருவாக்கிய திருவாட்டி)

இறை.பொற்கொடி (பகுத்தறிவுக் குமுகாயம் ஆக்கம் செய்யும் பெண்ணியப் போராளி தழல்).தேன்மொழி, பேராசிரியர்.மா.பூங்குன்றன், முனைவர்.கி.குணத்தொகையன், அறிஞர்.ஆறிறைவன், தமிழ்த் தேசியப்போராளி மா.பொழிலன், வழக்கறிஞர். அங்கயற்கண்ணி, வரலாற்றறிஞர் தெள்ளியன் உள்ளிட்ட குடும்பமே இனத்தையும் மொழியையும் வழிநடத்துகின்றது. தென்மொழி, தழல், தமிழ்நிலம், மாணவர்களம் என்ற இதழ்களும் பல்வேறு இயக்கங்கள், கல்வி அறக்கட்டளைகளும் இக்குடும்பத்தால் நடைபோடுகிறது.

பெருஞ்சித்திரனார் தன் மொழிவழி முன்னோடி இயக்கமான தனித்தமிழ் இயக்கத்தவர்களிடமிருந்து தீவிரமாக வேறுபடும், முரண்படும் புள்ளி அவரின் அரசியலாகும். தமிழ்நாடு இந்திய அரச கட்டமைப்பிலிருந்து விடுபட்டு தனித்தமிழ்நாடு என்பதாக தனித்தேசமாக உருவாகவேண்டும் என்பது பெருஞ்சித்திரனாரின் அரசியல் நிலைப்பாடாகும். அவர் தனது தென்மொழி இதழின் முதல் இதழிலிருந்து இதனை வலியுறுத்திவந்தார்.

எழுதிய நூல்கள் :

- நூறாசிரியம் பள்ளிப் பறவைகள்
- நெருப்பாற்றில் எதிர் நீச்சல்
- கனிச்சாறு
- கொய்யாக் கனி
- தமிழீழம்
- இளமை உணர்வுகள்
- இளமை விடியல்
- உலகியல் நூறு

- எண் சுவை எண்பது
- ஐயை (பாவியம்)
- ஓ! ஓ! தமிழர்களே
- கற்பனை ஊற்றுக் கட்டுரைகள்
- கழுதை அழுத கதை

57. எழுத்தாளர் ஜெயகாந்தன்

பிறப்பு : 24-04-1934

பிறந்த ஊர் : மஞ்சக்குப்பம், கடலூர்

பெற்றோர் : தண்டபாணி - மகாலெட்சுமி அம்மாள்

இறப்பு : 08-04-2015

வாழ்க்கை குறிப்பு:

ஜெயகாந்தன் அவர்கள், மிகுந்த ஆற்றலும், ஆளுமையும், வேகமும், உயர்வும், தனித்துவமும் கொண்ட தலைச்சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவராவார். அவர் ஓரளவே படித்திருந்தாலும், தமிழ் இலக்கியத்தைக் கரைத்துக் குடித்து, தமிழ் ரசிகர்களின் நெஞ்சங்களைத் தன் எழுத்துக்களால் கொள்ளைக் கொண்டவர். ஒரு எழுத்தாளராக மட்டுமல்லாமல், கட்டுரையாளர், பத்திரிக்கையாளர், துண்டு வெளியீடுகளை எழுதுபவர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் விமர்சகர் எனப் பல்வேறு முகங்கள் கொண்டு, தமிழ் இலக்கியத்திற்கு அருட்தொண்டாற்றியவர் ஜெயகாந்தன் என்று சொன்னால் அது மிகையாகாது.

எழுதிய நூல்கள் :

- கைவிலங்கு
- யாருக்காக அழுதான்?
- பிரம்ம உபதேசம்
- பிரியாலயம்
- கருணையினால் அல்ல
- பாரீசுக்குப் போ!
- கோகிலா என்ன செய்துவிட்டாள்?
- சில நேரங்களில் சில மனிதர்கள்
- ஒரு பிடி சோறு
- இனிப்பும் கரிப்பும்
- தேவன் வருவாரா
- மாலை மயக்கம்

விருதுகள்:

இலக்கியத்திற்காக இந்திய அரசு வழங்கும் மிக உயர்ந்த விருதான ஞான பீட விருதைப் பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர். மேலும், இந்திய அரசின் மிக உயரிய விருதான பத்ம பூஷன் விருதை தமிழ் இலக்கியத்திற்காக முதல்முறைப் பெற்றார். சாகித்ய அகாடமி விருது, ரஷ்ய விருது என்று பல்வேறு விருதுகளுக்குத் தகுதியானவர் ஜெயகாந்தன் அவர்கள்.

58. எழுத்தாளர் அகிலன் வரலாறு

இயற்பெயர் : பி. வி. அகிலாண்டம்

பிறப்பு : 27-06-1922

பிறந்த ஊர் : பெருங்காளூர், புதுக்கோட்டை

இறப்பு : 31-01-1988

பெற்றோர் : வைத்தியலிங்கம் பிள்ளை - அமிர்தம்மாள்

வாழ்க்கை குறிப்பு :

அகிலன் என்று அறியப்படும் பி.வி.அகிலாண்டம் புதின ஆசிரியராக, சிறுகதையாளராக, நாடகாசிரியராக, சிறுவர் நூலாசிரியாராக, மொழிப்பெயர்ப்பாளராக, கட்டுரையாளராக சிறப்புப் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார்.

அகிலாண்டத்தின் புனைபெயர் அகிலன் ஆகும். இவர் 1922 ஆம் ஆண்டு சூன் மாதம் 27 ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பெருங்காளூரில் பிறந்தார். பெருங்காளூர் என்ற இக்கிராமத்திலேயே அகிலன் தன்னுடைய இளமைப்பருவத்தைக் கழித்தார். அவரது தந்தை வைத்தியலிங்கம் பிள்ளை ஒரு கணக்கு அலுவலர் ஆவார். தன்னுடைய ஒரே மகன் அகிலன் மீது அவர் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார். ஆனால் எதிர்பாராவிதமாக அகிலன் தன்னுடைய சிறு வயதிலேயே தந்தையை இழக்க நேர்ந்தது. ஆனால் அவரது தாயார் அமிர்தம்மாள் ஓர் அன்பான மனிதராக இருந்தார், ஆக்கப்பூர்வமான ஒரு படைப்பாளி என்ற முறையில், தன் மகனை ஒரு எழுத்தாளராக அவர் வடிவமைத்தார். பள்ளி நாட்களில் அகிலன் காந்திய தத்துவத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டார், சுதந்திரப் போராட்டத்தில் களமிறங்க வேண்டும் என்பதற்காக புதுக்கோட்டையில் தன்னுடைய கல்லூரிப் படிப்பை தியாகம் செய்தார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் அவர் இரயில்வே அஞ்சல் சேவை பிரிவில் பணியில் சேர்ந்தார், அதன் பிறகு அனைத்திந்திய வானொலி நிலையத்தில் இணைந்து முழுநேர எழுத்தாளராக எழுத்துப் பணியில் ஈடுபட்டார். இவர் எழுதிய கதைகள் பெரும்பாலும் சிறிய பத்திரிகைகளில் தோன்ற தொடங்கின.

விருதுகள்:

- அகிலன் எழுதிய சித்திரப்பாவை என்ற நாவல் 1975 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க ஞான பீட விருதை வென்றது. இந்நாவல் அனைத்து இந்திய மொழிகளிலும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.

- இவர் எழுதிய வேங்கையின் மைந்தன் என்ற வரலாற்று நாவலுக்கு இந்திய அரசாங்கம் வழங்கும் தமிழுக்கான சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.

- எங்கே போகிறோம் என்ற தனித்துவமான சமூக அரசியல் நாவல் 1975 ஆம் ஆண்டில் இவருக்கு ராசா சர் அண்ணாமலை விருதைப் பெற்றுத் தந்தது.

- கண்ணான கண்ணன் என்ற இவர் எழுதிய குழந்தை நூலுக்கு தமிழக அரசின் கல்வித்துறை சிறப்புப்பரிசு வழங்கி சிறப்பித்தது.

- அகிலன் 45 தலைப்புகளில் பல்வேறு படைப்புகளை உருவாக்கியுள்ளார். இவற்றில் பெரும்பாலானவை இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளன.

- இவற்றைத் தவிர இவருடைய படைப்புகள் ஆங்கிலம், ஜெர்மனி, சீனா, மலாய் மற்றும் செக்கோசுலவேகிய மொழிகளிலும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.

நிகழ்காலப் புதினங்கள் :

- அவளுக்கு
- இன்ப நினைவு
- எங்கே போகிறோம்?
- கொம்புத்தேன்
- கொள்ளைக்காரன்
- சித்திரப்பாவை
- சிநேகிதி
- துணைவி
- நெஞ்சின் அலைகள்
- பால்மரக்காட்டினிலே
- பாவை விளக்கு (இது திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டது.)
- புதுவெள்ளம்
- பெண்
- பொன்மலர்
- வாழ்வெங்கே (இது திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டது.)
- வானமா பூமியா

வரலாற்றுப் புதினங்கள் :

- வேங்கையின் மைந்தன் (இராசேந்திர சோழனின் கதை)

- வெற்றித்திருநகர் (விஜயநகரப் பேரரசை மையமாகக் கொண்ட வரலாற்று நாவல்)

சுயசரிதை :

- எழுத்தும் வாழ்க்கையும்

மொழிபெயர்ப்பு நூல்கள் :

- தாகம் - ஆஸ்கார் வைல்ட்

சிறுகதை தொகுதிகள் :

- சத்ய ஆவேசம்
- ஊர்வலம்
- எரிமலை
- பசியும் ருசியும்
- வேலியும் பயிரும்
- குழந்தை சிரித்தது
- சக்திவேல்
- நிலவினிலே
- ஆண் பெண்
- மின்னுவதெல்லாம்
- வழி பிறந்தது
- சகோதரர் அன்றோ

- ஒரு வெள்ளை சோறு
- விடுதலை
- நெல்லூர் அரசி
- செங்கரும்பு
- அகிலன் சிறுகதை - அனைத்துக் கதைகளும் அடங்கிய தொகுப்பு

சிறுவர் நூல்கள் :

- தங்க நகரம்
- கண்ணான கண்ணன்
- நல்ல பையன்

பயண நூல்கள் :

- நான்கண்ட ரஷ்யா
- சோவியத் நாட்டில்
- மலேசியா சிங்கப்பூரில் அகிலன்

கட்டுரை தொகுப்புகள் :

- நாடு நாம் தலைவர்கள் (கட்டுரைகள், 2000)
- வெற்றியின் ரகசியங்கள்

நாடகம் :

- வாழ்வில் இன்பம்

திரைக்கதை வசனம்:

- காசுமரம்

ஒலித்தகடு:

- நாடும் நமது பணியும் - அகிலன் உரை

59. எழுத்தாளர் சி.எஸ்.செல்லப்பா

பிறப்பு : 29-09-1912

பிறந்த ஊர் : சின்னமனூர், தேனி மாவட்டம்

இறப்பு: 18-12-1998

வாழ்க்கை குறிப்பு :

சி.சு.செல்லப்பா, ஒரு எழுத்தாளர் மற்றும் இலக்கிய விமர்சகர். எழுத்து என்ற பத்திரிக்கையினை தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் செல்லப்பா. பல நல்ல எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் தன் எழுத்து பத்திரிக்கையின் மூலம் ஊக்குவித்தவர் செல்லப்பா. தமிழின் சிறந்த நாவல்களாக கருதப்படும் வாடிவாசல், சுதந்திர தாகம் போன்றவற்றை எழுதியவர் செல்லப்பா. காந்தியக் கொள்கைகளில் மிகுந்த பற்றும் ஈடுபாடும் கொண்டவர்.

இவர் சி.சு.செல்லப்பா, தேனி மாவட்டம் சின்னமனூரில் 1912ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் தேதி பிறந்தார். தன் தாய்

மாமாவின் ஊரான வத்தலக்குண்டில் வளர்ந்தார். மதுரைக் கல்லூரியில் பி.ஏ.படித்தார். அப்போதே மகாத்மா காந்தியின் கொள்கையில் ஏற்பட்ட ஈடுபாட்டால் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். சிறுகதை எழுத்தாளராக இருந்த சி.சு.செல்லப்பா விமர்சனக் கலையில் ஈடுபடலானார். விமர்சனத்துக்காகத் தனி இதழ் தொடங்க எண்ணினார். பத்திரிகைகளில் பணிபுரிந்த அனுபவத்தால் தன் கொள்கைகளை வலியுறுத்த எழுத்து என்ற இதழைத் தொடங்கினார்.

பலவித இன்னல்களுக்கிடையே 1970 ஆம் ஆண்டு வரை மொத்தம் 119 இதழ்களை அவர் வெளியிட்டார். ஆனால், 112 இதழ்களை மிகச் சிரமப்பட்டு வெளிக்கொண்டு வந்த எழுத்து காலாண்டு இதழாக மாற்றப்பட்டது. 119 இதழுடன் எழுத்து நிறுத்தப்பட்டது. சுதந்திரச் சங்கு இதழில் எழுதத் தொடங்கிய செல்லப்பாவுக்கு மணிக்கொடி இதழ் கை கொடுத்தது. சரசாவின் பொம்மை என்னும் சிறுகதை சிறந்த எழுத்தாளர் என்ற தகுதியை அளித்தது.

எழுதிய நூல்கள் :

- வாடி வாசல்
- ஜீவனாம்சம்
- சுதந்திர தாகம்
- எழுத்து இதழ்

விருதுகள் :

இவரது சுதந்திர தாகம் புதினத்திற்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.

60. எழுத்தாளர் தொ. மு. சிதம்பர ரகுநாதன்

பிறப்பு : 20-10-1923

இறப்பு : 31-12-2001

பிறந்த ஊர் : திருநெல்வேலி

வாழ்க்கை குறிப்பு:

தொ. மு. சிதம்பர ரகுநாதன், திருநெல்வேலியில் அக்டோபர் 20, 1923ல் பிறந்தார். இவர் சிறுகதை, நாவல், விமரிசனம், ஆய்வு, மொழிபெயர்ப்பு, நாடகம், வாழ்க்கை வரலாறு எனப் பலதுறைகளிலும் எழுதியவர். பத்திரிகை ஆசிரியராக இருந்தவர். ரகுநாதனின் எழுத்துக்கள், ஆய்வுகள், விமரிசனங்கள் யாவும் தமிழில் மார்க்சிய சிந்தனைகளை வளர்த்தது.

இவரது முதல் சிறுகதை 1941ல் பிரசண்ட விகடனில் வெளிவந்தது. இந்திய சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக 1942ல் சிறைக்குச் சென்றார். 1944ல் தினமணியில் உதவி ஆசிரியராகவும் பின்பு 1946ல் முல்லை என்ற இலக்கியப் பத்திரிக்கையிலும் பணியாற்றினார். இவரது முதல் புதினமான புயல் 1945ல் வெளியானது.

இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கது 1948ல் வெளியான இலக்கிய விமர்சனம். அதைத் தொடர்ந்து 1951ல் பஞ்சும் பசியும் என்ற புதினத்தை எழுதினார். இப்புதினம் செக் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு 50000 பிரதிகள் விற்பனையானது. இவரது இலக்கிய விமர்சன நூலான பாரதி - காலமும் கருத்தும் 1983ல் சாகித்ய அகாதெமி விருது பெற்றது.

சிறப்புகள் :

சோசலிச எதார்த்தவாத நாவல் இலக்கியப் போக்கைத் தன் பஞ்சும் பசியும் நாவல் மூலம் தொடங்கி வைத்தார் . தமிழ் இலக்கிய ஆய்வை இலக்கண ஆய்வு நிலையிலிருந்தும், ரசனை ஆய்வு நிலையிலிருந்தும் சமூகநிலை ஆய்வு என்னும் ஆழமான தளத்துக்குக் கொண்டு சென்று, ஆய்வின் எல்லையை விசாலப்படுத்தினார் .

பாரதியும் ஷெல்லியும், கங்கையும் காவிரியும் ஆகிய நூல்களின் மூலம் ஒப்பிலக்கியத் தடத்தைத் தமிழில் விரிவுபடுத்தியவர். இளங்கோவடிகள் யார்? என்னும் நூலின் வழி, தமிழகத்தில் சமய உருவாக்கங்களைப் போல நடந்த புதுப்புதுச் சாதி உருவாக்கங் களைத் துலக்கி, சாதி இறுக்கங்களின் பொய்மையைப் பளிச்சென வெளிப்படுத்தியவர். எழுத்தாளர், விமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளரான சிதம்பர ரகுநாதன் அவர்கள், 31 டிசம்பர் 2001ல் காலமானார்.

விருதுகள் :

- சாகித்ய அகாதமி விருது
- சோவியத் லேண்ட் நேரு விருது (தாய் மற்றும் லெனினின் கவிதாஞ்சலிக்காக)
- தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை பரிசு
- பாரதி விருது

61. எழுத்தாளர் வண்ணதாசன்

இயற்பெயர் : சி.கல்யாணசுந்தரம்

புனைப்பெயர் : வண்ணதாசன், கல்யாண்ஜி

பிறப்பு : கி.பி.1946

பிறந்த ஊர் : திருநெல்வேலி

பெற்றோர் : தி. க. சிவசங்கரன்

வாழ்க்கை குறிப்பு:

வண்ணதாசன் என்ற புனைப்பெயரில் சிறுகதைகளும், கல்யாண்ஜி என்ற புனைப்பெயரில் கவிதைகளும் எழுதுபவரின் இயற்பெயர், சி.கல்யாணசுந்தரம் என்பதாகும். இவர் தமிழ்நாடு, திருநெல்வேலியில் பிறந்தவர். இவரது தந்தை இலக்கியவாதி தி.க. சிவசங்கரன் ஆவார். இவர் தந்தையும் சாகித்ய அகாதெமி விருது பெற்றவர். நவீன தமிழ்ச் சிறுகதை உலகில் மிகுந்த கவனம் பெற்ற எழுத்தாளரான வண்ணதாசன், தீபம் இதழில் எழுதத் துவங்கியவர். 1962 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தொடர்ந்து சிறுகதைகள் எழுதி வருகிறார். இவரது ஒரு சிறு இசை என்ற சிறுகதை நூலுக்காக இந்திய அரசின் 2016 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதமி விருது கிடைத்தது.

எழுதிய நூல்கள் :

- சின்ன விஷயங்களின் மனிதன்
- மனுஷா மனுஷா
- ஒரு சிறு இசை
- தமிழ் இன்பம்

- நொடி நேர அரைவட்டம்
- பெயர் தெரியாமல் ஒரு பறவை

விருதுகள் :

- இவரது சிறுகதைகள் பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன. கலைமாமணி, சாகித்ய அகாதமி விருது, இலக்கியச் சிந்தனை உள்ளிட்ட பல முக்கிய விருதுகளைப் பெற்றிருக்கிறார் வண்ணதாசன். விஷ்ணுபுரம் விருதும் இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

- சூன் 10, 2018 இல் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் எனும் அமைப்பு தமிழ் இலக்கியத்திற்கான வாழ்நாள் சாதனையாளர் விருதினை இவருக்கு வழங்கியது.

62. எழுத்தாளர் மீ. ப. சோமசுந்தரம்

புனைப்பெயர் : மீ. ப. சோமு

பிறப்பு : 17-06-1921

பிறந்த ஊர் : மீனாட்சிபுரம், திருநெல்வேலி

இறப்பு : 15-01-1999

வாழ்க்கை குறிப்பு :

மீ. ப. சோமசுந்தரம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனாட்சிபுரம் கிராமத்தில் ஜூன் 17, 1921ஆம் ஆண்டு பிறந்தவர். மீ. ப. சோமசுந்தரம் ஒரு தமிழ் எழுத்தாளர். மீ. ப. சோமு என்பது அவரது புனைப்பெயர். அவர் பத்திரிக்கை, கவிதை, புதினம், சிறுகதை, கட்டுரை, இசை போன்ற பல துறைகளிலும் சிறந்து

விளங்கியவர். 1962ல் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.

சென்னை பல்கலைக்கழகத்தில் கீழ்த்திசையியல் படித்து வித்வான் பட்டம் பெற்றவர். இவர் புதுமைப்பித்தனின் நண்பர். 1938-ல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்றார். அவர் 1946ல் இளவேனில் என்ற அவரது கவிதைத் தொகுப்பு வெளியானது. அக்கவிதைத் தொகுப்பு மாநில அரசின் விருது பெற்றது. இவருக்கு இசைபேரறிஞர் விருதும் கிடைத்தது. நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வானொலியில் பணியாற்றி 1981 இல் ஓய்வு பெற்றார். அங்கு தலைமைத் தயாரிப்பாளராகவும், பண் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றினார். அவரது பயணக் கட்டுரை அக்கரைச்சீமையில் ஆறுமாதங்கள் 1962ன் தமிழுக்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றது. அவர் எண்ணற்ற கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் மற்றும் இசை ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவர் கடல் கண்ட கனவு, நந்தவனம், வண்ணில பொன்னரசி, எந்தையும் தாயும், கட்டுரைகள், கார்த்திகேயனி, ஐந்தருவி, பிள்ளையார் சாட்சி ஆகிய புதினங்களை எழுதியுள்ளார்.

தமிழ்க்கலைக் களஞ்சியத்திலும் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. மீ. ப. சோமசுந்தரம், 1999-ல் மரணமடைந்தார்.

எழுதிய நூல்கள் :

- கடல் கண்ட கனவு
- நந்தவனம்
- வண்ணில பொன்னரசி
- எந்தையும் தாயும்

- கட்டுரைகள்
- கார்த்திகேயனி
- ஐந்தருவி
- பிள்ளையார் சாட்சி

விருதுகள் :

- தமிழக அரசு விருது
- இசைப்பேரறிஞர் விருது
- சாகித்ய அகாதெமி விருது

63. எழுத்தாளர் சுரதா

இயற்பெயர் : இராசகோபாலன்

பிறப்பு : 23-11-1921

பிறந்த ஊர் : பழையனூர், தஞ்சை மாவட்டம்

பெற்றோர் : திருவேங்கடம் - சண்பகம் அம்மையார்

இறப்பு : 19-06-2006

வாழ்க்கை குறிப்பு :

சுரதா தமிழகக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். கவிஞர் பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால் பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்தினம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்தினதாசன் என்று மாற்றிக்கொண்டார். தன் மாற்றுப்பெயரின் சுருக்கமாக சுரதா என்னும் பெயரில் பல

மரபுக்கவிதைத் தொகுப்புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதி வந்த இவர் உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை உவமைக் கவிஞர் என்று சிறப்பித்துக் கூறுவர்.

சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். தஞ்சை மாவட்டம் பழையனூர் (சிக்கல்) என்னும் ஊரில் பிறந்தவர். பெற்றோர் திருவேங்கடம்-சண்பகம் அம்மையார் ஆவர். பள்ளியிறுதி வகுப்புவரை பயின்றார். சீர்காழி அருணாசல தேசிகர் என்பவரிடம் தமிழ் இலக்கணங்களைக் கற்றார். சுரதாவின் சொல்லடா என்னும் தலைப்பில் அமைந்த கவிதையைப் புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பொன்னி என்னும் இதழ் 1947 ஏப்பிரல் திங்கள் இதழில் வெளியிட்டு இவரைப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக அறிமுகம் செய்தது.

சுரதாவின் கலையுணர்வினைக் கண்ட கு.ச.கிருட்டிணமூர்த்தி என்பவர் இவரைத் திரையுலகத்திற்கு அறிமுகப்படுத்தினார். 1944 ஆம் ஆண்டு மங்கையர்க்கரசி என்னும் திரைப்படத்திற்கு முதன்முதல் உரையாடல் எழுதினார். மிகக் குறைந்த அளவுக்கான பாடல்களையே அவர் எழுதியுள்ளார். சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் அவரது இரண்டு பாடல்கள், அமுதும் தேனும் எதற்கு, நீ அருகினில் இருக்கையிலே எனக்கு, மற்றும் ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா ஆகியவை. 100 க்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார்.

சுரதாவின் முதல் நூல் சாவின் முத்தம். இதனை வி.ஆர்.எம்.செட்டியார் என்பவர் 1946 மார்ச் மாதம் வெளியிட்டார். 1956 இல் பட்டத்தரசி என்ற சிறு காவிய நூலை வெளியிட்டார். 1954 இல் கலைஞர் கருணாநிதியின் முரசொலி இதழில் தொடர்ந்து கவிதைகள் எழுதி வந்தார். 1969 இல் தேன்மழை என்ற சுரதாவின் கவிதை நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது. 1972 இல் தமிழக அரசு சுரதாவுக்குக் கலைமாமணி என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது.

1978 இல் ம.கோ.இரா. தலைமையில் அமைந்த அரசு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கிச் சிறப்பித்தது. சுரதாவின் தேன்மழை நூலுக்குத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ரூபா ஒரு இலட்சம் இராசராசன் விருது வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பு பெற்ற சுரதா அவர்கள், தன்னுடைய 84ம் வயதில் 19.06.2006 அன்று சென்னையில் உடல் நலக்குறைவால் காலமானார்.

எழுதிய நூல்கள் :

- வார்த்தை வாசல்
- சாவின் முத்தம்
- தேன்மழை
- துறைமுகம்
- சிரிப்பின் நிழல்
- சுவரும் சுண்ணாம்பும்

விருதுகள் :

- இராசராசன் விருது
- பாவேந்தர் பாரதிதாசன் விருது
- கலைமாமணி விருது

64. எழுத்தாளர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்

பிறப்பு : 08-01-1901

பிறந்த ஊர் : சிந்தாரிப்பேட்டை, சென்னை

பெற்றோர் : பொன்னுசாமி - கிராமணியார்

இறப்பு : 27-08-1980

வாழ்க்கை குறிப்பு :

தெ. பொ. மீனாட்சிசுந்தரம், தமிழ்நாடு, சென்னை, சிந்தாரிப்பேட்டையில் 1901-ஆம் ஆண்டு ஜனவரி 8-ஆம் நாள் பொன்னுசாமி கிராமணியார் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். அவருடைய தந்தைக்குத் தமிழ் மீதும் தமிழ் அறிஞர்கள் மீதும் இருந்த பற்றினால், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பெயரை மகனுக்கு இட்டார். பன்மொழிப்புலவர் என்று அழைக்கப்பட்ட தெ. பொ. மீனாட்சிசுந்தரம், 20-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களுள் ஒருவர். இவர் சமசுகிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற பல மொழிகளை அறிந்தவராய் இருந்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், ஒப்பிலக்கியம், மொழியியல் குறித்த பல கட்டுரைகளையும், நூல்களையும், திறனாய்வுகளையும் எழுதியுள்ளார்.

ஆரம்பத்தில் ஒரு வழக்கறிஞராகவும், சென்னை மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவும் பணியாற்றிய இவர், பிறகு மொழியியலில் ஆர்வம் கொண்டு பட்டங்கள் பெற்று, பல கல்லூரிகளில் பேராசிரியராகவும், பின்னர் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் 1966 முதல் 1971 வரை பணியாற்றினார்.

விருதுகள்:

- தமிழக அரசின் கலைமாமணி விருதையும், இந்திய அரசின் பத்மபூசன் விருதையும் பெற்றவர்.